
விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

விஷானி நகை மாளிகை
மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு
இல. 187, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
0212219510 (C/1675)



முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 21 செவ்வாய்க்கிழமை (06.11.2012) பக்கங்கள் 20 ஓசை – 037



சிக்காது 'பனங்காட்டு நரி' (06)



நெல்லியடி வசம் கிண்ணம் (09)



மனதில் "ஆழப்பதிந்தவர்" (11)



தொலை பேசியில் முறையிடலாம் (12)



நடுவானில் திருமணம் (18)

# குற்றப்பிரேரணையை எதிர்க்கமாட்டோம்

## நீதிபதிகள் ஒன்றுகூடி முடிவு

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணைக்கு எதிராகவும் எதுவித எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் இறங்கப் போவதில்லை என்று மேல் நீதிமன்ற நீதிபதிகள் ஒன்றுகூடி ஏக மனதாகத் தீர்மானம் எடுத்துள்ளனர்.

பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்கவிற்கு எதிரான குற்றப் பிரேரணைக்கு எதிராக நடவடிக்கை எதனையும் எடுப்பதில்லை என மேல் நீதிமன்ற நீதிபதிகள் நேற்று தீர்மானித்துள்ளனர். குற்றப் பிரேரணை தொடர்பில் நடவடிக்கை எடுப்பதோ அல்லது அறிக்கையோ வெளியிடுவதில்லை என நீதிபதிகள் அறிவித்துள்ளனர்.

பிரதம நீதியரசர் ஷிரானி பண்டார நாயக்க மீதான குற்றப் பிரேரணை தொடர்பில் மேல் நீதிமன்ற நீதிபதிகள் நேற்று திங்கட்கிழமை கூடி ஆராய்ந்த போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

## வெளியேறினார் பெட்ரிக்கா

முன்னணி பத்திரிகைகளில் ஒன்றான சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியை பெட்ரிக்கா ஜேன்ஸ் வெளிநாடொன்றில் புகலிடம் பெற்றுக் கொண்டுள்ளதாகக் கொழும்பு ஆங்கில ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

தமது இரண்டு மகன்மாருடன் ஜேன்ஸ் அண்மையில் புகலிடம் பெற்றுக்கொண்டு நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்ட காரணத்தினால் ஜேன்ஸ் நாட்டைவிட்டு வெளியேறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெட்ரிக்காவிற்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளதாகவும், குற்றச சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் கடவுச் சீட்டை நீதிமன்றம் பெற்றுக்கொள்வதுடன் சிறைத்தண்டனை விதிக்கப்படக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

## பிரதம நீதியரசர் விவகாரம் மீள் பரிசீலனை செய்யுங்கள்


### ஜனாதிபதியிடம் மகாநாயக்கர்கள் கோரிக்கை

பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்கவுக்கு எதிராக சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ள குற்றப்பிரேரணை தொடர்பில் மீண்டும் ஆராய்ந்து பார்க்குமாறு மூன்று பீடங்களைச் சேர்ந்த மகாநாயக்க தேரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இது தொடர்பில் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளனர். திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல மல்வத்த மாநாயக்க, உடுகம புத்தரஜ்ஜித்த அஸ்கிரிய மாநாயக்க, தெளல்தன ஞானஸர அமரபுர மகாநாயக்க மற்றும் நாபான பிரேமஸ்ரீ ராமஞ்ஞ மகா நாயக்க தேரர்களே இந்தக் கடிதத்தில் கையொப்பமிட்டுள்ளனர்.

இதேவேளை, மகாநாயக்க தேரர்களை நேற்று முன்தினம் சந்தித்த ஐக்கிய தேசியக்கட்சி

(19) ஆம் பக்கம் பார்க்க






ஏட்டிக்குப் போட்டியாக வலுவடையும் எதிர்ப்பு அலை

## யாழில் மின்சார உற்பத்தி தனியார் துறைக்கு ஊக்கமளிக்கப்படும்

### அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு





தனியாரினால் உற்பத்தி செய்யப்படும் மின்சக்தியை நாட்டின் மின் தேவையைக் கருதி அரசாங்கம் கொள்வனவு செய்யும் என்று மின்சக்தி எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். ஞானம்ஸ் விடுதியில் யாழ்., கொழும்பு வர்த்தக கைத்தொழில் சம்மேளனத்தினருடனான மின்சக்திப் பயன்பாடு எனும் தொனிப்பொருளிலான கருத்தரங்கில் கலந்து கொண்டு வர்த்தக கைத்தொழில் பிரதிநிதிகள் சார்பில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு பதிலளித்தார்.

அங்கு அமைச்சர் தொடர்ந்து தெரிவிக்கையில். இலங்கையில் பாரம்பரியமற்ற முறையில் தனியார் துறையினர் மின் உற்பத்தி செய்துவருகின்றனர். அவ்வாறு யாழ். மாவட்டத்திலும் இரு நிறுவனங்கள் மின் உற்பத்தியை மேற்கொண்டு வருகின்றன. அவ்வாறான தனியார் மின் உற்பத்தி நிறுவனங்களின் நடவடிக்கைககளை அரசாங்கம்

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா. மனித உரிமை அமர்வு பரிந்துரைகளுக்கு விரைவில் பதில்

### அமைச்சர் சமரசிங்க உறுதி

ஐ.நா். மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் பரிந்துரைகளுக்கு உரிய பதில் வழங்க விருப்பதாக அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் அகில கால மீளாய்வு அமர்வுகளில் இலங்கை தொர்டர்பில் 210 பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(19) ஆம் பக்கம் பார்க்க

## சுகாதாரப் பரிசோதகர் மீது தாக்குதல் டெங்கு ஒழிப்புக்கு இடையூறு

(திருநெல்வேலி)

நல்லூர் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் க.மதனகுமார் மது போதையிலிருந்த நபர் ஒருவரினால் நேற்று தாக்குதலுக்குள்ளானார். வாய் மற்றும் நெஞ்சுப் பகுதியில் தாக்குதல் காரணமாக காயம் மற்றும் நோவினால் அவஸ்தைப்பட்ட இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நேற்றுப பிற்பகல் 1.30 மணியளவில் திருநெல்வேலி பாற்பண்ணை பாரதிபுரம் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

(19) ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பில் கால் பதிக்கிறது பாகிஸ்தான் உளவுத்துறை

(கொழும்பு)

பாகிஸ்தான் உளவுத்துறை தனது செயற்பாடுகளை இலங்கையில் தீவிரப்படுத்தியிருக்கிறது. இந்தியாவை இலக்கு வைத்தே இந்த உளவு அமைப்புத் தனது நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி யிருப்பதாக இந்திய உளவுத்துறை, மத்திய

(19) ஆம் பக்கம் பார்க்க

# படைகளுக்கு எதிரான செயற்பாடு; பயங்கரவாத சந்தேகநபர் விடுதலை

(திருநெல்வேலி)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட ஒருவர் யாழ். மேல்நீதிமன்றத்தினால் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

கிளிநொச்சி, பளை - பெரிய தம்பகாமம் என்னும் இடத்தைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் ரவிக்குமார் (வயது - 34) என்பவர் 20.04.2009 இல் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் முல்லைத்தீவு பொக்கணைப் பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டார்.

இலங்கை இராணுவத்திற்கு எதிராக செயற்பட்டதாக 5 வழக்குகள் இவர் மீது தாக்கல் செய்யப்பட்டன. இவரது வழக்கு யாழ். மேல்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இவருக்கு எதிராக இவர் அளித்த குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் சான்றாக இருந்தது.

கடந்த மாதம் 15 ஆம் திகதி இக்குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மேல்நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டு எதிரிக்கெதிராக வேறு சான்றுகள் உள்ளனவா என்பதை ஆராய்வதற்காக நேற்று வரை வழக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

நேற்று யாழ். மேல்நீதிமன்றத்தில் வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிரிக்கெதிராக வேறு சான்றுகள் இல்லையென அரசு தரப்பால் தெரிவிக்கப்பட்டதையடுத்து எதிரியை 5 குற்றச் சாட்டுக்களிலிருந்தும் நீதிபதி ஜே.விஸ்வநாதன் விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.


எதிரிக்கு மேலும் 2 வழக்குகள் வவுனியா மேல்நீதிமன்றத்தில் உள்ளதால் அவரைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

எதிரியின் சார்பில் சட்டத்தரணிகள் மு.றெமிடிஸ், ரி.கணாதீபன் ஆகியோருக்கும் அரசு தரப்பில் அரச சட்டவாதி நளினி கந்தசாமியும் ஆஜரானார்கள். (137)

# கட்டாக்காலி கால்நடைகள் வவுனியாவில் பிடிப்பு

(வவுனியா)

வவுனியா நகரசபைக்குட்பட்ட பிரதேசத்தில் கால்நடைகளின் நடமாட்டம் அதிகரித்து வருவதன் காரணமாக ஏற்பட்டு வரும் விபத்துக்களால் நகர மத்தியில் அலைந்து திரியும் கால்நடைகளை வவுனியா நகரசபை பிடித்துவருவதாக நகரசபையின் பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில்,

கால்நடைகளால் ஏற்படும் விபத்துக்களுடன் நகர அசுத்தமாகலும் இடம்பெற்று வருகின்றது. இவ்வாறான கால்நடைகள் காலை முழுவதும் நகர மத்தியில் அலைந்து திரிவதுடன் மாலையில் ஏதேனும் வர்த்தக நிலையங்களின் முன்னால் நிற்கின்றது.

இதன் காரணமாக காலையில் வர்த்தகர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இது தொடர்பில் தெரியப்படுத்தியதன் அடிப்படையில் கடந்த சில நாட்களாக பொதுமக்களுக்களுக்கு ஒலி பெருக்கி மூலம் அறிவித்தல்கள் வழங்கப்பட்டுவந்த நிலையிலேயே இன்று முதல் அவற்றைப் பிடிக்கும் திட்டத்தை ஆரம்பித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (160)

# சைவபரிபாலன சபைக்கு இழப்பு

சைவபரிபாலன சபையின் தலைவர் அமரர் சண்முகலிங்கத்தின் பிரிவு மிகுந்த வேதனையைத் தருகிறது என தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் மற்றும் சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் வெளியிட்டுள்ள இதய அஞ்சலியில் தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சைவபரிபாலன சபையின் சொத்துக்களைக் காப்பதற்காக அல்லும் பகலும் உழைத்தவர். சிதம்பரத்திலுள்ள புண்ணிய நாச்சியாரின் மடத்தைப் புனர்நிர்மாணம் செய்து ஈழத்தமிழ் மக்கள் இலவசமாகத் தங்குவதற்குப் பேருதவி புரிந்தவர். சைவத் தமிழ் அறிஞர்களை ஒன்றிணைத்து பல்வேறு சைவ மாநாடுகளை நடத்திய பெருமைக்குரியவர்.

சைவபரிபாலன சபையின் ஆணிவேராக நின்ற இப்பெருந்தகையின் இழப்பு சைவ மக்களுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பென்றால் மிகையாகாது. அன்னாரின் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல ஸ்ரீ துர்க்காதேவியைப் பிரார்த்தித்து இதய அஞ்சலிகளை சமர்ப்பிக்கின்றேன் என்றுள்ளது. (137)

# போக்குவரத்து வைத்திய நிறுவகம் வவுனியாவில் திறப்பு

போக்குவரத்து அமைச்சின் ஊடாக தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகம் நேற்று வவுனியா மாவட்ட செயலகத்தில் போக்குவரத்து அமைச்சர் குமாரவெல்கமவினால் திறந்து வைக்கப்பட்டது.

சாரதி அனுமதிப்பத்திரம் பெறுபவர்களுக்கு மருத்துவ சான்றிதழ் பெறும் முகமாகவே இந்நிறுவகம் திறந்து வைக்கப்பட்டது.

இதுவரை காலமும் சாதாரண நிலையில் இயங்கிவந்த மருத்துவ சான்றிதழ் பெறும் நிலையமே தற்போது நிரந்தர கட்டடத்தில் சகல வசதிகளும் அடங்கலாக திறந்து வைக்கப்பட்டது.

இதன்போது வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பந்து ஹரிச்சந்திர, முன்னாள் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுமதிபால உட்பட போக்குவரத்து அமைச்சின் உயரதிகாரிகள் பலரும் கலந்துகொண்டிருந்தனர். (160)




அகில இலங்கை ரீதியில் மொபிட்டல் 2 ஆவ்து வாடிக்கையாளர் சேவை நிலையம் முல்லைத்தீவில் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. இதில் இளைஞர்களுக்கான நாளைய அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ திறந்துவைத்த பின் உரையாற்றுவதைக் காணலாம். (04)

# இலவச கணினிப் பயிற்சி

(சாவகச்சேரி)

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் பாடசாலைக் கல்வியைப் பூர்த்திசெய்த மாணவர்களுக்கான இலவச கணினிப் பயிற்சி பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவையினால் இம்மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

பேரவையினால் ஏற்கனவே பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு இலவச கணினிப் பயிற்சி புகட்டல்களாக நடத்தப்பட்ட பயிற்சிநெறியைப் பூர்த்திசெய்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (11)

## மாதாந்த உதவிப்பணம்

பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களின் கார்த்திகை மாதத்திற்குரிய கொடுப்பனவு அந்தந்த தபாலகங்களுக்கு பிரதேச செயலகங்களினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 70 வயதுக்கு மேற்பட்டோருக்கான ஆயிரம் ரூபா கொடுப்பனவு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் அனுப்பி வைக்கப்படவில்லை எனவும் பணம் பெறும் புத்தகங்களைக் கொண்டு சென்ற மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதாகக் கவலையுடன் தெரிவிக்கின்றனர். (104)

## ஓய்வூதியம்

(ஆனைக்கோட்டை)

அரசாங்க ஓய்வூதியர்களின் இம்மாத ஓய்வூதியம் எதிர்வரும் 8 ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

இதற்கான வவுச்சர்கள் பிரதேச செயலரினால் உரிய ஓய்வூதியர்களுக்கு தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (104)


# பாராட்டி வாழ்த்துகிறோம்



அச்சுவேலியில் அமைந்துள்ள எமது செபமாலைக் கன்னியர் ஆச்சிரமத்திற்கு நெல்லிக்காய் அரைக்கும், மின்னியல் இயந்திரத்தை அன்பளிப்பாக வழங்கிய மதிப்புக்குரிய **அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா** அவர்களுக்கு எமது நிறுவனம் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் அமைச்சருக்கு எமது வாழ்வு பற்றி தெரியப்படுத்தி இந்த உதவியைப் பெற்றுத்தந்த அச்சுவேலி லாலா நிறுவன உரிமையாளர் திருவாளர் வன்னியசிங்கம அவர்களுக்கும் எமது நன்றிகள்.

(C/2188)

அச்சுவேலி. அருட்சகோதரி எலிசபெத்.


## திருத்தம்

**03.11.2012 சனிக்கிழமை 02 ஆம் பக்கத்தில் பிரசுரமான வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் 2013 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல் நவாலி பொதுச்சந்தைக்குரிய ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த தொகை N.B.T.Vat தவிர என்பது தவறுதலாக 1999235.00 என பிரசுரமாகி விட்டது. அதனை திருத்தி 199235.00 என வாசிக்கவும்.**


## யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## கேள்வி அறிவித்தல்

### வீட்டுடன் அமைந்த காணி

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான மாடி வீட்டுடன் கூடிய காணி விற்பனை செய்யப்படவுள்ளது.

☆ இல.67, மூத்தவிநாயகர் வீதி, நல்லூரில் அமைந்துள்ள வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.

☆ கேள்விப் பத்திரங்களினை சமர்ப்பிக்க விரும்புவோர் தமது **முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம், கேள்வித் தொகை** என்பவற்றினைத் தெளிவாகக் குறிப்பிட்டு தமது கையொப்பத்துடன், இடது பக்க மேல் மூலையில் **"காணி கொள்வனவுக்கான கேள்வி"** எனக் குறிப்பிட்டு மூடிய கடிதவுறையில் தலைவர்/பொதுமுகாமையாளர் யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்கம், இல. 127, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் 19.11.2012 ஆம் திகதிக்கு முன்பதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

☆ காணி கட்டடத்தினை பார்வையிட விரும்புவோர் சங்கத் தொலைபேசி இலக்கத்துடன் (0212222587) அலுவலக நேரத்தில் பொது முகாமையாளருடன் தொடர்புகொண்டு பார்வையிட முடியும்.

☆ கேள்வி விண்ணப்பங்கள் கிடைக்க வேண்டிய இறுதித் திகதி 19.11.2012.

☆ கிடைக்கப்பெற்ற மூடிய கேள்விப் பத்திரங்கள் இயக்குனர் சபைக் கூட்டத்தில் திறக்கப்பட்டு விலை மதிப்பீட்டுக்கமைய ஆராய்ந்து காணி விற்பனை தொடர்பான இறுதித் தீர்மானம் இயக்குனர் சபையால் மேற்கொள்ளப்படும்.

சங்கத்தின் இயக்குனர் சபைத் தீர்மானத்திற்கமைவாக,

**பொது முகாமையாளர்**
**யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்கம்.**

(C/1745)

# சமய தகவல்களை உள்ளடக்கியதாக நாட்காட்டி வெளிவருவது சிறப்பானது

**- அதிபர் பொ.சிவானந்தராஜா -**

(யாழ்நிருபர்)

எமது மண்ணில் வாழ்ந்து மறைந்த சமயப் பெரியார்களை அடுத்த சந்ததிக்கு அறிமுகப் படுத்தும் நல்ல பணியினை நாட்காட்டி வெளியீட்டின் மூலம் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயம் செய்துவருகிறது. கடந்த பத்து வருடங்களாக இந்த ஆலயத்தினால் வெளியிடப்படும் நாட்காட்டி சைவ மக்களுக்குத் தேவையான சகல தகவல்களையும் கொண்டு விளங்குகிறது. என காரைநகர் கலாநிதி அ.தியாகராசா மத்திய மகா வித்தியாலய அதிபர் பொ. சிவானந்தராஜா தெரிவித்தார்.


காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய நாட்காட்டி வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆலய நிர்வாகத்தர் எஸ். சிவஞானம் தலைமையில் மேற்படி ஆலய வசந்த மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்நிகழ்வில் அதிபர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் ஆகிய பஞ்சாங்க உறுப்புக்கள் ஐந்தும் முறையாகக் கணிக்கப்பெற்று இந்த நாட்காட்டியில் இடம் பெற்றுள்ளன. நாட்காட்டி என்றால் ஒரே பார்வையில் திகதி, கிழமை, நட்சத்திரம், திதி, சுபநேரம், இராகுகாலம், விரதம், பண்டிகை, சமய விழாக்கள் ஆலய உற்சவ தினங்கள் என்பவற்றை அறியக் கூடியதாக இருக்கவேண்டும். அந்த வகையில் இந்த நாட்காட்டி அமைந்திருப்பதால் இருபத்தையாயிரத்துக்கு மேற்பட்ட பிரதிகளை விற்பனை செய்யக் கூடியதாக உள்ளது.

வியாபார நோக்கத்திற்காக இந்த ஆலயத்தினர் நாட்காட்டியை வெளியிடுவதில்லை. சமூக நோக்குடன் செயற்படும் இவர்கள் இம்முறை சமய அறிவை மாணவரிடையே வளர்க்கும் நோக்குடன் காரைநகர் பெரியார்கள் ஞாபகார்த்தப் போட்டியும், சைவசமய பாடப் பரீட்சையும் நடத்தி சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்களுக்குப் பெறுமதி மிக்க பரிசில்களை வழங்கியுள்ளார்கள். சைவ வித்தியாவிருத்திச் சங்கம், கோப்பாய் சைவ ஆசிரிய கலாசாலை என்பவற்றை நிறுவுவதற்கு முன்னின்று உழைத்த காரைநகர் அருணாசலம் உபாத்தியாயருக்கும் இந் நாட்காட்டி சிறப்புச் செய்துள்ளமை பாராட்டத்தக்கதாகும் எனவும் குறிப்பிட்டார். (10)

# பொது மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டல்



(யாழ்ப்பாணம்)

அச்செழு கொலனிக் கிராமத்தில் பொதுநோக்கு மண்டபத்திற்கான அடிக்கல்லை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஈ.பி.டி.பி.யின் கோப்பாய் பிரதேச அமைப்பாளரும், வலிகிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான இராமநாதன் ஐங்கரன் நாட்டி வைத்தார்.

கெயார் நிறுவனத்தின் அனுசரணையுடன் பொதுமக்களின் பங்களிப்புடன் இப் பொதுநோக்குமண்டபம் அமைக்கப்படவுள்ளது.

இந் நிகழ்வில் கிராமஅலுவலர் எஸ்.சண்முகவடிவேல், கெயார்குழு பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# எரிந்த கடைக்கான காப்புறுதி இதுவரை வழங்கப்படவில்லை

(கரணவாய்)

நெல்லியடி சந்தைப் பகுதியில் அண்மையில் மின்தாக்கத்தினால் பலசரக்கு கடை எரிந்த நிலையில் கடை உரிமையாளருக்கு இதுவரை காப்புறுதிப் பணம் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கடை உரிமையாளர் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தில் 60 இலட்சம் ரூபாவுக்கு தனது கடைக்கான காப்புறுதியை செலுத்தியுள்ளதாகவும், கடை எரிந்ததை அடுத்து கூட்டுத்தாபன அதிகாரிகள் கொழும்பிலிருந்து வருகை தந்து எரிந்த கடையை மதிப்பீடு செய்து சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் இதுவரை எந்தக் கொடுப்பனவும் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்படவில்லை என்வும், இதனால் நெல்லியடி வர்த்தகர்கள் தாம் காப்புறுதி செய்ததில் பயன் இல்லை என ஆதங்கத்துடன் தெரிவிக்கின்றனர். முன்னர் இப்பகுதியில் ஒரு கடை எரிந்த நிலையில் அக்கடை உரிமையாளருக்கு நெல்லியடி வர்த்தக சங்கம் ஒரு தொகைப் பணத்தை வழங்கிய நிலையில், வர்த்தக சங்கத்தினால் வர்த்தகர்களுக்கு தங்களது கடைக்கு காப்புறுதி செய்யுமாறு அறிவுறுத்தப் பட்டதாகவும், இதனையடுத்து வர்த்தகர்கள் தாம் காப்புறுதி செய்ததாகவும் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் காப்புறுதி செய்யப்பட்ட வர்த்தகருக்கு பணம் வழங்கப்படாமை கவலையளிப்பதாகவும் வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இது தொடர்பில் வர்த்தக சங்கத் தலைவரும், நெல்லியடி வர்த்தகர்களுக்கு இப்படியான நிலை ஏற்படக்கூடாது என மனவருத்தத்துடன் தெரிவித்தார். (18)

# மாணவர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இம்முறை தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் கல்லூரியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலயக் கல்விப்பணிப்பாளர் கு.பிறேமகாந்தன், சிறப்பு விருந்தினர்களாக ஜனசக்தி காப்புறுதி நிறுவனப் பிரதிப் பொது முகாமையாளார்.அன்ரன் ஜோசப், உதவிப்பிராந்திய விற்பனை முகாமையாளர், வசந்தகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சித்தியடைந்த மற்றும் 100 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. இதில் 9 மாணவர்கள் சித்தியடைந்ததுடன் 14 மாணவர்கள் 100 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுக் கொண்டனர்.

# கட்டைவேலி பல.நோ.கூ.சங்கத்தின் செயற்பாடுகள் குறித்து ஆராய்வு

(கரணவாய்)

நெல்லியடி கட்டைவேலி பல.நோ.கூட்டுறவு சங்கத்தின் செயற்பாடுகள் குறித்து அங்கத்தவர்களுடனான கூட்டம் அண்மையில் நெல்லியடி கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெற்றது.

இக்கூட்டம் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் தலைமையில் நடைபெற்றதுடன் சங்கத்தின் செயற்பாடுகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இதன் போது அங்கத்தவர்களிடையே சங்கத்தின் செயற்பாடுகள் குறித்து கருத்து மோதல்கள் ஏற்பட்டு வாக்குவாதத்தில் கூட்டத்தை குழப்பும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டதை அடுத்து கூட்டத்தை நடத்தமுடியாமல் ஆணையாளரினால் கூட்டம் இடை நிறுத்தப் பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நெல்லியடி கட்டைவேலி பல.நோ.கூட்டுறவு சங்கத்தில் பல குறைபாடுகள் இருப்பதாகவும் சங்கத்தினால் விற்கப்படும் பொருட்களின் விலைகள் தனியார் கடைகளில் விற்கப்படும் பொருட்களிலும் கூடுதலான விலைகளில் விற்கப்படுவதாகவும் உறுப்பினர்களிடம் கருத்து வேறுபாடுகள் காணப்படுவதாகவும் பொதுமக்களால் சுட்டிக்காட்டப்படுகிறது என இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (18)



**இலங்கை வங்கியின் சிறிய நடுத்தர வியாபார முயற்சி அலகு அண்மையில் யாழ் வைத்தியசாலை வீதியில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் இலங்கை வங்கி பிரதிப் பொதுமுகாமையாளர் முதியாண்சே நிலையத்தை திறந்து வைப்பதையும், இலங்கை வங்கி வடபிராந்திய பொதுமுகாமையாளர் கே.இ.டி.அமலசிறி உரையாற்றுவதையும் காணலாம். (54)**

# கட்டாக்காலி நாய்களால் போக்குவரத்துக்கு இடையூறு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை புலோலி கிராமத்திலுள்ள தாரையடி வீதியில் திரியும் கட்டாக்காலி நாய்களின் தொல்லையால் அவ் வீதியூடாகச் செல்லும் பயணிகள் அச்சத்துடன் செல்ல வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

குறித்த வீதிப்பகுதியில் அதிகளவான கட்டாக்காலி நாய்கள் திரிவதுடன் வாகனங்களுக்கு குறுக்காகச் செல்லுவதும், சைக்கிளில் செல்வோரை துரத்துவதுமாகக் காணப்படுவதால் பயணிகள் பெரும் சிரமங்களுக்குள்ளவதாகத் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக இவ்வீதிப்பகுதியால் நடந்து சென்ற பெண் ஒருவரை கட்டாக்காலியாகத் திரியும் நாய் கடித்துள்ளதாகவும், தற்போது இவர் மந்திகை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு நாய்களின் தொல்லைகளால் வீதியால் செல்லும் பயணிகள் நாய்க் கடிக்கு உள்ளாவதாகவும், கட்டாக்காலியாகத் திரியும் நாய்களைக் கட்டுப்படுத்த உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (109)

# விண்ணப்பங்கோரல்

(யாழ்ப்பாணம்)

கமநல சேவைகள் வனஜீவராசிகள் அமைச்சினால் கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு இலங்கை தொழில் நுட்ப சேவையில் தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் II ஆம் வகுப்பு 'ஆ' பிரிவிற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

பரீட்சை சிங்களம், ஆங்கிலம், மற்றும் தமிழ் ஆகிய மூன்று மொழிகளில் நடைபெறவுள்ளது. விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம், கமநல அபிவிருத்தித் திணைக்களம், த.பெ.இலக்கம் 537 கொழும்பு 7 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான். - ஜான்மில்டன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## சூழலியலில் புதுப்புது அச்சங்கள்!

சூழலியல் குறித்து எழுதப்படும் புதிய புதிய கட்டுரைகளைப் படிக்கும்போது, மனிதகுலம் தவிர்க்கமுடியாதவாறு ஆபத்துக்களை நோக்கியே செல்வது தெரிந்து எதிர்காலப் பயம் மிகையாகிறது. 'கொலனி கொலாப்ஸ் டிஸ்ஓடர்' (CCD) குறித்து ஒரு கட்டுரையை இணையத்தில் பார்க்கக் கிடைத்தது.

அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் கண்ணுக்கெட்டிய வரை ஒரே பயிரை வளர்க்கும் மோனோ கல்ச்சர் முறை, மிகையான உர உபயோகம், மருந்துகள் எல்லாம் சேர்ந்து மகரந்தச் சேர்க்கைக்கு மிக முக்கியமான காரணியாக இருக்கும் தேனீக்களை கூட்டம் கூட்டமாகக் கொலை செய்கின்றன என்று அதில் சொல்லப்படுகிறது.

அதாவது, மிகப் பெரிய ஏரியாவில் ஒரே ஒரு வகைப் பயிர் தான் என்றால் தேனீக்களுக்கு ஒரே வகை மகரந்தம்தான் கிடைக்கிறது. தங்களுக்குத் தேவையான புரதத்தை அவை மகரந்தத்திலிருந்துதான் பெறுகின்றன. பல வகைப்பட்ட தாவரங்களின் மகரந்தத்தைச் சாப்பிட்ட தேனீக்கள் ஆரோக்கியமாக வளர்கின்றன என்பதையும், ஒரே வகை உணவை வாழ்நாள் முழுவதும் சாப்பிட்டு வளர்ந்த தேனீக்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி மிகவும் குறைந்துவிடுகிறது என்பதற்கும் ஆராய்ச்சி முடிவுகள் சான்றாக இருக்கின்றன.

மற்றைய உயிரினங்களுக்கு ஏற்படும் ஆபத்து, மனிதன் தனக்கும் வைத்துக்கொள்ளும் வேட்டுதான். மேற்கையே உலகுக்கு வழிகாட்டி என்று நினைத்து விமர்சனமோ எதிர்ப்போ இன்றி அவற்றைப் பின்பற்றும் ஏனைய நாடுகளும் இத்தகைய ஆபத்தை எதிர்கொள்கின்றன.

கட்டுக்கடங்காமல் வளரும் மக்கள் தொகைக்குத் தேவையான உணவை நவீனமயமாக்கம் இல்லாமல் உற்பத்தி செய்வது இயலாத காரியம் என்று சொல்லப்படுகிறது. உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டி, நமது பயிர் வளம் அழிக்கப்பட்டு அறிவியல் சாதனங்களின் துணையோடு வடிவமைக்கப்பட்ட மரபணு மாற்றப்பட்ட பயிர்கள்தான் விவசாயத்தின் எதிர்காலமாக இருக்கப்போகிறது என்கிறார்கள்.

அப்படி இருக்குமெனில், அது மனிதனல்லாத மற்ற உயிர்களுக்கு எத்தகைய இழப்பை உண்டாக்கும் என்று சொல்வதற்கில்லை. அத்தகைய உயிரிழப்பு மனிதனுக்கே அச்சுறுத்தலாகும். ஏன் என்று எதுவும் கேட்காமல் நாம் மேலை நாட்டின் தொழில் நுட்பப் பார்வையை கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்வதும், அதில் உள்ள ஆபத்துகளை அவர்கள் கண்டறிந்த பின்னரே நாம் விழித்துக் கொள்வதும் தற்சமயம் அனைத்து துறைகளிலும் நடைபெற்றுக் கொண்டிருப்பதுதான். மருத்துவம், விவசாயம் குறித்த நம் பாரம்பரிய அறிவு இன்று மறக்கப்பட்டு வருகிறது.

மனிதன் தன் சூழலை ஒட்டி வாழப் பிறந்தவன் – அதை நீங்கி அவனால் நலமாக வாழ முடியாது. எப்படி வன விலங்குகள் ஒன்றை ஒன்று சார்ந்தது இருக்கின்றனவோ, அப்படியே உடலளவில் கூட மனிதனுக்கு கிருமிகளும், புழுக்களும்கூட அவனது ஆரோக்கியத்துக்கு அவசியமாக இருக்கிறது என்கிறார்கள். பரிணாம வளர்ச்சியில் மனிதன் இவற்றின் துணையோடுதான் வளர்ந்திருக்கிறான்.

இன்று ஆரோக்கியம் என்ற புரிதலில் தூய சுகாதாரச் சூழலை அவன் தன்னைச் சுற்றிக் கட்டமைக்கத் தொடங்கிய காரணத்தால்தான் மேலை நாடுகளில் வளரும் நாடுகளை விட அதிக அளவில் ஆஸ்த்மா, அலர்ஜி நோய்கள் பெருமளவில் அதிகரித்துக் காணப்படுகின்றனவா என்றும் மருத்துவ ஆய்வுகள் நடைபெறுகின்றன.

தன் உடலின் சூழலில் கிருமிகள் முதற்கொண்டு புழுக்கள் வரை பல உயிரிகளின் தயவால்தான் மனிதன் வாழ்கிறான் என்பது, சூழலியல் குறித்து மேலும் அக்கறைப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்துவதாகவே உள்ளது. - ஆசிரியர்

# திவிநெகுமவைக் கண்டு கூட்டமைப்பின் அச்சம் ஏன்?

## விளக்குகிறார் ரோஹித

(கொழும்பு)

வாழ்வின் எழுச்சி (திவிநெகும) சட்டமூலம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானம் நாடாளுமன்றத்தில் இன்று அறிவிக்கப்படவுள்ள நிலையில், அச் சட்டமூலத்தைக் கண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏன் அஞ்சுகின்றதென்பது தொடர்பில் நெடுஞ்சாலைகள் மற்றும் கப்பல் துறை பிரதியமைச்சர் ரோஹித அபேகுணவர்தன விளக்கமளித்துள்ளார்.

திவிநெகும சட்டமூலம் மற்றும் தேர்தல் முறை மாற்றம் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் கூட்டத்தில் நெடுஞ்சாலைகள் மற்றும் கப்பல்துறை பிரதியமைச்சர் கலந்துகொண்டு உரையாற்றினார். கம்பளை ஜாதிக உறுமய மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இக்கூட்டம் நடைபெற்றது. இவ்விழிப்புணர்வுக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

"திவிநெகும தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்கால அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்குமென்பதாலேயே கூட்டமைப்பு திவிநெகும சட்டத்தை எதிர்க்கின்றது.

திவிநெகும சட்டமூலம் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல உதவும். இதனால் நாட்டின் பொருளாதாரம் உறுதியடையும். திவிநெகுமவூடாக வட, கிழக்கிலும் கிராமிய பொருளாதாரம் வளர்ச்சியடையும். இதனால் தமிழ் மக்களும் போதிய வருமானம் பெற்று நன்மையடைவர். இவ்வாறு மக்கள் வருமானம் பெறும்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் மக்களுக்கு அவசியமற்றதாகிவிடும் என்ற அச்சம் கூட்டமைப்புக்கு ஏற்பட்டுள்ளது. இதனாலேயே திவிநெகும சட்டமூலத்தை கூட்டமைப்பு எதிர்க்கின்றது என்றார்.

# யாழ்.போதனா வைத்தியசாலையின் புதிய கட்டடத் தொகுதிகள் டிசம்பரில் ஜனாதிபதியால் திறப்பு

(யாழ்ப்பாணம்)

3000 மில்லியன் ரூபா செலவில் நவீன முறையில் அமைக்கப்பட்டுள்ள யாழ். போதனா வைத்தியசாலையின் புதிய கட்டடத்தொகுதி டிசம்பர் மாத முற்பகுதியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

5 மாடிகளைக் கொண்ட இந்தக் கட்டடத் தொகுதியில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவு, சிரி ஸ்கான், அதிதீவிர சிகிச்சைக்கூடம் மற்றும் நோயாளிகள் தங்கியிருக்கும் விடுதிகள், சத்திர சிகிச்சை நிலையங்களுடன் வைத்தியர்கள் மற்றும் தாதிமாருக்கான வசிப்பிட வசதிகளும் செய்துகொடுக்கப்படும். இந்த வைத்தியசாலையில் புற்றுநோய்க்கான சிகிச்சைப் பிரிவு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டு சகல வசதிகளையும் கொண்ட ஒரு வைத்தியசாலையாக தரம் உயர்த்தப்படும்.

பிராணவாயுவைத் தயாரிக்கும் ஒரு நிலையமும் ஏற்படுத்தப்படுவதுடன் மின்சார வசதியை சூரிய சக்தி மூலம்பெறவும் வசதிகள் செய்யப்படும். இந்த புனரமைப்புப் பணிகளை ஜப்பானிய அரசாங்கம் இலவசமாக செய்துகொடுக்கும்.

இங்கு புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு அமைக்கப்படுவதனால் மகரகமை புற்றுநோய் வைத்தியசாலைக்கு வரும் தூர இடத்து நோயாளிகள் இனிமேல் யாழ்ப்பாண போதனாவைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்கான வசதிகளைப் பெறக்கூடியதாக இருக்கும்.

# கேப்பாபிலவு மக்களுக்கான நிரந்தர வீடுகள் அமைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கேப்பாபிலவு பிரதேச மக்களுக்கான நிரந்தர வீடுகளை அமைத்துக்கொடுக்கும் பணிகள் ஆரம்பித்துவைக்கப்பட்டன.

மீள்குடியேற்றத் துறை அமைச்சர் குணரட்ன வீரக்கோன் இத்திட்டத்தை கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைத்தார். இத்திட்டத்தின் கீழ் 165 நிரந்தர வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படவிருக்கும் நிலையில் முதற்கட்டமாக இவ்வருடத்துக்குள் 50 வீடுகள் அமைக்கப்படவிருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார். கேப்பாபிலவு சூரியமோட்டைப் பிரதேசத்தில் இவ் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

111.16 மில்லியன் ரூபா செலவில் இவ்வீட்டுத் திட்டம் அமைக்கப்படவுள்ளது. 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் இத்திட்டத்தைப் பூர்த்தி செய்ய அரசாங்கம் எதிர்பார்த்திருப்பதாக மீள்குடியேற்ற அமைச்சு தெரிவித்துள்ளது. இத்திட்டத்தில் 5 திறந்த கிணறுகளும், 10 குழாய்கிணறுகளும், 3 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா செலவில் வீடுகளும் அமைத்துக்கொடுக்கப்படவிருப்பதுடன், இராணுவத்தினரின் உதவியுடன் இவ்வீடுகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அரசாங்க அதிபர் குறிப்பிட்டார்.

அதேநேரம், சூரிபுரத்தில் தங்கவைக்கப்பட்டிருக்கும் 165 குடும்பங்களுக்கும் காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

காணி அமைச்சினால் வழங்கப்பட்ட காணி அனுமதிப் பத்திரங்கள் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 40 பேர்ச் காணிகள் வழங்கப்படவிருப்பதாகவும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் மேலும் கூறினார்.

# பேசாலை கொள்ளைச் சம்பவம் சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்

மன்னார், பேசாலை பகுதியிலுள்ள வீடொன்றில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படும் இரு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 15 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் ஏ.யூட்சன் உத்தரவிட்டார். மன்னார், பேசாலை பகுதியிலுள்ள வீடொன்றில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படும் இவ்விரு சந்தேக நபர்களும் தலைமன்னார் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டனர். இச்சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மன்னார் நீதவானிடம் முன்னிலைப்படுத்தப்பட்டபோதே அவர் இவ் உத்தரவைப் பிறப்பித்தார்.

மன்னார், பேசாலை பகுதியிலுள்ள வீடொன்றினுள் கடந்த வியாழக்கிழமை இரவு உள்நுழைந்த திருடர்கள் 9 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கநகைகளையும் பணத்தையும் அங்கிருந்த ஏனைய பொருட்களையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். இதனைத் தொடர்ந்து இவ் வீட்டு உரிமையாளர் இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பில் மறுநாள் வெள்ளிக்கிழமை தலைமன்னார் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பில் தலைமன்னார் பொலிஸ் நிலையத்தின் தலைமைப் பொலிஸ் அதிகாரி ஏ.எல்.எம்.ஜெமில் தலைமையிலான பொலிஸ் குழுவினர் விசாரணையை முன்னெடுத்த நிலையில், இரு சந்தேக நபர்களும் பேசாலை பகுதியில் கடந்த சனிக்கிழமை இரவு கைதுசெய்யப்பட்டதாக தலைமன்னார் பொலிஸ் நிலையத்தின் தலைமைப் பொலிஸ் அதிகாரி ஏ.எல்.எம்.ஜெமில் தெரிவித்தார். இவ்விரு சந்தேக நபர்களும் தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்ட நிலையில், மன்னார் நீதவான் ஏ.யூட்சன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது இவர்களுக்கு விளக்கமறியல் வழங்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

# விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள் 3

**வே.அர்ச்சுணன்**

**வன்னிப் பகுதியில் புலிகளின் மக்கள் படைக்கான ஆட்சேர்ப்பு இடம்பெற்ற போது அந்த பயிற்சி மையத்தில் இடம்பெற்ற நிறைவு விழாவில் உரையாற்றிய கடற்புலிகளின் தளபதி சூசை விடுதலைப் புலிகள் சகல முனைகளிலும் இனிவரும் நாட்களில் தாக்குதல்களை நடத்துவார்கள் எனத் தெரிவித்தார். சூசையின் பேச்சை தமிழ் ஊடகங்கள் தங்களுக்கேயுரித்தான விதத்தில் மெருகுபடுத்தின. குறிப்பாக யாழ்ப்பாணத்திலிருந்து வரும் 'உதயன்' பத்திரிகை விடுதலைப் புலிகள் கடற்படை, விமானப்படை, தரைப்படை ஆகிய முப்படைகளை ஒருங்கிணைத்து தாக்குதல்களை நடத்த உள்ளதுடன் கரும்புலித் தாக்குதல்களையும் பரவலாக நடத்துவரென தளபதி சூசை தெரிவித்ததாக முன்பக்கத்தில் எழுதியது. சூசை எரிச்சலடைந்தார்.**



விடுதலைப் புலிகளின் நிர்வாகக் கட்டமைப்பில் ஊடகங்களைக் கையாள்வதற்கென பல்வேறு பிரிவுகள் இரகசியமாகவும், வெளிப்படையாகவும் இயங்கி வந்தன. இவற்றுள் விடுதலைப் புலிகளின் அரசியல்துறை ஊடகப் பிரிவே வெளிப்படையாக செயற்பட்டது. ஆனால் மறைமுகமாக விடுதலைப் புலிகளின் ஆதரவான ஊடகப் போக்குடைய பலரை ஒருங்கிணைக்கும் பணியை விடுதலைப் புலிகளின் பல பிரிவுகள் கையாண்டு வந்தன. இவற்றுள் வெளிநாட்டு ஊடகங்களை கையாளும் பொறுப்பு கஸ்ரோ என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டு அவர் தனது மேற்பார்வையில் நந்தகோபன் என்பவரை இதற்குப் பொறுப்பாக நியமித்து செயற்படுத்தி வந்தார்.

இதேவேளை விடுதலைப் புலிகளுக்கும் அரச படையினரிற்கும் இடையில் இறுதி யுத்தம் இடம்பெறுவதற்கு முன்னர் யாழ். மரவட்டத்திலுள்ள ஊடகவியலாளர்களை கையாளும் பொறுப்பு தூயவனிடம் ஒப்படைக்கப்பட்டது. இதன் பின்னர் இப்பொறுப்பு பரணி என்ற தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த தமிழ்ச்செல்வனின் நம்பிக்கைக்குரிய ஒரு அரசியல்துறை பொறுப்பாளரிடம் ஒப்படைக்கப் பட்டது. இவர் வன்னியில் இருந்தவாறு யாழ்ப்பாணத்திலுள்ள நான்கு ஊடகவியலாளர்களுடன் நேரடியாகத் தொடர்புகளை ஏற்படுத்தி வந்தார். குறிப்பாக இந்த பொறுப்பாளரிற்கும், யாழ்ப்பாணத்திலிருந்த ஊடகவியலாளர்களிற்கும் இடையிலான தொடர்புகள் சற்ரலைற் தொலைபேசி ஊடாகவே கூடுதலாக இடம் பெற்றிருக்கிறது.

இலங்கைத் தீவு முழுவதும் ஊடகவியலாளர்கள் தீவிரமான கண்காணிப்பிற்கு உட்படுத்தப்பட்டிருந்ததுடன் சிலர் கொல்லப்பட்டிருந்தனர். இந்தநிலையில் யாழ்ப்பாணத்திலிருந்து புலிகளிற்கு சார்பான தகவல்களை வழங்கிக்கொண்டிருந்த சில ஊடகவியலாளர்கள் சுவிஸ்லாந்து நாட்டிற்கு அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பிக்க தயாராகிய செய்தி விடுதலைப்புலிகளின் புலனாய்வுப் பிரிவு பொறுப்பாளர்களில் ஒருவராக இருந்த நரேன் மாஸ்ரர் என்பவர் ஊடாக விடுதலைப் புலிகளின் தலைவரிற்கு தெரியப்படுத்தப் பட்டது. இதனை அடுத்து தமிழ்ச்செல்வனை உடனடியாக தனது மறைவிடமாக இருந்த ஒரு இடத்திற்கு அழைத்த பிரபாகரன் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற முற்படும் ஊடகவியலாளர்களை உடனடியாக தடுத்து நிறுத்துமாறும் அவர்கள் வெளியேற முடியாத அளவிற்கு சலுகைகளையும், ஆசைவார்த்தைகளைக் கூறி மடக்குமாறும் உத்தரவிடப்பட்டது.

தமிழ்ச்செல்வன் வேல்நம்பி என்ற போராளியை அழைத்து சில ஊடகவியலாளர்களின் பெயர்ப்பட்டியலையும் அவர்களைத் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரிகளையும் கொடுத்து அவர்களது தேவைகளை அறிந்து உதவுமாறு உத்தரவிட்டார். வேல் நம்பி என்ற அந்தப் போராளி கடல் மார்க்கமாக தீவகப் பகுதிக்குள் நுழைந்து பின்னர் யாழ். பல்கலைக்கழகத்தில் ஒரு மாணவன்போல் நடமாடியவாறு குறித்த ஊடகவியலாளர்களின் வீடுகளைத் தேடி சென்று கண்டுபிடித்து அவர்களுக்குத் தேவையான பண உதவிகளைச் செய்ததோடு உங்களின் பணியை தலைவர் பாராட்டியுள்ளதாகவும் உங்களை இன்னும் சிறிது காலத்திற்காவது இங்கிருந்து பணிபுரியுமாறும் தலைவர் கேட்டுள்ளார் என்பதைக் கூறினார். குறித்த ஐந்து ஊடகவியலாளர்களிற்கும் தனிப்பட்ட முறைகளில் ஐந்து இலட்சம் ரூபா வீதம் வழங்கப்பட்டதுடன் கணினி இயந்திரங்கள் உட்பட வேறு சில இலத்திரனியல் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக மேலதிக பணமும் வழங்கப்பட்டது.

இவற்றில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவருகின்ற ஒரு பத்திரிகையின் பிரதம ஆசிரியராக இருந்த தற்போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பொறுப்பாளர் என்று கூறப்படுகின்ற வித்தியாதரனிற்கு இருபது இலட்சம் ரூபா பணமாக வழங்கப்பட்டது. பிரபாகரனின் செய்தியும் பரிமாறப்பட்டது. இந்த நிகழ்வானது விடுதலைப்புலிகளின் சர்வதேச பத்திரிகையாளர் சந்திப்பிற்கு முற்பட்ட நிகழ்வாகும். இதன்பின்னரே பத்திரிகையாளர் சந்திப்பும் அதன்பின் பாலசிங்கம் இறந்த நிகழ்வைத் தொடர்ந்து வித்தியாதரன்மீது புலிகளிற்கு வெறுப்பும் விரக்தியும் ஏற்பட்டமை யாவரும் அறிந்ததே.

அன்ரன் பாலசிங்கம் இறந்த .பின்னர் அவரிற்கு ஏன் தேசத்தின் குரல் என்ற பதவி வழங்கப்பட்டது? அதன் பின்னணியிலும் சுவாரசியமான சம்பவங்கள் இருந்தன. விடுதலைப் புலிகளின் இயக்க மரபின்படி ஒருவர் சாவைத் தழுவினால் அவரது கடந்த கால போராட்ட செயற்பாடுகள் அவரது தனிப்பட்ட ஒழுக்க நடைமுறைகள் யுத்த கள அனுபவங்கள் என்பவற்றை அடிப்படையாக வைத்தே பதவி நிலைகள் தீர்மானிக்கப்பட்டு வந்தன. பாலசிங்கத்திற்கு லெப்டினன்ட் கேணல் பதவி வழங்குவதா? அல்லது கேணல் பதவி வழங்குவதா? அல்லது பிரிகேடியர் பதவி வழங்குவதா என்பது தொடர்பில் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனும், பொட்டம்மானும், சூசையும் இணைந்து ஆராய்ந்தனர். பிரபாகரன் பிரிகேடியர் பதவி வழங்குவதே பொருத்தமானது எனக் கூறியபோது சூசையும் பொட்டம்மானும் இதை எதிர்த்ததுடன் களமுனையையே அறியாத அன்ரன் பாலசிங்கத்திற்கு பிரிகேடியர் பதவியை வழங்கினால் தளபதிகள் மத்தியில் குழப்பம் ஏற்படும் எனவே வெளிநாடுகளில் உள்ள தமிழர்களையும், உள்நாட்டில் உள்ள மக்களையும் திருப்திப்படுத்தும் வகையில் ஒரு பதவியை வழங்குவதே பொருத்தமானது என்றனர்.

இயக்க மரபுகளை மீறி மது, புகைத்தல் ஆகிய செயற்பாடுகளில் பாலசிங்கம் ஈடுபட்டமையால் இவர் சாதாரண பொதுமக்கள் போன்றே செயற்பட்டுள்ளார். எனவே இவரிற்கு தேசத்தின் குரல் என்ற பொதுவான ஒரு பதவியை மெருகூட்டுவது போன்று வழங்குவதே பொருத்தமானது என மூவரும் எடுத்த முடிவிற்கிணங்க பதவி வழங்கப்பட்டது. இப்பதவி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து இது தொடர்பில் ஊடகங்கள் கூடுதலான மிகைப்படுத்தலுடன் செய்திகளை வெளியிட்டு வந்தன.

பாலசிங்கத்தின் இறப்பை வைத்துக் கொண்டும் அரசியல் செய்யவேண்டும் என்பதே புலிகளின் எண்ணமாக இருந்தது. ஆனால் பாலசிங்கத்தின் இழப்பைத் தொடர்ந்து சர்வதேச அரங்கில் புலிகளினுடைய செல்வாக்கு முழுமையாக சரியத் தொடங்கியதுடன் உள்நாட்டிலும். புலிகளினுடைய செயற்பாடுகளில் உள்த்தாக்கம் தெரியத் தொடங்கியது. இருந்தபோதிலும் ஊடகங்கள் கூடுதலான மிகைப்படுத்தல்களுடனேயே புலிகளின் பலத்தை மதிப்பீடு செய்து வந்தன. வன்னிப் பகுதியில் புலிகளின் கட்டுமானங்களில் ஒன்றாக இருந்த மக்கள் படைக்கான ஆட்சேர்ப்பு இடம்பெற்ற போது அந்த பயிற்சி மையத்தில் இடம்பெற்ற நிறைவு விழாவில் உரையாற்றிய கடற்புலிகளின் தளபதி சூசை விடுதலைப் புலிகள் சகல முனைகளிலும் இனிவரும் நாட்களில் தாக்குதல்களை நடத்துவார்கள் எனத் தெரிவித்தார். சூசையின் பேச்சை தமிழ் ஊடகங்கள் தங்களுக்கேயுரித்தான விதத்தில் மெருகுபடுத்தின. குறிப்பாக யாழ்ப்பாணத்திலிருந்து வரும் உதயன் பத்திரிகை விடுதலைப் புலிகள் கடற்படை, விமானப்படை, தரைப்படை ஆகிய முப்படைகளை ஒருங்கிணைத்து தாக்குதல்களை நடத்த உள்ளதுடன் கரும்புலித் தாக்குதல்களையும் பரவலாக நடத்துவரென தளபதி சூசை தெரிவித்ததாக முன்பக்கத்தில் எழுதியது.

இச்செய்தி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. குறிப்பாக இலங்கையின் படைத்துறை ஆய்வாளர்கள் மற்றும் வெளிநாட்டு ஆய்வாளர்கள் இவ்விடயம் தொடர்பில் கூடுதலான கவனத்தையும், ஆய்வையும் மேற்கொள்ள முற்பட்டனர். ஆனால் தான் வெளியிடாத கருத்தை வெளியிட்டுவிட்டதாக குழப்பமடைந்த சூசை உடனடியாக உதயன் பத்திரிகையுடன் தொடர்புகொண்டு எச்சரிக்கையும் விடுத்தார். அது மட்டுமல்லாது இச்செய்தி வெளிவந்ததைத் தொடர்ந்து பிரபாகரனும், பொட்டம்மானும் சூசையை அழைத்து விளக்கம் கேட்டதால் சூசை மேலும் எரிச்சலை அடைந்தார். ஆனால் பின்னய நாட்களில் குறித்த பத்திரிகை வேண்டுமென்றே சிக்கலில் மாட்டுவதற்கென்றே இச்செய்தியை வெளியிட்டது என நடேசனிடம் பிரபாகரன் கூறி மனம் வருந்தியதாக சூசைக்கு நடேசன் தெரிவித்திருந்தார். இறுதியுத்தம் இடம்பெற்றபோது புதுக்குடியிருப்பு பகுதிவரை இராணுவம் முன்னேறிய சமயத்தில் சூசைக்கு பிரபாகரனால் கூட்டுப்படைகளின் தளபதி என்ற பதவி வழங்கப்பட்டது. என்ன பதவிகளை வழங்கிய போதிலும் யுத்தத்தில் வெல்லமுடியாத நிலைமை ஏற்பட்டது வேறு விடயம்.

ஆனால் குறித்த ஊடகத்தின் இச்செய்தியால் புலிகள் குழப்பம் அடைந்தனர் என்பதே உண்மையாகும். ஏனெனில் விடுதலைப்புலிகளிடம் இருந்த விமானப்பலம் என்பது சிறிதளவாகவே இருந்தது. நான்கு இலகுரக விமானங்களும் மூன்று உலங்குவானூர்திகளும் மட்டுமே புலிகளிடம் இருந்தது. இவற்றுள் இரண்டு உலங்குவானூர்திகள் ஏற்கனவே செயலிழந்திருந்தன. ஒரு உலங்குவானூர்தி மட்டும் புலிகளால் கிளிநொச்சியில் 6ஆம் வாய்க்கால் பகுதியை அண்டிய காட்டுப்பகுதியில் உள்ள வீடொன்றில் வைத்து புதிய வடிவில் உருவாக்கப்பட்டிருந்தது. அதுவும் பின் நாட்களில் பயன்படுத்தப்பட முடியாத நிலையில் புலிகளால் குண்டுவைத்து தகர்க்கப்பட்டது.

இவ்வாறு வான்படைப் பலம் என்பது சவால்விடும் அளவிற்கு இருக்கவில்லை என்பதை உணர்ந்த புலிகள் தமது வான்படைப்பலம் தொடர்பில் வெளிவந்த செய்திகளால் தங்களிற்கு ஆபத்து என உணர்ந்ததுடன் அண்டைநாடான இந்தியாவின் அவதானிப்புகளும் அதிகரிக்கும் என அச்சம் கொண்டிருந்தனர். உண்மையில் புலிகளின் அச்சம் நியாயமானதாகவே இருந்தது. இந்தியா, இலங்கை வான் பரப்பை அவதானிப்பதற்கு நவீன ராடார் இயந்திரத்தை பயன்படுத்த தொடங்கியதை அடுத்து புலிகளின் வான்புலிகள் அணி எதிர்பார்த்த பயனைப் பெறவில்லையென பிரபாகரன் சினம் கொள்ளத் தொடங்கினார். பிரபாகரனின் இந்தக் கோபம் எதுவரை சென்றது ஊடகங்கள் எவ்வாறு புலிகளை அழித்தனர் என்பவற்றை அடுத்த தொடரில் பார்க்கலாம். **(தொடரும்)**

# இராஜதந்திர சேவையில் இராணுவ மேஜர் ஜெனரல்கள்

(கொழும்பு)

மூன்று சிரேஷ்ட இராணுவ மேஜர் ஜெனரல்களை இராஜதந்திர சேவையில் இணைத்துக் கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பிரேஸில், தென் ஆபிரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளின் தூதரகங்களில் இவ்வாறு இராணுவ மேஜர்கள் கடமையாற்ற உள்ளனர். பிரேஸில் நாட்டின் துணைத் தூதுவராக மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன நியமிக்கப்பட உள்ளார்.


இஸ்ரேலின் துணைத் தூதுவராக மேஜர் ஜெனரல் ஜகத் அல்விஸ் நியமிக்கப்பட உள்ளார். தென் ஆபிரிக்காவின் துணைத் தூதுவராக தற்போது ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான இலங்கையின் பிரதி வதிவிடப் பிரதிநிதியாக கடமையாற்றி வரும் மேஜர் ஜெனரல் சவேந்திரா சில்வா நியமிக்கப்பட உள்ளார்.

எதிர்வரும் இரண்டு மாதங்களில் இந்த அதிகாரிகள் குறித்த நாடுகளின் துணைத் தூதுவர் பதவிகளைப் பொறுப்பேற்றுக் கொள்வார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மூன்று இராணுவ மேஜர்களும் கஜபா படைப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது

# அரசிற்கு ஆதரவளித்தால் பிரதம நீதியரசர் குற்றமற்றவர்

## – என்கிறார் சரத் என் சில்வா



(கொழும்பு)

அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு ஆதரவளித்தால் பிரதம நீதியரசர் குற்றமற்றவர் என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் தாளத்திற்கு ஆடத் தவறும் பிரதம நீதியரசர்கள் நாடாளுமன்றிற்கு அருகாமையில் உள்ள தியவன்ன ஓய குளத்தில் மூழ்கடிக்கப்படுகின்றனர்.

117 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிராக குற்றம் சுமத்தியுள்ளனர்.

எனது மாணவியான அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தான், பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணைக்கு தலைமை தாங்குகின்றார்.

என்ன குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படடுள்ளன என்பது பற்றி, குற்றப் பிரேரணையில் கையொப்பமிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தெரியுமா?

குற்றச்சாட்டுக்கள் தொடர்பான சாட்சியங்களை ஆராய்ந்து பார்த்தார்களா? என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா கேள்வி எழுப்பியுள்ளார்.

# கூட்டமைப்பு விரிக்கும் வலையில் சீன பனங்காட்டு நரி சிக்காது

## கூறுகிறார் குணதாஸ அமரசேகர



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேரில் சென்று வலை வீசினாலும் ஒருபோதும் சீன அரசாங்கம் சிக்காது என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் உறுதியாக தெரிவித்துள்ளது.

மேலும் இலங்கையில் பிரிவினைக்கு சீனா ஒருபோதும் துணைபோகாது எனவும், இலங்கையின் நீதித்துறையில் தலையிடும் அதிகாரம் அமெரிக்காவுக்கு கிடையாது எனவும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாஸ் அமரசேகர உறுதியாகத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய மத்திய அரசாங்கத்திற்குள் சலசலப்பை ஏற்படுத்தும் நோக்கிலேயே கூட்டமைப்பினர் சீனாவுக்கு விஜயத்தை மேற்கொள்கின்றனர். ஆனால் சீனா பனங்காட்டு நரி. அதனை ஏமாற்ற கூட்டமைப்பினரால் முடியாது.

எமது நாட்டுக்கு அனைத்து ரீதியிலும் பெரும் உதவிகளைச் செய்யும் நாடு சீனா. பிரிவினைக்கு ஒருபோதும் துணை நிற்காது. தூரநோக்குடனேயே அனைத்து நடவடிக்கைகளையும் சீனா கையாளும். ஆகையால் கூட்டமைப்பின் சீன விஜயம் வெறும் பூஜ்ஜியம் தான்.

இலங்கையில் நீதித்துறை சார்ந்த பிரச்சினைகளுக்கு எமது நாட்டின் அரசே தீர்வு காண வேண்டும். நம் நாட்டில் அமெரிக்காவுக்கு தலையிடும் அதிகாரம் கிடையாது, அதற்கு கட்டுப்பட வேண்டிய அவசியமும் நம் நாட்டுக்குக் கிடையாது.

எனவே இனிமேலும் அமெரிக்கா, இந்தியா போன்ற மேற்குலக நாடுகளின் பேச்சுக்களை மகிந்த ராஜபக்ஷ நிராகரித்து துணிச்சலாக சுயமான முடிவுகளை எடுத்து ஆட்சி நடாத்த வேண்டும்.

அமெரிக்காவிடம் இருந்து எமக்கு நிதியுதவிகள் கிடைப்பதேயில்லை. எனவே அந்நாட்டின் அழுத்தங்களுக்கு அடிபணிய எம்மால் முடியாது. சீனா எமது நட்பு நாடு. அதனுடன் நட்புறவுகளை மேம்படுத்திக் கொள்வதே சிறந்தது என கலாநிதி குணதாஸ அமரசேகர மேலும் தெரிவித்துள்ளார்.

# பயணிகள் பேருந்துகளுக்கான தற்காலிக அனுமதி இரத்து

(கொழும்பு)

பயணிகளை ஏற்றிச்செல்லும் பேருந்துகளுக்கு வழங்கப்பட்டுள்ள சகல தற்காலிக அனுமதிப்பத்திரங்களையும் இரத்துச் செய்யப்போவதாக, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சபை தெரிவித்துள்ளது. பேருந்து உரிமையாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக மாவட்ட மட்டத்தில் அமுல்படுத்தப்பட்டுள்ள நடமாடும் செயலமர்வில், ஆணைக்குழு சபையின் தலைவர் ரொஷான் குணவர்தன தெரிவித்துள்ளார்.

பேருந்து வண்டிகளுக்கான தற்காலிக பிரயாணிகள் அனுமதிப்பத்திரம், விசேட தேவைகளுக்கமையவே வழங்கப்பட்டது. ஒரு சில பேருந்து உரிமையாளர்கள், இந்த தற்காலிக பிரயாணிகள் அனுமதிப்பத்திரத்தைப் பயன்படுத்தி, நீண்டகாலம் பிரயாணிகள போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுவதாக, முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதனைக் கருத்திற்கொண்டே, இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக, அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தமிழருக்கு அரசியல் அதிகாரம் இந்தியா துணை புரியவேண்டும்

## - கார்த்திகேயன் தெரிவிப்பு

(சென்னை)

இலங்கையில் தமிழர்களுக்கு அரசியல் அதிகாரம் வழங்குவதற்கு இந்தியா துணை புரியவேண்டுமென ராஜிவ்காந்தி கொலை வழக்கை விசாரித்த சிறப்புப் புலனாய்வுக் குழுத் தலைவரான முன்னாள் புலனாய்வு அதிகாரி டி.ஆர்.கார்த்திகேயன் தெரிவித்துள்ளார்.



இலங்கையில் உள்ள சிறுபான்மைத்தமிழர்களுக்கு இழைகக்கப்பட்ட அநீதியின் காரணமாகவே அங்கு போராளிகள் உருவாகினர்.

பெரும்பாண்மை இன சிங்களவர்கள் அடக்குமுறை செய்த காரணத்தால் வேறுவழியின்றியே தீவிரவாத இயக்கமாக அவர்கள் மாறினர்.

அங்குள்ள தமிழர்களுக்கு இன்னும் நியாயம் வழங்கப்படவில்லை.

அவர்களின் பிரச்சினையைத் தீர்க்க ராஜிவ் - ஜெயவர்த்தன உடன்பாட்டை நிறைவேற்ற வேண்டும்.

விடுதலைப் புலிகள் ஒடுக்கப்பட்டுள்ளதால் தற்போதைக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை.

இலங்கையில் அடக்குமுறையினால் தான் அமைதி ஏற்பட்டுள்ளது.

தமிழர்களுக்கு அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக் கொடுக்க இந்தியா அனைத்துலக அளவில் இலங்கையை நிர்ப்பந்திக்க வேண்டும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்

# செல்வம் எம்.பியின் மைத்துனரை கொலை செய்ததாக ஒப்புதல்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் மைத்துனரான சின்னத்துரை இந்திரேஸ்வரன் என்பவரை கொலை செய்ததாக ஒருவர் ஒப்புக் கொண்டுள்ளார்.

சக நண்பர் ஒருவரே இந்தக் கொலையைச் செய்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

தங்க நகை வியாபார முகவராக செயற்பட்டு வந்த சின்னத்துரை இந்திரேஸ்வரன் (வயது 53) கடந்த 30ஆம் திகதி கொலை செய்யப்பட்டார்.

இவரது சடலம் நானுஓயா பிரதேசத்தில் கடந்த 31ஆம் திகதி மீட்கப்பட்டது.

பணத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் தாம் இந்தக் கொலையைச் செய்ததாக செட்டியார் தெருவில் தங்க நகை வியாபார முகவராகச் செயற்பட்டு வரும் யூசுப் என்பவர் ஒப்புக் கொண்டுள்ளார். இந்திரேஸ்வரனிடமிருந்து 35 இலட்ச ரூபா பணத்தைப் பெற்றுக் கொள்வதற்காக இந்தக் கொலையை செய்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கார் ஒன்றில் இந்திரேஸ்வரனை அழைத்துச் சென்று கழுத்தை நெரித்துக் கொலை செய்ததாக யூசுப் தெரிவித்துள்ளார்.

இந்திரேஸ்வரனின் சடலத்தை நானுஓயா பிரதேசத்தில் போட்டுவிட்டு மீண்டும் கொழும்பு திரும்பியதாக யூசுப் பொலிஸ் விசாரணைகளின் போது தெரிவித்துள்ளார்.

கொள்ளையிட்ட பணத்தில் ஐந்து இலட்ச ரூபாவை தமது கடன்களுக்கு செலுத்தியதாகவும், மிகுதிப் பணத்தை வாகனமொன்றைக்கொள்வனவு செய்வதற்காகச் செலுத்தியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தடைசெய்யப்படவுள்ள ஆசனிக் மருந்துப் பொருட்கள்

இலங்கையில் விற்பனை செய்யப்படும் மருந்துப் பொருட்களிலும் விவசாயத்துக்கு பயன்படுத்தப்படும் பசளைகளிலும் ஆசனிக் என்ற இராசயனப் பொருள் உள்ளதா? என்பது குறித்து ஆராய்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

அவ்வாறு ஆசனிக் கலந்துள்ள மருந்துப் பொருட்கள் மற்றும் விவசாயப் பசளைகளை தடை செய்வது குறித்தும் கலந்துரை யாடப்படுவதாக சுகாதார சேவைத் தரப்புக்கள் தெரிவித்துள்ளன.

ஆசனிக் என்பது ஒரு இரசாயன மூலகமாகும். எனினும் அது நச்சுப் பொருளாகவே கருதப்படுகிறது. இந்தநிலையில் இலங்கையில் சிறுநீரக நோய்கள் பரவுவதற்கு இந்த மூலகமும் காரணம் என்று தெரியவந்துள்ளது. இதனையடுத்தே அதனை தடைசெய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது

# கொழும்பு மோசடிப்பிரிவின உளவுப்பிரிவு பலபபடுததபபடும

கொழும்பு மோசடிப் பிரிவின் உளவுப் பிரிவு மனிதவள குறைவினால் மூடப்பட்டுள்ளது என வெளியான செய்திகளை மறுத்துள்ள பொலிஸ் தலைமையகம் அந்தப் பிரிவு பலப்படுத்தப்படும் எனஅறிவித்துள்ளது.

இதுதொடர்பில் பொலிஸ் பேச்சாளர் எஸ்.எஸ்.பி. பிரசாந்த ஜயக்கொடிதெரிவிக்கையில்,

இந்தப் பிரிவு மூடப்படவில்லை. அப்பிரிவு தொடர்ந்து இயங்குவதற்குத் தேவையான மேலதிக பொலிஸ் அதிகாரிகள் மற்றும் வளங்கள் வழங்கப்படும். தற்போது இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களே இந்தப் பிரிவில் கடமையாற்றுகின்றனர். எனினும் மனிதவள குறைவினால் செயற்பாடுகள் தாமதமாகின்றன.

உளவுப் பிரிவில் கடமையாற்றிய உப பொலிஸ் பரிசோதகர் தொலைபேசி நிலைய உரிமையாளரிடமிருந்து சுமார் 5 மில்லியன் ரூபாவைப் பெற முற்சித்த போது குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

இதனையடுத்து இந்தப் பிரிவு மூடப்பட்டது என செய்தி வெளியாகியிருந்தது. சுமார் ஆறு பொலிஸ் உத்தியோகத்தர்களைகொண்ட இந்தப் பிரிவு தொலைபேசி நிலையங்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிலையங்களை கண்காணிக்க உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது"

# யுத்தத்தால் அழிவடைந்த பாடசாலைகள் துரித கதியில் புனரமைப்பு செய்யப்படும்



(யாழ்ப்பாணம்)

யுத்தத்தால் அழிவடைந்த பாடசாலைகளை துரிதகதியில் புனரமைப்புச் செய்யும் செயற் திட்டத்தின் கீழ் வகுப்பறைத் தேவைகளையுடைய பாடசாலைகளையும் உள்வாங்கி புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளோம் என ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினரும், தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட யாழ்.கைதடி குருசாமி வித்தியாலயம், யாழ்.கைதடி நாவற்குழி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய இரு பாடசாலைகளுக்குப் புதிதாக அமைக்கப்பட்ட வகுப்பறைத் தொகுதியினைத் திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குடும்ப வறுமை நிலை காரணமாக மாணவர்களின் கற்றல் செயற்பாடு பாதிப்படையாது கல்வியினைத் தொடர்வதற்கான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தி வருகின்றோம். இவ்வாறே மாணவர்கள் தமது கல்வியினைத் தொடர்வதில் குடும்ப வறுமை நிலை காரணமாக அமைந்து விடக்கூடாது.

கடந்த காலங்களில் கல்வியைத் தொடரமுடியாத ஓர் துர்ப்பாக்கிய சூழல் காணப்பட்டது. ஆனால் இன்று அவ்வாறானதொரு நிலையில்லை. பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் வளமான எதிர்காலத்தினைக் கருத்தில் கொண்டு அரசாங்கத்தினால் வழங்கப்படும் இலவச கற்றல் வளபங்களிப்பைச் சரிவரப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனத்தெரிவித்தார்.

இந்நிகழ்வுகளில் வலயக் கல்விப்பணிப்பாளர் பிறேமகாந்தன், மாகாண கல்வி அபிவிருத்தி பிரதிப்பணிப்பாளர் சிறிஸ்கந்தராசா, ஈ.பி.டி.பியின் தென்மராட்சி அமைப்பாளரும், சாவகச்சேரி நகர சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான அலெக்ஸ்சான்டர் சாள்ஸ், ஈ.பி.டி.பியின் தென்மராட்சி இணைப்பாளர் வலன்டயன், பாடசாலை சமூகத்தினர், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



காரைநகர் பிரதேச சமுர்த்தி கழகங்களினால் நடாத் தப்பட்ட குழு நடனப் போட்டியில் பிரதேச மாவட்ட மட்டங்களில் 1 ஆம் இடத்தைப் பெற்று எம்பிலிப்பிட்டியாவில் நடைபெற்ற தேசிய மட்டப் போட்டியில் பங்கு பற்றிய யாழ்ரன் கல்லூரி பாடசாலை மாணவிகளையும், ஆசிரியர்களையும் காணலாம். (50)

## பெற்றோர் தினவிழா

யாழ்.கார்மேல் முன்பள்ளி பாடசாலையின் பெற்றோர் தின விழா எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 9 மணிக்கு சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அருட்தந்தை ஏ.கிறிஸ்தோப்பர், கௌரவ விருந்தினராக சமூக செயற்பாட்டு மையத்தின் இணைப்பாளர் நடராஜா சுகிர்தராஜ், சிறப்பு விருந்தினராக யாழ். பிரதேச செயலக சிறுவர் உரிமை பாதுகாப்பு அலுவலர் திருமதி வினோதினி கலைச்செல்வன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.அமெரிக்கன் கோனர் நிறுவனத்தால் எழுத்துக்களினூடாக வாழ்வின் வெளிப்பாடுகள் என்னும் விடயம் பற்றிய கருத்தரங்கு நாளை மறுதினம் வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு இல 159, 4 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள மேற்படி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கவிஞரும், எழுத்தாளருமான ஜெயனி துரிகா சேனநாயக்க கலந்து கொண்டு விடயம் பற்றி கருத்துரை வழங்கவுள்ளார். இதில் ஆர்வமுள்ளவர்களைக் கலந்து கொள்ளுமாறு நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர்.



மும்மொழி கலாசார அபிவிருத்தி திட்டத்தின் கீழ் யாழ். வருகை தந்த அனுராதபுரம் நிக்கவேலா மகா வித்தியாலய மாணவர்கள், ஆசிரியர்கள் உடுப்பிட்டி அமெரிக்கன் மஷன் மாணவர்களுடன் சேர்ந்து பல்வேறு கலாசார நிகழ்வுகளில் ஈடுபட்டனர். இருபாடசாலை மாணவர்களையும் காணலாம். (116)

## முரசின் இன்றைய பலன்

(06.11.2012 – செவ்வாய்க்கிழமை

நந்தன வருஷம் ஐப்பசி மாதம் 21 ஆம் திகதி. நட்சத்திரம் பூசம் பிற்பகல் 6.36 வரை. மரணயோகம். திதி சப்தமி பிற்பகல் 1.36 வரை. பின் அட்டமி.
இராகுகாலம் 3.05 - 4.35 வரை. சுபநேரம் 10.35 - 12.05 வரை.
எமகண்டம் 9.05 - 10.35 வரை. குளிகன் காலம் 12.05 - 1.35 வரை.
கேதாரகௌரி விரத 14 ஆவது நாள்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | மனதில் குழப்பம். குடும்ப ஆதரவு ஊக்கம் தரும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். முக்கிய செலவு இருக்கும். பாதுகாப்பு கவனம். ஆபத்து வந்து விலகும். |
| ரிஷபம் | சிலரால் தர்மசங்கடம். பொறுமை உங்களைக் காக்கும். நட்பில் நெருடல் வரலாம். வளர்ச்சிக்கு அதிக உழைப்பு. சராசரி பணவரவு. சேமிப்பு பயன்படும். |
| மிதுனம் | எல்லாம் நன்மையாகவே இருக்கும். மாறுபட்டவர்களும் அன்பு பாராட்டுவர். தொழில், இடையூறு விலகும். அதிக பணவரவு. உடல்நலம் பலம் பெறும். |
| கடகம் | மனதில் உற்சாகமும், செயல்களில் திறமையும் பரிமளிக்கும். வேலைகள் எளிதில் முடியும். கூடுதல் மூலதனம் செய்வீர்கள். ஆதாயம். வெற்றி. |
| சிம்மம் | உயர்வு, தாழ்வு கருதாமல் பழகுவீர்கள். செயல்களில் வெற்றி. கடினமாக உழைப்பு. உபரிவருமானம். குடும்பத்தேவை நிறைவேறும். உறவினர் வருகை. |
| கன்னி | உறவினர் எதிர்பார்ப்புடன் அணுகுவர். உதவி செய்வீர்கள். தொழிலில் மாற்றங்கள். அளவான பணவரவு. இல்லறத்துணை ஆதரவு. உணவில் கவனம். |
| துலாம் | பழைய நட்பு சந்திப்பு. நெருக்கடியான சூழ்நிலைகளை சமாளிப்பீர்கள். சமூகத்தில் மதிப்பு, மரியாதை உயரும். தாராள பணவரவு. நட்புக்கு மரியாதை. சுபநிகழ்ச்சி. |
| விருச்சிகம் | புதுமையான எண்ணங்கள். எதிர்ப்புகளை முறியடிப்பீர்கள். தொழில், திட்டமிட்ட வளர்ச்சி. சராசரி பணவரவு. விருந்து, உபசரிப்புகள். சலுகைகளும் சன்மானமும். |
| தனுசு | புதிய பணிகள் வரும். தொழில், நடைமுறை மாற்றம். பணவரவு தாராளம். நினைத்தது நடக்கும். தாய் வழியில் நம்பிக்கை. உறவும் நட்பும் போட்டியிட்டு உதவி. |
| மகரம் | பேச்சிலும் செயலிலும் சாந்தம். வேலைகள் இலகுவாகும், புதிய பரிமாணம் ஏற்படும். கூடுதல் பணவரவு. அறப்பணி செய்வீர்கள். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி. |
| கும்பம் | வெளிவட்டார தொடர்புகள் தொந்தரவு. வேலைச் சுமை. புதிய வாய்ப்புகளும் அதிக வருமானமும் வரும். உடல் பலம் பெறும். போக்குவரத்தில் கவனம். |
| மீனம் | எதிர்பார்ப்பு நிறைவேற தடங்கல். குடும்பத்தினருடன் விரக்தி. வேலையிலும் குளறுபடி. பேச்சு குறைப்பதும் பொறுமையும் காக்கும். கடன் நேரும். |

## காரைநகர் பிரதான வீதியை செப்பனிடுமாறு கோரிக்கை

(காரைநகர்)

காரைநகர் பிரதேசத்தில் தொடர்ச்சியாகப் பெய்த கன மழையினால் காரைநகர் பிரதேச மேற்கு வீதி பலத்த சேதமடைந்துள்ளதாகவும் இதனூடாகப் போக்குவரத்து பெரும் சிரமத்தின் மத்தியில் இடம் பெறுவதாக பொது மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக இவ்வீதி பல இடங்களில் குண்டும், குழியுமாக மாறியுள்ளதால் இதில் வெள்ள நீர் தேங்கி அவ்வீதியூடாக வாகனங்கள் செல்லும் போது பாதசாரிகள் மீது வெள்ள நீர் அடித்துச் செல்வதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

குறிப்பாக இவ்வீதியூடாக மாணவர்கள், வர்த்தகர்கள், அலுவலர்கள் எனப்பலர் தமது பிரயாணங்களை மேற்கொள்கின்ற நிலையில் இவ்வீதி சேதமடைந்துள்ளமையால் சிரமத்துடனேயே செல்லவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

எனவே இனிவரும் பருவ மழையால் இவ்வீதி மேலும் சேதமடையும் எனவும், அதற்கு முன்னதாக தற்காலிகமாக இவ்வீதியைச் செப்பனிட உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (50)

## ஆன்மிக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ பண்பாட்டுப் பேரவையில் எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் ஆறு.திருமுருகன் சிறப்பு சொற்பொழிவாற்றவுள்ளார்.

## குடிநீர் விநியோகத் திட்டத்திற்கு 22 மில்லியன் நிதி ஒதுக்கீடு

(கிளிநொச்சி)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் குடிநீர் விநியோகத்திட்டத்திற்கென 22 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இரு மாவட்டத்திற்கே இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன் பருத்தித்துறையில் குடிநீர் விநியோகத் திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் 20 ஆயிரம் குடும்பங்கள் பயனடையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இத்திட்டத்தின் மூலம் இரு மாவட்டங்களைச் சேர்ந்த 80 ஆயிரம் வரையான குடும்பங்களின் குடிநீர்த் தேவை பூர்த்தியாகும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (69)

# தந்தையின் ஆசையை நிறைவேற்ற மரணச் சடங்கிலும் பங்குபற்றாத தனயன்


(புதுடில்லி)

தந்தையின் ஈமச்சடங்கில் பங்கேற்காமல் இங்கிலாந்து அணிக்கெதிரான பயிற்சிப் போட்டியில் இளம் வேகப்பந்து வீச்சாளர் ஜாவேத்கான் பங்கேற்றுள்ளார்.

மும்பை 'ஏ' அணியின் இளம் வேகப்பந்து வீச்சாளர் ஜாவேத் கான் (22). இவர் இங்கிலாந்து அணியுடனான பயிற்சி ஆட்டத்தில் விளையாடினார். இவரது தந்தை முகமது ஜெயிஷ் கானுக்கு கடந்த வெள்ளியன்று இரவு இதய அறுவைச் சிகிச்சை நடந்தது. ஆனால், மயக்கம் தெளியாமலேயே அவர் மரணமடைந்தார். இதைக் கேள்விப்பட்ட ஜாவேத்கான் இரவு முழுவதும் அழு-தபடியே இருந்ததுடன், பயிற்சி ஆட்டத்தில் இருந்து விலகவும் முடிவு செய்தார்.

ஆனால், சர்வதேச அணிக்கு எதிராக தனது மகன் விளையாட வேண்டும் என்பதே ஜெயிஷ் கானின் கடைசி ஆசை என்பதால், உறவினர்களும் பயிற்சியாளர் ராஜு பதக்கும் ஜாவேத்தை தொடர்ந்து விளையாட வற்புறுத்தினர். இதையடுத்து, தந்தையின் ஈமச்சடங்கில் பங்கேற்காமல் ஆட்டத்தைத் தொடர்ந்த அவர், இங்கிலாந்தின் புரொட் மற்றும் பேர்ஸ்டாவ் விக்கெட்டுக்களை வீழ்த்தினார் (17,1,75,2). இதே போல விராத் கோஹ்லியும் 18 வயதில் ரஞ்சி போட்டியில் விளையாடிக் கொண்டிருந்தபோது அவரது தந்தை இறந்த நிலையில், தொடர்ந்து விளையாடி 90 ரன் எடுத்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய அணி அறிவிப்பு



இங்கிலாந்து அணிக்கெதிரான முதலிரண்டு டெஸ்ட் போட்டிக்கான அணியில் யுவராஜ்சிங், ஹர்பஜன்சிங் ஆகியோர் இடம்பிடித்துள்ளனர். அத்துடன் சுரேஷ் ரெய்னா அதிரடியாக நீக்கப் பட்டுள்ளார்.

இந்தியாவிற்கு சுற்றுப் பயணம் செய்துள்ள இங்கிலாந்து அணி டெஸ்ட், ஒரு நாள் மற்றும் ருவென்ரி -20 போட்டியில் விளையாடவுள்ளது. இந்தியா- இங்கிலாந்து இடையேயான 4 டெஸ்ட் போட்டித் தொடரில் முதல் டெஸ்ட் வருகிற 15-ஆம் திகதி அகமதாபாத்தில் நடைபெறவுள்ளது. முதல் டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணி தேர்வு மும்பையில் உள்ள கிரிக்கெட் மையத்தில் நேற்று நடைபெற்றது. சந்தீப் பட்டீல் தலைமையில் புதிய தேர்வுக்குழு சமீபத்தில் நியமிக்கப்பட்டது. இந்த தேர்வுக் குழு முதல் முறையாக வீரர்களை தேர்வு செய்தது.இதில் யுவராஜ் சிங், ஹர்பஜன் சிங் இடம் பெற்றனர். ரெய்னா, பத்ரிநாத் இடம்பெறவில்லை.

அறிவிக்கப்பட்டுள்ள 15 பேர் கொண்ட அணியில் டோனி, டெண்டுல்கர், கம்பீர், சேவாக், யுவராஜ் சிங், விராட் ஹோலி, ரகானே, சகீர்கான், இசாந்த் சர்மா, புஜாரா, ஹர்பஜன் சிங், முரளி விஜய், அஸ்வின், ஓஜா, உமேஷ் யாதவ் ஆகியோர் இடம்பிடித்துள்ளனர்.

# பரிபாஸ் ஓப்பன் ரென்னிஸ் சம்பியனானது இந்திய ஜோடி



(பரிஸ்)

பரிபாஸ் மாஸ்டர்ஸ் ஓப்பன் ரென்னிஸ் தொடரின் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் மகேஷ் பூபதி, ரோகன் போபண்ணா ஜோடி சம்பியன் பட்டம் வென்றது.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில், பரி-பாஸ் மாஸ்டர்ஸ் ஓப்பன் ரென்னிஸ் தொடர் நடந்தது. நேற்று முன்தினம் நடந்த இரட்டையர் பிரிவு இறுதிப் போட்டியில் இந்தியாவின் பூபதி, போபண்ணா ஜோடி, பாகிஸ்தானின் குரேஷி, நெதர்லாந்தின் ஜீன்-ஜூலியன் ரோஜர் ஜோடியை சந்தித்தது.

டை-பிரேக்கர் வரை நீடித்த முதல் செட்டை 7-6 எனக் கைப்பற்றிய இந்திய ஜோடி, இரண்டாவது செட்டை 6-3 என மிகச்சுலபமாக தன்வசப்படுத்தியது.

இறுதியில் பூபதி-போபண்ணாஜோடி 7-6, 6-3 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டம் வென்றது. இது, இந்த ஆண்டு பூபதி-போபண்ணா ஜோடி கைப்பற்றியஇரண்டாவது பட்டம். முன்னதாக கடந்த மார்ச் மாதம் டுபாயில் நடந்த தொடரில்இந்திய ஜோடி சம்பியன் பட்டம் வென்றது. அதன்பின் நடந்த சின்சினாட்டி மற்றும் ஷாங்காய் ஓப்பன் ரென்னிஸ் தொடர்களில் இறுதிப் போட்டி வரை முன்னேறி, 2ஆவது இடம் பிடித்தமை குறிப்பிடத்தக்கது.

வெற்றி குறித்து பூபதி குறிப்பிடுகையில், எங்கள் இருவரின் ஒருங்கிணைந்த ஆட்டத்திற்குக் கிடைத்த பரிசு இது. அடுத்து வரும் தொடர்களிலும் சாதிப்போம் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது எனத் தெரிவித்தார்.

# நியூசிலாந்து வீரர்களுக்கு ஏறுகிறது "சேலைன்"



(கொழும்பு)

உணவு விசமடைந்தமையால் வயிற்றோட்டத்துக்குள்ளான ரொஸ் டெய்லர் மற்றும் ஹென்ரு எலிஸ் ஆகியோருக்கு சேலைன் ஏற்றப்பட்டுள்ளது.

இலங்கை மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒரு நாள் போட்டி நேற்று முன்தினம் பல்லேகலேயில் இடம்பெற்றதோடு இதில் இலங்கை டக்வொர்த் லூயிஸ் முறையில் வெற்றி பெற்றது.

இப்போட்டியின் போது ரொஸ் டெய்லர் மற்றும் ஹென்று எலிஸ் ஆகியோர் உணவு உட்கொண்டுள்ளனர். இதன்பின்னர் இருவருக்கும் உணவு ஒவ்வாமையினால் வயிற்றோட்டம் ஏற்பட்டுள்ளது.

எனினும் இவ்விருவரும் சுகவீனமுற்ற நிலையிலேயே நேற்று முன்தினம் போட்டியில் களமிறங்கியிருந்தனர். இந்நிலையில் உடல் வலிமை இல்லாத காரணத்தால் இருவரும் நேற்று கண்டி போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றதோடு சேலைனும் ஏற்பட்டுள்ளது.

இரண்டாவது போட்டியில் ரொய் டெய்லர் அதிகூடுதலாக 72 ஓட்டங்களை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# லா லிகா கால்பந்தாட்டம்

## சாதனை படைத்தது பார்சிலோனா




(மாட்ரிட்)

செல்டா விகோ அணிக்கு எதிரான லா லிகா கால்பந்துப் போட்டியில் பார்சிலோனா அணி வெற்றி பெற்றது. ஸ்பெயினில் உள்ள மாட்ரிட் நகரில் நடந்த லா லிகா கால்பந்து லீக் போட்டியில் பார்சிலோனா, செல்டா விகோ அணிகள் மோதின. இதில் தொடக்கம் முதல் சிறப்பான ஆட்டத்தை பார்சிலோனா அணி வீரர்கள் வெளிப்படுத்தினர். போட்டியின் 21ஆவது நிமிடத்தில் பார்சிலோனா அணியின் அட்ரியனோ ஒரு கோல் அடித்தார். இதற்கு செல்டா அணியின் மரியோ பெர்மிஜோ (24) பதிலடி கொடுத்தார். பின் டேவிட் வில்லா (26) ஒரு கோல் அடிக்க, முதல் பாதியில் பார்சிலோனா அணி 2-1 என முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதியில் பார்சிலோனா அணியின் ஜோர்டி ஆல்பா (61) ஒரு கோல் அடித்தார். செல்டா அணி வீரர்கள் கோல் ஏதும் அடிக்க முடியவில்லை. இறுதியில் பார்சிலோனா அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இந்தப் போட்டியில் வெற்றி பெற்ற பார்சிலோனா அணி, இந்த ஆண்டு நடக்கும் லா லிகா தொடரில் தனது 9ஆவது வெற்றியை பதிவு செய்து, புதிய சாதனை படைத்தது. முன்னதாக 1997-98 ஆம் ஆண்டு நடந்த தொடரில் லூயிஸ் வான் கால் தலைமையிலான பார்சிலோனா அணி 8 வெற்றிகள் பெற்றதே சாதனையாக இருந்தது.

# ஆடமாட்டார் வட்சன்

(சிட்னி)

தென்னாபிரிக்க அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணியின் சகலதுறை வீரர் வட்சன் ஆடமாட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவுஸ்ரேலியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும், அவுஸ்ரேலிய அணிக்குமிடையிலான 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடர் இடம்பெறவுள்ளது. இதில் முதலாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலியாவின் வட்சன் பங்குபற்ற மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. அவருக்கு ஏற்பட்ட உபாதை காரணமாகவே அவர் பங்குபெற மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. முதலாவது போட்டிக்கு முன்னதாக அவர் போதியளவு குணமடையமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளதாலேயே அவர் முதலாவது போட்டிக்கான அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.



நடைப் பயிற்சி மூலம் உடற்தகுதி பெறலாம் என்பதை வலிறுத்தி நடந்த நிகழ்ச்சியில் உற்சாகமாக பங்கேற்ற இந்திய ரென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சாவைக் காணலாம்.

இந்நிகழ்வு ஹைத்ராபாத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.



# முதலிடமே இலக்கு

(புதுடில்லி)

தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி தரப்படுத்தலில் முதலிடம் பிடிக்க முயற்சிப்பேன் என இந்தியாவின் பட்மின்ரன் வீராங்கனை சாய்னா நேவால் தெரிவித்தார். இரசிகர்களின் ஆதரவு தான் எனது வெற்றிக்கு முக்கிய காரணமாக அமைந்தது. இதனால் எனது ஒலிம்பிக் வெற்றியை இரசிகர்களுடன் கொண்டாட, பாராட்டு விழாக்களில் கலந்து கொண்டேன்.

நீண்ட ஓய்வுக்கு பின் பங்கேற்ற டென்மார்க் மற்றும் பிரெஞ்ச் ஓப்பன் தொடர்களில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவேன் என சற்றும் எதிர்பார்க்கவில்லை. ஏனெனில் 85 சதவீத உடற்தகுதியுடன் தான் இத்தொடர்களில் பங்கேற்றேன். டென்மார்க் ஓப்பனில் பட்டம் வென்ற போதும், பிரெஞ்ச் ஓப்பன் இறுதிப் போட்டியில் தோல்வி அடைந்தது ஏமாற்றம் அளிக்கிறது.

தரப்படுத்தலில் 3ஆவது இடத்துக்கு முன்னேறியது மகிழ்ச்சியான விடயம். தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி முதல் இடத்தைப் பிடிக்க முயற்சிப்பேன் என அவர் மேலும் தெரிவித்தார்.


# பின்னுக்குப் பதில் மீக்கர்

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஸ்டீவன் பின் காயமடைந்துள்ளதால், அவருக்குப் பதிலாக மற்றொரு வேகப்பந்து வீச்சாளர் ஸ்டுவர்ட் மீக்கர் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

அவர் அடுத்த வாரம் இங்கிலாந்து அணியில் இணைவார். எனினும் முதல் டெஸ்ட் போட்டிக்கு முன்னதாக ஸ்டீவன் பின் காயத்திலிருந்து முழுமையாகக் குணமடையும் பட்சத்தில், மீக்கர் இங்கிலாந்து திரும்பிவிடுவார் என இங்கிலாந்து கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திய 'ஏ' அணிக்கு எதிரான முதல் பயிற்சிப் போட்டியின்போது ஸ்டீவன் பின்னுக்கு காயம் ஏற்பட்டது. இதையடுத்தே ஸ்டுவர்ட் மீக்கர் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளார். அவர் இதுவரை 2 ஒருநாள் போட்டிகளில் மட்டுமே விளையாடியுள்ளார்.

# தொடரை வென்றது நெல்லியடி மத்திய ம.வி.





(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரி அணிக்கெதிரான மாபெரும் ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடரை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி கைப்பற்றிக் கொண்டது.

வடக்கின் பெரும் போர் கிரிக்கெட் போட்டி போன்று வடமராட்சி கல்வி வலயத்திலும் ஆண்டு தோறும் நடத்தும் முகமாக நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணிக்கும், வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி அணிக்குமிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்டஒரு நாள் போட்டியின்இரண்டாவது ஆட்டம் நேற்று முன்தினம் வல்வெட்டித்துறை நெற்கொலு விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய நெல்லியடி மத்தியமகா வித்தியாலய அணி, அங்கதன், தர்சிகன், பிரகாஷ், பிரசாந் ஆகியோரின் ஸ்ராசரியான ஆட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி 48 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டினலன் 15, அங்கதன், தர்சிகன், பிரசாத் ஆகியோர் தலா 17, பிரகாஷ் 19, துவாரகன் 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் விஸ்வகரன் 10 ஓவர்கள் பந்து வீசி 24 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும், பிரதீபன் ஐந்து ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 171 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில்களமிறங்கிய வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி அணி, டினலன், அங்கதன், பிரகாஷ் ஆகியோரின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிக்கொடுத்தது. இறுதியில் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி அணி 22 ஓவர்கள்நிறைவில் சகல விக்கெட்டுக்களையும்இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் சதீஸ்காந் 11, டிசோக் 20, விஸ்வகரன் ஏழு ஓட்டங்களைப் பெற்றனர். மற்றைய அனைத்து வீரர்களும் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் டினலன் 9 ஓவர்கள் பந்து வீசி 13 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும், அங்கதன்நான்கு ஓவர்கள் பந்து வீசி ஒன்பது ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும், பிரகாஷ் 8 ஓவர்கள் பந்து வீசி 43 ஓட்டங்களைக் கொடுத்துமூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். இவ் வெற்றியின் மூலம் இரண்டு போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரை 2-0 என்ற கணக்கில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி கைப்பற்றிக் கொண்டது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக அங்கதனும், தொடர் நாயகனாக டினலனும், சிறந்த ககலதுறை வீரராக பிரகாஷும், சிறந்த பந்து வீச்சாளராக டினலனும், சிறந்த களத்தடுப்பாளராக விஸ்வரூபனும், சிறந்த துடுப்பாட்ட வீரராக டிசோக்கும் தெரிவு செய்யப்பட்டனர்.

இப்போட்டி நிகழ்வில் வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த உயர் கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டுகளித்தமை குறிப்பிடத்தக்கது. (12)

## விளையாட்டுச் செய்திகள்

# விரைவில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்படும் பிரிவு மூன்றின் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டிகள் விரைவில் நடைபெற ஏற்பாடாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்போட்டிகள் ஆரம்பமாகவுள்ள நிலை யில் யாழ். மாவட்ட பாடசாலை கிரிக்கெட் அணிகள் தீவிர பயிற்சிகளை மேற்கொண்டு வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளமை குறிபபிடத்தக்கது. (எஸ்.பி.)

# உலக சம்பியன்ஷிப் கரம் இலங்கை வீரர் முதலிடம்



ஆறாவது உலக சம்பியன்ஷிப் கரம் போட்டிகளின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இலங்கை அணித் தலைவர் நிஷாந்த பெர்னாண்டோ சம்பியன் பட்டத்தை வெற்றிகொண்டுள்ளார்.

இறுதிப் போட்டியில் இந்தியாவின் சி.பாரதி தாஸனைத் தோற்கடித்து அவர் வெற்றியை உறுதி செய்தார்.

போட்டியில் 2-0 என்ற சுற்றுக்கள் கணக்கில் பெர்னாண்டோ வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது.

சம்பியன் பட்டம் வென்றமை குறித்து கருத்துத் தெரிவித்த நிஷாந்த பெர்னாண்டோ, வெற்றி மகிழ்ச்சி அளிக்கின்றது. மேலும் சாதிக்க வேண்டும் என்ற உத்வேகத்தைத் தருகின்றது.

எதிர்வரும் காலங்களிலும் தாய் நாட்டிற்காக பல வெற்றிகளைத் தேடிக் கொடுக்க வேண்டும் என்பதே எனது பெரு விருப்பம். அந்த இலக்கில் நிச்சயம் வெற்றி பெறுவேன் எனவும் அவர் தெரிவித்தார்.

# மைதானத்தைப் பார்வையிட்ட ஜேர்மன் குழு




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டு வரும் கால்பந்தாட்ட மைதான வேலைகளைப் பார்வையிட்ட ஜேர்மன் தூதரக அதிகாரிகள் குழு, குறித்த காலப்பகுதியில் வேலைகள் நிறைவடைவதையிட்டு மகிழ்வடைவதாகத் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் ஏ-9 வீதி நெடுங்குளம் சந்தியில் கால்பந்தாட்டப் பயிற்சி மைதானம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. இந்த மைதானமானது ஜேர்மன் அரசு மற்றும் பீபா அமைப்பின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டு வருகின்றது. இந்த மைதான வேலைகளின் நிலைமை பற்றியும் அதன் தன்மை பற்றியும் ஆராய்வதற்காக ஆறு பேர் கொண்ட ஜேர்மன் தூதரக அதிகாரிகள் குழு நேற்று முன்தினம் மைதான வேலைகளைப் பார்வையிட்டது. வேலைகள் குறித்த காலப்பகுதியில் நிறைவடைவதையிட்டு தாம் மகிழ்வடைவதாகவும் தெரிவித்தது.


இக்குழுவில் ஜேர்மனின் உள்நாட்டு அபிவிருத்தி ஒத்துழைப்பு அமைச்சின் தெற்காசிய நாடுகளுக்கான தலைமை அதிகாரி டாக்டர் தோமஸ் கெல்வின், ஜேர்மனின் உள்நாட்டு அபிவிருத்தி ஒத்துழைப்பு அமைச்சின் வெளிநாடுகளுக்கான தலைமை அதிகாரி குயின்ரர் ஜோசேப், ஜீ.ரி.இசற் நிறுவனத்தின் தெற்காசியாவுக்கான தலைமை அதிகாரி திருமதி சந்திரசென்கே மற்றும் ஜேர்மனின் தெற்காசியா, ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானுக்கான அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் திருமதி இளொட் ஆரீஸ் உட்பட ஆறு பேர் வருகை தந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக்கின் தலைவர் அன்ரனிப்பிள்ளையும் கலந்து கொண்டார்.

இந்த மைதானம் எதிர்வரும் 19ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி., இ)



# அரசுக்குப் பயன்படுவாரா கே.பி.?

- என்.சத்தியமூர்த்தி கட்டுரையிலிருந்து.



அரசைப் பொறுத்தவரையில், இனப் பிரச்சினைக்கான தீர்வு உள்நாட்டினுள் பேசித் தீர்க்கப்பட வேண்டிய விடயம் என்பதில் தெளிவாக இருக்கிறது. அதுவே உண்மையும் கூட. ஆனால், கடந்த தசாப்தங்களில் தங்களது அனுபவத்தை வைத்துப் பார்க்கும் கூட்டமைப்பு தமிழ்த் தலைமைகள் சர்வதேச சமூகத்தின் அழுத்தம் இருந்தால் மட்டுமே அரசு நியாயமான தீர்விற்கு வழிவகுக்கும் என்று வெகுவாக நம்பி வந்துள்ளன. இந்தப் பின்னணியில், புலம் பெயர்ந்தோரை தமிழ் சமுதாயத்தின் ஓர் அங்கமாக அரசு பார்க்கிறதா, அல்லது சர்வதேச சமூகத்தின் கைப்பாவையாகக் கருதுகிறதா என்பது தெளிவுபடுத்தப்படவில்லை.

ஆனால், கேபி-யை பொறுத்தவரை, அவரை அரசின் கைப்பாவையாக மட்டுமே தமிழ் சமூகத்தின் பெரும்பான்மையினர் கருதுகிறார்கள். அது துரதிர்ஷ்டமான தவறான எண்ணமாகக் கூட இருக்கலாம். ஆனால், எப்படி புலம்பெயர் தமிழர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அரசின் நம்பிக்கைக்குரிய தமிழர் ஒருவர் தேவைப்படுகிறாரோ, அந்த நபர் புலம்பெயர்ந்தோரின் மரியாதையையும் தொடர்ந்து பெற்றவராக இருக்க வேண்டும் என்பதும் அவசியமாகிறது. இனப் போர் முடிந்த சில வாரங்களிலேயே தென் கிழக்கு ஆசியாவில், கே.பி அதிரடியாகக் கைது செய்யப்பட்டது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆதரவாளர்களுக்கு அதிர்ச்சியாக இருந்தாலும், பின்னர் அவர் அரசின் பக்கத்தில் சாய்ந்து விட்டார் என்ற எண்ணம், அவர் மீதான நம்பிக்கையைத் தொலைத்துவிட்டது. இந்த பின்னணியில் புலம்பெயர்ந்த தமிழர்களிடையே கே.பி-யால் சாதிக்க முடிவது எதுவுமே இல்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் சார்ந்த உள்நாட்டு தமிழ் சமூகம் மற்றும் புலம்பெயர்ந்தோர் குழுக்களைப் பொறுத்த வரையில் ஒரு விடயத்தில் உறுதியாக இருக்கிறார்கள். அதாவது, இயக்க தலைமை "எதிரி" என்றோ, அல்லது "துரோகி" என்றோ பச்சை குத்தியவர்களை எந்த எதிர்க் கேள்வியும் இன்றி அவ்வாறே ஏற்றுக்கொள்ள தங்களை பல ஆண்டுகளாகவே பழக்கப் படுத்திக் கொண்டுள்ளனர். அவர்களைப் பொறுத்த வரையில், கே.பி ஒரு "துரோகி". கே.பி-யின் கூற்றிற்கு அவர்கள் கொடுக்கும் மரியாதையும் அந்த அளவிலேயே இருக்கும். கே.பி-யை முன் வைத்து அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று அரசு உண்மையிலேயே கருதினால், அது மலையைக் கல்லி எலியைப் பிடிக்கும் முயற்சியாகவே முடியும்.

கே.பி-க்கு முன்னரும் விடுதலை புலிகள் இயக்கம் "துரோகி" என்று முத்திரை பதித்த சிலர் இருந்துள்ளனர். மாத்தையா உட்பட்ட அவர்களில் பலரையும் விடுதலை புலிகள் தலைமையே காவு கொடுத்துள்ளது. பிற்காலத்தில் கருணா மற்றும் பிள்ளையான் போன்றோர் அந்த லிஸ்டில் சேர்ந்தார்கள். அவர்களது பிரிவு விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு பேரிழப்பு என்பதை பின்னர் அரங்கேறிய நிகழ்சிகள் தெளிவுபடுத்தின. என்றாலும், அவர்கள் பிரிந்து செல்லும் போது, விடுதலைப் புலிகள் இயக்கம் மற்றும் பிரபாகரன் தலைமையின் செல்வாக்கும் அதன் மேலான நம்பிக்கையும் சற்றும் குறைந்திருக்கவில்லை.

பின்னர் கிழக்குப் பிராந்திய போரில் விடுதலைப் புலிகள் இயக்கம் தொடர் தோல்விகளைச் சந்திக்கத் தொடங்கிய பின்னரே அவர்களுக்கு கட்டப்பட்டிருந்த "துரோகி" பட்டத்தின் அழுத்தத்தை அதன் ஆதரவாளர்களே புரிந்து கொண்டார்கள். ஆனால், கே.பி-யின் நிலைமை அப்படி இல்லை. இனப் போரில் விடுதலைப் புலிகள் இயக்கம் வெற்றிபெற வாய்ப்பே இல்லை என்ற நிலைமை தோன்றிய பின்னரே, பிரபாகரனுக்கு பின்னர் அதன் தலைமையை ஏற்றுக்கொள்வார் என்ற எதிர்பார்ப்புடனேயே கே.பி, சர்வதேச பேச்சாளராக நியமிக்கப்பட்டார். அவர் சிறைப்பட்டவுடன் அதிர்ச்சி அடைந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆதரவாளர்களின் அந்த அதிர்ச்சி மாறுவதற்கு முன்னரே அவர் அரசின் "கைப்பாவையாக" மாறிவிட்டார் என்ற "துரோக செயலை" ஜீரணிக்க முடியாதவர்களாகவே இன்னமும் இருக்கிறார்கள்.


## பத்து நிமிடத்தில் முடிந்த பாராளுமன்றக் கூட்டம்



25.08.2006 ஆம் திகதி நாடாளுமன்றம் பத்து நிமிடங்களில் கலைந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் நாடாளுமன்ற உறுப்பினர் யோசெப் பரராசசிங்கத்தின் மறைவு பற்றிய அனுதாபப் பிரேரணை மீதான உரைகளின் தொடர்ச்சியே அன்றைய நிகழ்ச்சிநிரல். எம். கே.சிவாஜிலிங்கம் முந்திய அனுதாபப் பிரேரணை தினத்தில் ஆற்றிய உரை முடிவடையவில்லை. மிகுதி உரையை ஆற்றுவதற்கு அவர் சபையில் இருக்கவில்லை. மற்றைய தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களும் சபைக்கு வரவில்லை. சபையில் இருந்த உறுப்பினர்களில் ஒருவரும் உரையாற்ற முன்வராததால் பத்து நிமிடங்களில் சபை நடவடிக்கைகள் முடிவுக்கு வந்தன.

# வசை எனும் கலாசாரம்

மாறி மாறி சாதிப்பெயரால் திட்டுவது, பாலியல் வக்கிரங்களால் ஒடுக்குவது என்பது நம் அன்றாட பண்பாட்டில் ஆழமாக உள்ளது. குழந்தைகளை, நண்பர்களை, அரசியல் தலைவர்களைக் கெட்ட வார்த்தைகளால் அன்னியோன்யமாய் சகஜமாய் குறிக்கும் கலாசாரம் நமக்கு உண்டு. எனக்குத் தெரிந்து கேரளாவில் வசை பாடும் பண்பாட்டுச் சடங்கு ஒன்று உள்ளது. கொடுங்களூர் பகவதி அம்மன் கோயிலில் வருடந்தோறும் பரணி அல்லது பூரப்பாட்டு என்கிற பெயரில் இது நடந்து வருகிறது. மக்கள் கூட்டங்கூட்டமாகப் பயணித்து கோயிலுக்குச் சென்று பகவதி முன்னிலையில் சரளமாக முடிவற்று கெட்ட வார்த்தைகளால் மாறி மாறி திட்டி போட்டியிடுவார்கள். இது மணிக்கணக்காக நடக்கும். பகவதியை விரசமான சொற்களால் அசிங்கப்படுத்தி அதன்வழி வழிபடுவதே நோக்கம். நம்மூர் கானா பாடல்கள் போன்று கற்பனாபூர்வமாக அந்த இடத்தில் தோன்றும் வக்கிரப் பாடல்களும் மரபுவழி வந்த பாடல்களும் உண்டு. இப்போது கேரள அரசு பூரப்பாட்டுக்குத் தடை விதித்துள்ளது. ஏ.ஆர்.ரகுமான் "யோதா" எனும் ஒரு படத்தில் இப்படியான ஒரு பூரப்பாட்டுக்கு இசையமைத்துள்ளார். இதைக் கேட்பவர்களுக்கு நம்முடைய இணைய வெளி சச்சரவுகள் எந்தளவுக்கு இவற்றை ஒத்துள்ளன எனப் புரியும். இணைய பயனர்களும் இவர்களைப் போன்றே கொள்கைப்பிடிப்பு என்ற பாவனையில் வசைமாரி பொழிகிறார்கள். இரண்டும் ஒரு சடங்கைப் போல மக்களின் கூட்டங்கூட்டமான பங்களிப்புடன் நிகழ்கிறது. தடைக்குப் பின் பூரப்பாட்டுக்கு நேர்வது போன்றே சின்மயி விவகாரத்திற்குப் பின் நம் காவலர்கள் கண்காணிக்கிறார்கள் என்கிற பிரக்ஞையுடன் இணைய வசை சடங்கை செய்யப்போகிறோம்.



இணையத்தில் ராஜன் லீக்ஸ் செந்தில் போன்றவர்கள் ஆபாசமான மொழியில் சின்மயியைக் கேலி செய்த பக்கங்கள் இன்று இணையத்தில் படிக்கக் கிடைக்கின்றன. படிக்கிற யாரும் ராஜன் செய்தது குற்றம் என்று ஒப்புக்கொள்வார்கள். சின்மயியோ ஜெயலலிதாவோ யார் கூறும் கருத்துக்களுக்காகவும் அவர்களை ஆபாசமாய் பழிப்பது நியாயமல்ல. இன்னொரு கேள்வி: வசவுப் பண்பாடு நம் சமூகத்தில் ஏற்கனவே வலுவாக உள்ள பட்சத்தில் அதை இணைய உரையாடலுக்கு அரசியல் விமர்சனத்துக்கு ஒருவர் நீட்டிப்பது சரிதானே என்பது.

இல்லை என்பதே பதில். ஏனென்றால் இணையம் என்னதான் கட்டற்ற சுதந்திரம் தந்தாலும் அது தனிவெளி அல்ல. பொதுவெளி. அங்கு நாம் கண்ணியமாகவே இருந்தாக வேண்டும். ஏன் தனிவெளி இல்லை? இணையம் மட்டுமல்ல, தொலைத்தொடர்பு கட்டுமீறிய வளர்ச்சியை அடைந்து வரும் சூழலில் நுண்பேசி குறுஞ்செய்திகள்கூட இன்று தவறான சித்தரிப்புகளுக்கும் சச்சரவுகளுக்கும் இட்டுச் செல்கின்றன. இங்கிலாந்து கிரிக்கெட் வீரர் பீட்டர்ஸன் தன் அணித்தலைவர் ஸ்ட்ரோஸை குறித்து அனுப்பிய அவதூறான குறுஞ்செய்தி மிகப்பெரிய சர்ச்சையைக் கிளப்பியதை அறிவோம். அதை விடுங்கள். இன்று நீங்கள் நுண்பேசியில் நேரடியாகக் கூட ஒரு பரிச்சயமானவரைப் பற்றி கோபமாகப் பேசினால் கூட அது நிமிடங்களில் பலபேருக்கு போய் சேர்ந்து விடுகிறது. ஒரு இலக்கியப் பத்திரிகையில் ஒரு எழுத்தாள நண்பர் வேலை கேட்டுத் தொந்தரவு செய்தார். அவரது அப்பாவை அழைத்து ஆசிரியரிடம் கெஞ்ச வைத்து உணர்ச்சி மிரட்டல் கூட கொடுத்துப் பார்த்தார். ஆனால் பத்திரிகை ஆசிரியர் தொடர்ந்து மறுத்து வந்தார். என்னவென்று விசாரித்தால் "அவருக்கு வேலை கொடுத்தால் என் அலுவலகத்தில் நடப்பதைப் பண்பலை வானொலி போல் நேரலை செய்து கொண்டே இருப்பார். அதனால் வரும் பிரச்சினைகளை சரி செய்யவே எனக்கு நேரம் சரியாக இருக்கும்" என்றார் அவர். எப்படியான பீதிச் சூழலில் பத்திரிகை ஆசிரியர்களே இருக்கிறார்கள் பாருங்கள்.

தொலைதொடர்பு வெளியில் என்ன பிரச்சினை என்றால் அது ஏதோ ஒரு அந்தரங்கமான வெளி போன்ற தோற்றத்தை ஏற்படுத்துகிறது. உண்மையில் பிறந்தநாள் விழாவுக்கு நிர்வாண ஆடையணிந்த ராஜாவின் நிலைமைதான் அதில் பங்கெடுக்கும் எல்லாருக்கும். ஒவ்வொரு சிறு அசைவையும் சொல்லையும் யாரோ எங்கிருந்தோ கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆக, வசைபாடுவது சரியா தவறா -- என்பது முக்கியமல்ல. அதை நாம் எங்கு செய்கிறோம் என்பது தான் முக்கியம். வசையை நாம் மீண்டும் அணுக்கமான குழு வெளிகளில் வைத்துக் கொள்வதுதான் பாதுகாப்பானது. அதாவது மின் அணு சாதனங்கள் அண்டாத எந்த இடங்களிலும் நின்றுகொண்டு யாரை வேண்டுமானாலும் சாதிப்பெயர் சொல்லி, பாலியல் உறுப்புகளைக் குறிப்பிட்டு திட்டிக் கொள்ளுங்கள். அது உங்கள் உரிமை. அதாவது உங்கள் உரிமை, உங்கள் மூக்கு என் மூக்கு நுனியைத் தொடாதவரை தான். "நாயே செருப்பால் அடிப்பேன்" கலாச்சாரத்துக்குள்ளே நாம் இருக்கலாம். அது நம் சமூக இயல்பாகவும் இருக்கட்டுமே. ஆனால் தனிவெளி என்ன, பொது வெளி என்ன என்கிற பிரக்ஞையுடன் இருப்போம்.


ஆர்.அபிலாஷ் கட்டுரையிலிருந்து.

# சினிமா சினிமா



◗ சிம்பு இயக்கவிருந்த கெட்டவன் என்ற படத்தின் நாயகி லேகா வாஷிங்டன். சில நாட்கள் நடந்த படப்பிடிப்போடு திடீரென்று அப்படத்தை கிடப்பில் போட்டார் சிம்பு. அதன்பிறகு ஜெயங்கொண்டான், குவாட்டர் கட்டிங் போன்ற சில படங்களில் நடித்தார் லேகா. இதற்கிடையே கெட்டவனில் உண்டான பழக்கத்தில் சிம்புவுடனேயே சுற்றி வந்தார் லேகா. சிம்பு வாய்ப்பே தரவில்லை என்றபோதும் அவர்களுக்கிடையேயான நட்பு ஓங்கி வளர்ந்து விட்டது. ஸ்டார் ஹோட்டல் விஜயங்கள் அடிக்கடி நிகழ்ந்து வந்தன. இந்த நிலையில், தற்போது ஒரு குறும்படம் இயக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார் லேகா. இதற்கான கதை பற்றி விவாதிக்க அவர் சிம்புவை அணுகியபோது, தனது வேலை போன்று இழுத்துப்போட்டு கதை விவாதத்தில் ஈடுபட்டிருக்கிறார். அது மட்டுமின்றி, வேண்டுமானால் நானேகூட நடித்து தருகிறேன் என்றும் சொல்லி லேகாவின் மனதில் இன்னும் ஆழப்பதிந்து விட்டாராம் சிம்பு.

◗ உலகப் பிரபலமான "வை திஸ் கொலைவெறி" பாடலை எழுதியதோடு, தனுஷே பாடியுமிருந்தார் என்பது எல்லோருமறிந்ததே. இப்போது, தன் தயாரிப்பில், வெளியாகவுள்ள மற்றொரு படத்துக்காகவும், இரண்டு பாடல்களை எழுதியுள்ளார் தனுஷ். யார் பாடப்போகிறார்கள் என்பது இப்போதைக்கு சஸ்பென்ஸ் என்று சொல்லும் இசையமைப்பாளர் அனிருத், இந்தப் பாடல்களையும், கொலைவெறி பாடல் அளவுக்கு ஹிட் பண்ணுவதற்காக முயற்சி எடுத்து வருகிறோம் என்கிறார்.



◗ நடிகர் சிவா தனது காதலியான பட்மின்ரன் வீராங்கனை பிரியாவை மணமுடிக்கிறார். கடந்த 5 ஆண்டுகளாக சிவாவும் பிரியாவும் காதலித்து வந்தனர். தற்போது திருமணம் செய்ய முடிவு செய்துள்ளனர். திருமணம் வரும் 15ஆம் திகதி சென்னையில் நடக்கிறது. சென்னை - 28 திரைப்படத்தின் மூலம் அறிமுகமானவர் சிவா. தொடர்ந்து சரோஜா, தமிழ்ப்படம், கலகலப்பு உள்ளிட்ட படங்களில் நடித்திருக்கும் இவர் தற்போது தில்லுமுல்லு ரீமேக்கில் நடித்து வருகிறார்.

◗ இயக்குனர் கவுதம் மேனன் அஜித் நடிப்பில் "துப்பறியும் ஆனந்த்" என்ற படத்தையும், விஜய் நடிப்பில் "யோஹன்" என்ற படத்தையும் இயக்குவதாக இருந்தது. இப்போது இந்த இரண்டு படத்தையும் கவுதம் மேனன் கைவிட்டுவிட்டார். "துப்பறியும் ஆனந்த் பிரமாண்டமாக தயாரிக்க முடிவு செய்திருந்த புலனாய்வுப் படம். 1920களில் நடப்பது மாதிரியான கதை. திரைக்கதை அமைக்கும் பணிக்கே ஒரு வருடம் தேவைப்படுகிறது. ஆனால் அதற்கான நேரம் இப்போது என்னிடம் இல்லை. அஜித்தும் காத்திருக்க தயாராக இல்லை. அவர் விலகிக் கொண்டார். அதனால் நானும் அதை கைவிட்டுவிட்டேன்.



யோஹன் ஹொலிவுட் பாணியிலான ஆக்ஷன் படம். என் கனவுப் படம் என்றும் சொல்லலாம். ஆனால் முழுக்க ஹொலிவுட் ஸ்டைல்ல பண்றது விஜய்க்கு பிடிக்கவில்லை. நமக்கு ஏத்தமாதிரி மாத்துங்கன்னு சொன்னார். அதில் எனக்கு உடன்பாடில்ல. அதனால் அதுவும் நின்றுவிட்டது. இப்போ யோஹன் கதையை மகேஷ்பாபுவை வைத்து தெலுங்கில் எடுக்கிறேன். சூர்யாவை வைத்து 2013இல் ஒரு சூப்பர் லவ் ஸ்டோரி பண்ணப்போறேன். அவருக்காகவே எழுதின கதை. அடுத்த வருடம் சூர்யாவும் நானும் மீண்டும் இணைகிறோம்" என்கிறார் கவுதம்.

◗ சரியான நேரத்துக்கு வர மாட்டார். இயக்குநர்கள் மற்றும் தயாரிப்பாளர்களின் பேச்சை கேட்கவே மாட்டார் என உச்சத்தில் இருந்த காலத்திலேயே கார்த்திக் மீது பல குற்றச்சாட்டுகள் உண்டு. இப்போது அவரது வாரிசு கௌதம், மணிரத்னத்தின் "கடல்" படத்தில் நடித்து வருகிறார். அப்பாவைப் போல் இல்லாமல் நல்ல விதமாகவே படப்பிடிப்புக்கு ஒத்துழைப்பு கொடுத்து வருகிறாராம். கௌதமை படம் ரிலீஸ் ஆகும் வரை யாரும் சந்திக்க கூடாது என மணிரத்னம் உத்தரவிட்டிருப்பதால், கௌதமின் கால்ஷீட் கேட்டு வரும் இயக்குநர்களிடம் கார்த்திக்கே வாக்குறுதிகள் வழங்கிவருகிறாராம்.

◗ சந்தானம் ஹீரோவாக நடிக்கும், "கண்ணா



லட்டு தின்ன ஆசையா" படத்தை தயாரித்து, அதில் காமெடியனாகவும் நடிக்கிறார், "பவர்ஸ்டார்" சீனிவாசன். இதைத்தொடர்ந்து ஷங்கரின், ஐ படத்திலும் சந்தானத்துடன் இணைந்து காமெடியனாக நடிக்கிறார். இப்படத்தில் சந்தானத்துடன் நடிக்க, இன்னொரு காமெடி நடிகரை தேடிய போது, டாக்டர் சீனிவாசனை சந்தானம்தான் ஷங்கருக்கு சிபாரிசு செய்துள்ளார்.

## காற்றிலும் பலவிதம்

**காற்று என்று நாங்கள் பொதுவாகக் கூறினாலும் ஒவ்வொரு திசையிலிருந்து வீசும் காற்றுக்கு ஒவ்வொரு பெயர் உண்டு. வடக்கிலிருந்து வீசும் காற்று வாடைக்காற்று. தெற்கிலிருந்து வீசுவது தென்றல். கிழக்கிலிருந்து வீசுவது கொண்டல். மேற்கிலிருந்து வீசும் காற்று கோடை. தென்றல் மனிதர்களுக்கும் வாடை மிருகங்களுக்கும் நல்லது எனக் கூறுவர்.**

# அனைத்துப் போராளிகளின் மறுவாழ்விலும் அக்கறை செலுத்த வேண்டும்!

தமிழக அரசியல் வாதிகள் இன்றும் 1983 ஆம் ஆண்டுகளின் போது உள்ள மாயையிலும், தங்களது அரசியல் இருப்புக்காக யார் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் முன்னணியில் இருக்கிறோம் என்பதைக் காட்டவே முயற்சிக்கிறார்கள்.

இந்த அரசியல் இருப்பு முயற்சி இலங்கைத் தமிழர்கள் வாழ்வில் எதனையும் பெற்றுத் தந்துவிடாது. என்பதனையும். "பிரபாகரன் இறந்துவிட்டார் இனி அடுத்த கட்டம் என்ன" என்பதனை தமிழக அரசியல்வாதிகள் சிந்திக்காத வரை தமிழக அரசியல் வாதிகளின் இலங்கைத் தமிழர்கள் தொடர்பாக கூறும் கருத்துக்கள் அவர்களின் கட்சி அரசியலுக்கு சரிவந்தாலும் இலங்கைத் தமிழர்கள் வாழ்வில் எதனையும் ஏற்டுத்திவிடாது.

நமது சமூகம் இன்று மட்டுமல்ல தொன்று தொட்டே ஒரு ஆதிக்க வெறி பிடித்த சமூகம். அந்த சமூகம் "அடுத்த வீட்டின் அடுப்பில் பூனை படுத்தாலும்" கவலைப்படாத சமூகமாக இருந்ததால் தான் பலர் தமிழ் ஈழப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அந்த தமிழ் ஈழத்துக்கு பின்னர் பல அர்த்தம் கொடுக்கப்பட்டாலும் உண்மையில் ஏற்றத்தாழ்வும், இலங்கை அரசின் இனவெறியுமே பலரை இந்தப் போராட்டத்தில் இணைத்து போராளியாக்கியது.

தமிழ் ஈழம் அது கனவாகிப் போய்விட்டது. நம்மில் பலர் நல்ல நிலைமைகளில் இருக்கிறார்கள் அவர்கள் துன்பப்படுபவர்களை இனங்கண்டு உதவிகளைச் செய்ய முன்வரவேண்டும்.

இன்று பலர் பத்து குடும்பங்களுக்கே உதவி செய்ய கூடிய பொருளாதார பலத்தை பெற்று வாழ்கிறார்கள்.. இது அவர்களுக்கு இந்த ஈழப் போராட்டம் ஏற்படுத்திக் கொடுத்தது என்பதை அவர்கள் புரிய வேண்டும்.

இன்று போராளி இயக்கம் என்றால் அது புலிகள் தான் என்றுள்ளது. அப்படியல்ல போராளிகள் என்றால் அது அனைத்து இயக்கங்களிலும் ஆயுதம் ஏந்திப் போராடியவர் களையே குறித்து நின்றது. பின்னர் போராளிகள் என்றால் புலிகள் தான் என்றாகி, மற்றையவர்களின் போராட்டம் தியாகம், எல்லாம் கேவலமாக்கப்பட்டது. மற்றைய போராளி குழுக்களின் தியாகம், அவர்களது அர்ப்பணிப்பு எப்போது புறக்கணிக்கப் பட்டதோ அன்றே ஈழப் போராட்டம் திசை மாறியது.

'புலிப் போராளிகளையும் இன்று தமிழ் சமூகம் ஒதுக்குகிறது. சமூக அக்கறையுள்ளவர்கள் அனைவரும் அவர்கள் கௌரவமாக வாழ மாற்றுவழிகளைத் தேடித்தர வேண்டும். அதுபோலவே பல இயக்கத்திலும் இருந்தவர்கள் இன்று வெவ்வேறுபட்ட பல துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள். அவர்களது துன்பங்களை இந்த தமிழ் சமூகம் உணரவேண்டும் அவர்களது மறுவாழ்வு தொடர்பாகச் சிந்திக்க வேண்டும்.

அப்படி இது தொடர்பாக அக்கறை எடுக்காது போகும் பட்சத்தில் தமிழ் ஈழம், அரசியல் தீர்வு என்பன தொடர்பாக போடும் கோஷங்கள் கட்சியில் உள்ளவர்களையும் அது தொடர்பாக பேசுபவர்களையும் மட்டுமே வாழ வைக்கும் என இந்தப் போராட்டத்தால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணத் தோன்றும்.

அவர்களது எண்ணத்திற்கு வலுசேர்க்க நாம் துணை போகாமல் அவர்களது அடிப்படைத் தேவைகளில் அக்கறை கொள்வோம்.



- அ.செல்வகுமார் கட்டுரையிலிருந்து.

# கிளிநொச்சி சந்தைக்கட்டடத்தின் நிர்மானப்பணிகளை விரைவுபடுத்துக

## — நாமல் எம்.பி, ஆளுநர்பணிப்பு —



(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் அமைக்கப் பட்டுவரும் நவீன சந்தைக் கட்டடத் தொகுதியின் இரண்டாம் கட்டடப் பணிகளை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, வட மாகாண ஆளுநர் ஜிஏ. சந்திரசிறி ஆகியோர் கடந்த வெள்ளிக்கிழமை பார்வையிட் டனர்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 284 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ் நவீனமுறையில் அமைக்கப் பட்டு வரும் சந்தைக்கட்டடத் தொகுதியின் நிர்மாணப்பணி களைப் பார்வையிட்ட நாடாளு மன்ற உறுப்பினர், ஆளுநர் ஆகியோர் கட்டடப் பணிகளை விரைவுபடுத்துமாறு உரிய அதி காரிகளுக்கு பணிப்புரை விடுத் தனர்.

கிளிநொச்சியில் சந்தைக் கட்டடத் தொகுதியின் ரூபா 38 மில்லியன் பெறுமதியான முத லாம் கட்டப்பணிகள் பூர்த்தி யாகி கடந்த செப்ரெம்பர் மாதம் 25ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் திறந்து வைக் கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சமூகபாதுகாப்பு ஓய்வூதியம் நான்கு இலட்சம் பேர் இணைவு

(கொழும்பு)

சமூக பாதுகாப்பு அதிகார சபையின் ஓய்வூதியத் திட்டத் தின் கீழ் நாடளாவிய ரீதியில் 4 இலட்சத்திற்கும் அதிகமான வர்கள் இணைத்துக்கொள்ளப் பட்டுள்ளதாக இலங்கைப் பாது காப்பு அதிகார சபையின் தலை வர் திருமதி சுமணா ஆரியதாச தெரிவித்துள்ளார்.

அரச ஊழியர்களுக்கு மட் டும் ஓய்வூதியம் வழங்கும் திட் டம் நடைமுறையிலிருந்து வந்த காலப்பகுதியில் ஏனைய 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர் கள் பொருளாதாரரீதியில் பெரும் பின்னடைவை எதிர் கொண்டனர்

இதனை நிவர்த்தி செய்யும் வகையில் இலங்கை சமூக பாதுகாப்பு அதிகார சபையால் அறிமுகம் செய்யப்பட்டதே இந்த திட்டம் என அவர் குறிப் பிட்டார்.

தற்போது இந்தத் திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் சுமார் 400,000 இற்கும் அதிகமானவர் கள் இணைத்துக் கொள்ளப்பட் டுள்ளதாகவும், இவர்களில் 11,000 பேருக்கு தற்போது ஓய் வூதியம் வழங்கப்பட்டு வருவதா கவும் அவர் மேலும் குறிப்பிட் டார்.

60 வயதுக்கு மேற்பட்ட காலத்தில் தொழில் செய்து பொருளாதாரத்தில் முன்னேறு வதென்பது மிகவும் கஷ்டம். எனவே தொழில் செய்யும் காலத்தில்பணத்தினைச் சேமித்து முதுமைக்காலத்தில் கௌரவத் துடன் வாழ்வதற்கு இந்த ஓய் வூதியத் திட்டம் பயனுடையதாக இருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மன்னார் குளங்களின் நீர்மட்டம் அதிகரித்தது

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வந்த கடும் மழையினைத்தொடர்ந்து மன் னார் முருங்கன் கட்டுக்கரை குளத்தின் நீரின் மட்டம் தற் போது அதிகரித்துள்ள நிலை யில் கட்டுக்கரை குளத்தில் இருந்து நீர் விநியோகிக்கப்படும 162 குளங்களிலும் தற்போது போதிய அளவு நீர் காணப்படு வதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலை யத்தின் உதவிப்பணிப்பாளர் எம்.ஏ.சி.முகமட் றியாஸ் தெரி வித்தார்.

மன்னார் மாவட்டத்தில் கடந்த 5 மாதங்களுக்கு மேலாக மழை பெய்யாத நிலையில் கடும் வறட்சி ஏற்பட்டிருந்தது. இதனால் விவசாயிகள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வந்ததோடு மக்களும் தமது அன்றாட தேவைகளுக்காக நீரைப் பெற்றுக்கொள்வதிலும் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்து வந்தனர்.

இந்த நிலையில் தற்போது மன்னார் மாவட்டத்தில் பெய்த கடும் மழையின் காரணமாக மன் னார் மாவட்டத்தில் உள்ள அனைத்துக் குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்கள் ஆகியவை நிறைந்த நிலையில் காணப்படு கின்றன.

தற்போது மன்னார் முருங் கன் கட்டுக்கரை குளத்தில் 9.5 அடி தண்ணீர் காணப்படுவதாக அவர் தெரிவித்தார். இந்த நிலை யில் விவசாயிகள் இம்முறை பெரும்போக நெற்பயிர்ச்செய் கையினை மேற்கொள்ளும் போது நீருக்கு தட்டுப்பாடு ஏற் படுவதற்கான சந்தர்ப்பங்கள் இல்லை எனவும் இம்முறை நம் பிக்கையுடன் விவசாய நடவடிக் கைகளை மேற்கொள்வதற்கான சூழ்நிலை அமைந்துள்ளதாகவும் மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப்பணிப்பாளர் எம்.ஏ.சி. முகமட் றியாஸ் மேலும் தெரி வித்தார்.

# வங்காலை மக்களுக்கு வாழ்வாதாரக் கடன்

(மன்னார்)

மன்னார் வங்காலையில் ஒரு தொகை பயனாளிகளுக்கு சம் பத் வங்கியால் வாழ்வாதாரத் திற்கான கடன் வசதி வழங்கும் அங்குரார்ப்பன நிகழ்வானது வங்காலை ஆலய கேட்போர் கூடத்தில் குருமுதல்வர் விக்டர் சோசை தலைமையில கடந்த 31ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்றது.

வங்காலை மக்கள், குரு முதல்வர் மூலமாக மேற்கொண்ட விடாமுயற்சியினால் சம்பத் வங்கியினூடாக இக்கடன் வசதி யினை வழங்குவதற்கான ஏற் பாடுகளை வங்கியின் முகா மையாளரான தங்கராஜா குகநேசன் (குகன்) மேற்கொண் டிருந்தார்.



இக்கடனுதவியானது தெரிவு செய்யப்பட் பயனாளிகள் குழு வொன்றுக்கு தற்சமயம் வழங் கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக் கது.

இந்நிகழ்வில் குருமுதல்வர் உரையாற்றுகையில் இந்த பய னாளிகளின் வேண்டுகோளுக் கிணங்கவே இந்த வசதியினை பெற்றுக் கொடுப்பதற்காக பரிந் துரை செய்ததாகவும், இதிலுள்ள அனைவரும் தமது வாழ்வா தாரத்திதை உயர்த்த மிகவும் துடிப்புடன் செயற்படுபவர்கள் என்பதனையும் வங்கியின் அதி காரிகளுக்கு சுட்டிக் காட்டி னார்.


வங்கியின் பிராந்திய முகா மையாளர் அன்ரன் நிதர்சன் தனது உரையில், பலவருடமாக இருந்த அசாதாரண சூழ் நிலை யின் பின்னர் மன்னாருக்கு வந்த மையையிட்டு சந்தோஷ மடை வதாகவும். தற்போது மக்களா கவே இவ்வாறான முயற்சிக ளில ஒரு குழுவாகச் செயற்படு வதையிட்டும் தான் பெருமைப் படுவதாகவும் கூறியதுடன் கட னைத் திருப்பியளிக்கும் முறை பற்றியும் விளக்கமளித்தார்.

பின்னர் கடனுதவிக்கான முத லாவது காசோலையினை குரு முதல்வர் விக்டர் சோசை வழங்கிவைத்தார். இந்நிகழ்வில் சம்பத் வங்கியின் வன்னிப் பிராந்திய நிறைவேற்று அதி காரிகளான குகதாசன் கோகு லன் மற்றும் ஆனந் தன் ரட்ணச பாபதி ஆகியோரும் பங்குபற்றி னர்.

# அடையாள அட்டைபெற சிரமமா? முறையிட தொலைபேசி இலக்கம்

இந்த வருடம் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட் சையில் தோற்றவுள்ள மாணவர்கள் தேசிய அடையாள அட்டை களைப் பெறுவதில் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் குறித்து முறையிடுவதற்காக விசேட தொலைபேசி இலக்கமொன்று அறிமு கப்படுத்தப்பட்டுள்ளது. 0112583122 என்ற தொலைபேசி இலக்கத்து டன் தொடர்பினை ஏற்படுத்தி மாணவர்கள் தமது முறைப்பாடுகளை தெரிவிக்க முடியுமென ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் ஜகத் விஜேவீர தெரிவித்துள்ளார்.

இந்த வருடம் ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதியுடன் 16வயது பூர்த்தியடைந்த அனைவருக்கும் தேசிய அடையாள அட்டைகளை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளை ஆட்பதிவுத் திணைக் களம் மேற்கொண்டு வருகின்றது. இந்த அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்வதில் ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால் அது தொடர்பாக பரீட்சைக்கு முன்பதாக அதிபர்களும் மாணவர்களும் தமது முறைப் பாட்டினை தொலைபேசி மூலம் தெரிவிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.




**1990ஆம் ஆண்டு யாழ். முஸ்லிம் மக்களின் வெளியேற் றத்தின் 22ஆவது வருடத்தை நினைவு கூரும் முகமாக யாழ்.கிளிநொச்சி முஸ்லிம் சம் மேளனத்தினால் யாழ். ஒஸ் மானியாக் கல்லூரியில் நடை பெற்ற பொதுக் கூட்டத்தில் பேராசிரியர் எஸ்.எச். ஹஸ் புல்லா உரையாற்றுவதையும், சம் மேளனத்தின் தலைவர் எம். எம்.நிலாம் பிரதிமேயர் எம். ரமீஸ், உபதலைவர் எம்.லாபிர் மற்றும் உறுப்பினர் கள் அமர்ந்திருப்பதையும் காணலாம். (105)**

# பாடசாலை மாணவ முதல்வர்கள் முன்மாதிரியாக செயற்படவேண்டும்

## இராமநாதன் மகளிர் கல்லூரி அதிபர்

(யாழ். நிருபர்)

இந்த நாட்டின் எதிர்காலத் தலைவிகளாக விளங்கப் போகும். மாணவிகள் சிறந்த ஒழுக்கமுள்ளவர்களாகவும் ஆசிரியர்களை மதித்து நடக்கும் பண்புள்ளவர்களாகவும் விளங்க வேண்டும் என யா/இராமநாதன் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி கிருஷ்ணபிள்ளை தெரிவித்தார்.

மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் கடந்த புதன் கிழமை நடைபெற்ற மாணவ தலைவிகளுக்கான சின்னம் சூட்டும் விழாவில் உரை நிகழ்த்தியபோதே அதிபர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இராமநாதன் மகளிர் கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் பாடசாலை ஒழுக்காற்றுத் துறை ஆசிரியை திருமதி பி.கேசவனின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் அதிபர் தொடர்ந்து பேசுகையில், நாட்டின் சிறந்த தலைவர்களாக விளங்குபவர் சிறந்த தலைமைத்துவப் பண்பினைப் பாடசாலையில் இருந்தே பெற்றுக்கொள்ள முடிகிறது.

மாணவ தலைவிகள் ஏனைய மாணவிகளுக்கு முன்மாதிரியாக நடந்து அவர்களைச் சிறந்த முறையில் வழிநடத்த வேண்டும் ஒவ்வொரு மாணவ தலைவியும் கடமையுணர்வுடன் செயற்படவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

அதிபர் மாணவத் தலைவிகளுக்கான சின்னங்களைச் சூட்டி வைத்தார். (10)



'திவிநெகும' மனைப் பொருளாதார திட்டத்தின் கீழ் ஜே.87 கிராம அலுவலர் பிரிவில் நாற்றுக்கள் நடுதல் நிகழ்வு கடந்த வாரம் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி வளவில் நடைபெற்ற போது இதில் யாழ். உதவி மேயர் எம்.ரமீஸ், கல்லூரி அதிபர், ஜே.87 கிராம அலுவலர், சமூர்த்தி அலுவலர் மற்றும் ஆசிரியர்களும், மாணவர்களும் கலந்து கொண்டனர். (105)

# ஊர்காவற்துறை பிரதேச சபையின் அபிவிருத்தித்திட்ட பூர்த்தி நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்துறை பிரதேச சபையினால் முன்னெடுக்கப்பட்டுள்ள அபிவிருத்தி வேலைத்திட்ட பூர்த்தி நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை இடம் பெறவுள்ளது.

இதன்படி புறநெகும திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட நாரந்தனை வடக்கு செட்டியார் தோட்ட வீதி, காலை 10 மணிக்கும், நாரந்தனை தெற்கு சூரியாவத்தை வீதி, காலை 10.30 மணிக்கும் ஊர்காவற்துறை முகாம் வீதி காலை 11 மணிக்கும் திறந்து வைக்கப்படவுள்ளது.

மேலும் ஊர்காவற்துறை பேருந்து தரிப்பிட திறப்பு விழாவும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு ஊர்காவற்துறை பிரதேச சபைத் தவிசாளர் ம.ஜெயகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளதுடன் இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி ஆகியோரும் சிறப்பு விருந்தினராக பிரதேச ஒழுங்கிணைப்பு குழுத்தலைவரும் ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சில்வேஸ்திரி அலென்ரின் யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ப.ஜெயகரன் கௌரவவிருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# கலை இலக்கிய விழா

வவுனியா பிரதேசத்தின் கலை இலக்கிய பெருவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை மற்றும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வவுனியா பிரதேச செயலாளர் அ. சிவபாலசுந்தரன் தலைமையில் வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இதன்போது முதலாம் நாளான வியாழக்கிழமை பாடசாலை மாணவர்களுக்கான இலக்கிய நிகழ்வுகளும் மறுநாள் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது.


வவுனியா பிரதேசத்தின் கலாசார வளர்ச்சி மற்றும் மேம்பாடு ஆகியவற்றின் நிமிர்த்தம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந் நிகழ்வுக்கு கலாசார உடை அணிந்து பங்கேற்குமாறு அனைத்து பொது அமைப்புக்களும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (160)

# பாடசாலை மாணவர்களுக்கு மருத்துவ பரிசோதனை

(வவுனியா)

வவுனியா மாவட்ட பாடசாலை மட்டத்தில் மாணவர்களின் போசாக்கு மாற்றும் ஆரோக்கியத்தை சோதனை செய்யும் நோக்கோடு வவுனியா தெற்கு வலய பாடசாலைகளில் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் மருத்துவ பரிசோதனை இடம்பெற்று வருகின்றது. இதில் நேற்று வவுனியா இலங்கை திருச்சபை தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கான பரிசோதனை இடம்பெற்றிருந்தது.

இதன்போது வவுனியா பிரதி சுகாதார வைத்தியஅதிகாரி மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கலந்து கொண்டு மாணவர்களை மருத்துவ சோதனைக்குட்படுத்தியிருந்தனர். (160)



யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த ஜீ.ரி.இசற் நிறுவன உயர் அதிகாரிகள் குழுவினர் வடமாகாணத்தின் அபிவிருத்தி திட்டங்கள் குறித்து நேற்று கலந்துரையாடினர். வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர் விஜயலட்சுமியுடன் கலாநிதி தோமஸ் ஹெல்வின் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் கலந்துரையாடுவதைக் காணலாம். (படம்:- கே.நந்தகுமார்)

# பதிவிருக்கப் பெட்டகம்

யோசிக்கும் சமயத்தில் ஒன்று தெரிகிறது. ஒரு படைப்பு ஒரு கருத்தை மட்டுமே – கருத்தைச் சொல்லக் கூடாது என்று அர்த்தமல்ல – வலியுறுத்தக்கூடிய காரியத்தைச் செய்யுமானால் அந்தப் படைப்புக்கு ஆயுள் குறைவு என்று நினைக்கிறேன். அந்தப் படைப்பு உருவாவதற்கு முன்னாலேயே அந்தக் கருத்து வெளி உலகத்தில் இருக்கிறது. அடுத்தவன் பொருளுக்கு ஆசைப்படாதே என்பது ஒரு கருத்து. அதைச் சார்ந்து ஒரு சிறுகதை எழுதுகிறேன். அதைப் படித்து விட்டு நண்பர்கள் சொல்கிறார்கள். நீ ஒரு கதை எழுதியிருக்கிறாயே. அடுத்தவன் பொருளுக்கு ஆசைப்படாதேன்னு, என்று சொன்னால் என்னைப் பொறுத்தவரையிலே அது ஒரு படைப்பில்லை. ஏனெனில் அந்தக் கதை உருவாவதற்கு முன்னாலேயே அந்தக் கருத்து சமூகத்தில் இருக்கிறது. அந்தக் கருத்தைத் தூக்கி நான் ஒரு படைப்புக்குள் வைத்திருக்கிறேன். எதற்காக அவன் அதைப் படிக்க வேண்டும்? இப்படி உருவாக்கப்படும் படைப்புக்கும் மனுஷனுக்கும் தொடர்பில்லை. அவனுக்கு ஏற்கனவே இருந்த அனுபவத்தை இது விரிவுபடுத்தவில்லை.

இது அவனுக்கு எந்தவிதமான ஆழமான சிந்தனையையும் கொடுக்கவில்லை. ஆகவே படைப்பு என்பது ஒரு புதிய விஷயம். கருத்து சார்ந்தும் மொழி சார்ந்தும் வடிவம் சார்ந்தும் உத்தி சார்ந்தும் புதிதான விஷயம். படைப்பு என்றாலே புதிது புதிதான விஷயம். ஒரு குழந்தை பிறக்கிறது. அந்தக் குழந்தை பிறப்பதற்கு முன்னர் கோடிக்கணக்கான குழந்தைகள் பிறந்திருக்கின்றன. ஆனால் இந்தக் குழந்தை இப்போதுதான் பிறந்திருக்கிறது. இதற்கு முன்னர் பிறக்கவேயில்லை. பெண் குழந்தை பிறந்திருக்கிறது. சிவப்பாக, கறுப்பாக இருக்கக்கூடிய குழந்தை பிறந்திருக்கிறது. ஜாடை ஒரே மாதிரி. ஆனால் இந்தக் குழந்தை இதற்கு முன்னர் பிறக்க வேயில்லை. ஒவ்வொரு படைப்பும் புதிதானது. இப்படிப்பட்ட ஒரு விஷயத்தை உருவாக்கினால் தான் வாசகன் நினைப்பான், இது புதிதாக இருக்கிறதே, இதைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும், சொந்தமாக்க வேண்டும் என்று அவன் சொந்தமாக்கிக் கொள்கிறான். நான் சொந்தமாக்கிக் கொள்கிறேன். தொடர்ந்து ஒரு ஈர்ப்பை அந்தப் படைப்பு தந்து கொண்டிருக்கிறது. அந்த ஈர்ப்பை என் மகனுக்குக் கொடுக்கிறது. என் பேரக்குழந்தைக்குக் கொடுக்கிறது. அப்படித்தான் ஒரு படைப்பு காலத்தில் தொடர்ந்து போய்க் கொண்டிருக்கிறது.

**– சுந்தர ராமசாமி**

படித்த இரண்டு நிமிடத்தில் மறந்துபோய்விட்டால் அது சிறுகதையல்ல, பஸ் டிக்கட். ஒரு வாரம் கழித்தோ ஒரு வருஷம் கழித்தோ ஞாபகம் இருந்து அதை மற்றவரிடம் மாற்றியோ மாற்றாமலோ சொல்ல வைப்பது நல்ல கதைகளில் உள்ள பொதுவான அம்சம். **– சுஜாதா**

ஒரு எழுத்தாளனுக்கும் மொழிக்கும் உள்ள உறவு மிக முக்கியமானது; தனித்துவம் மிக்கது. அவன் பிரயோகிக்கும் குறிப்பிட்ட சில நூறு வார்த்தைகளின் தொகுதி, அவற்றிற்கிடையேயான இசைவில் உள்ள அழகு, பொருட்செறிவு, மொழிநடையின் ஊடாகத் தெரியும் எழுத்தாளனின் அகம் போன்ற பல விஷயங்கள் மிகச் சுவாரஷ்யமானவை. மொழிக்கும் எழுத்தாளனுக்கும் உள்ள உறவில் காணப்படும் நுட்பச்செறிவே இலக்கியத்தின் வெற்றியைப் பெருமளவு தீர்மானிக்கிறது என்று கூறலாம். **– திலீப்குமார்**

எழுதுகிற ஒவ்வொருவரும் தாம் எழுதுகிற விஷயங்களை விடச் சிறந்தவனாகவும், உயர்ந்தவனாகவும் இருக்க வேண்டும். புத்தகம் என்பது வார்த்தைகளின் இறந்து போன நிழல். அதன் பணி ஓர் உண்மையை ஜாடையாகச் சொல்வது. **– மக்ஸீம் கோர்க்கி**

அறிவியல், தத்துவம் ஆகியன போதமனத்தின் வெளிப்பாடுகள். எனவே சூழலாலும், கூட்டுப் பிரக்ஞையாலும் கட்டுப்படுத்தப்படும் தன்மை மிகுந்தவை. கலையும், இலக்கியமும் அபோதமனம் சார்ந்தவை. அதன் எல்லைகள் இதுவரை நம்மால் வகுக்கப்பட முடியாதவை. நாமறிந்திருப்பதை விட மிகவும் சிக்கலானவை. எனவே ஒரு சமூகம் மீதான விமர்சனமாகவும் அதன் முன்னகர்வுக்கான வழிகாட்டியாகவும் அமையும் தகுதி கலைகளுக்கும் இலக்கியத்துக்கும்தான் உண்டு. **– எம்.கோவிந்தன்**

# க.பொ.த. (சாதாரணதர) மாதிரி வினாத்தாள்
# G.C.E. (O/L) Examination model Paper

**கணிதம்**

ஆசிரியர் : A. கிரிதரன்

## பகுதி I

01) 8 பேனைகளின் விலை ரூ. 100 எனின், ஒரு பேனையின் விலையைக் காண்க.

02) கீழுள்ள எண் பரம்பலின் வீச்சைக் காண்க.
6, 9, 10, 11, 17

03) 2x = 14 எனின், x இன் பெறுமானம் காண்க.

04) 24 x 15 = 360 எனின், 0.24 x 15 இன் பெறுமானத்தைக் காண்க.

05) இடைவெளிக்குப் பொருத்தமான உறுப்பை எழுதுக.
$a^2 + 2ab = a(.........+ 2b)$

06) (+6) x (-3) பெறுமானம் காண்க.

07) இடைவெளிக்குப் பொருத்தமான எண்ணை எழுதுக.
7, 11, ..........., 19, 23

08) a x b x a சுட்டி வடிவில் எழுதுக.

09) 1 மீற்றர் கனத்தில் எத்தனை லீற்றர் உண்டு?

10) $x^0$, $62^0$ என்பன மிகை நிரப்பு கோணங்களாகும். $x^0$ இன் பெறுமானம் காண்க.

11) எண் பரம்பலில் முதலாம் காலணை 5 உம் காலணை இடை வீச்சு 15 உம் ஆகும். மூன்றாம் காலணையைக் காண்க.

12) தசமத்தில் தருக $\frac{2}{15}$


13) மோட்டார் வாகனம் 5 மணித்தியாலயத்தில் 200 km தூரம் செல்கிறது. மோட்டார் வாகனத்தின் வேகத்தினைக் காண்க.

14) பெறுமானம் காண்க. $\log_4 64$

15) பெட்டியொன்றை ரூ. 900 விற்பனை செய்வதன் மூலம் 10% நட்டம் ஏற்பட்டது. அப்பெட்டியின் கொள்விலையைக் காண்க.

16) பெறுமானம் காண்க. $\sqrt{12} \times \sqrt{3}$


17) தரப்பட்டுள்ள செவ்வகம் ABCD இன் பரப்பளவிற்கான இருபடி சமன்பாட்டினை எழுதுக.




18) xy = 54 உம் x : y = 3 : 2 ஆகும். x, y இற்குப் பொருத்தமான இரு முழு எண்களும் எவை?


19) பொதுமடங்கில் சிறியதைக் காண்க. 12, 20, 30

20) உருவின்படி A இலிருந்து B இன் திசைக்கோள் யாது?




21) 3y - 2x = 4 இனால் காட்டப்படும் ஏகபரிமான சமன்பாட்டின் படித்திறனைக் காண்க.

22) உருவில் $B\hat{A}C = 40$, CA//DE ஆகும். $E\hat{D}C$ இன் பெறுமானம் காண்க.





23) நாணயமொன்றை இரு முறைகள் மேலே எறியும்போது கிடைக்கும் மாதிரி வெளியை தெக்காட்டின் தளத்தில் காட்டுக.

24) காரணிப்படுத்துக. a (x-2) + b (2-x)

25) A = {a, b, c}, B = {a, c} ஆகும். கீழுள்ளவற்றில் உண்மை கூற்றை தெரிக.
i) n (A) = 5 ii) A⊂B
iii) A∩B = {a, c} iv) A∪B = {a, b, c}


26) உருவில் தரப்பட்டுள்ளது அரைவட்ட தகடாகும். அதன் ஆரை r ஆகும். தகட்டின் சுற்றளவிற்கான கோவையை π , r இல் தருக.




2 7 ] இரண்டு + 1011 இரண்டு

28) $1936 = 2^4 \times 11^2$ ஆகும். $\sqrt{1936}$ காண்க.

29) தரப்பட்டுள்ள வட்டத்தின் மையம் O ஆகும். BAC = a, COD = b ஆகும். a, b இடையிலான தொடர்பை எழுதுக.




30) $K = \frac{a}{b}$ எனின், $\frac{K}{K-1}$ சூத்திரத்தினை a,b இல் எழுதுக.

## பகுதி B

01) a) வருடத்திற்கு 8% கூட்டுவதற்கு நிமல் ரூ. 50 000 ஐ கடனாகப் பெறுகிறார். 6 மாதங்களுக்கு ஒரு முறை வட்டி செலுத்த வேண்டும்.
i) முதல் 6 மாதங்களுக்குரிய வட்டியைக் காண்க.
ii) 1 1/2 வருடங்களுக்குப் பின் கடனிலிருந்து மீளுவதற்கு செலுத்த வேண்டிய முழுத்தொகை எவ்வளவு?

b) காணி ஒன்றை A,B இற்கிடையில் 2:3 விகிதத்திலும் B, C இற்கிடையில் 2:3 விகிதத்திலும் பகிரப்படுகிறது. முழுக்காணியில் சரிபாதி C இற்கு கிடைக்காதென சுமனபால கூறுகிறான். நீங்கள் சுமனபாலவின் கருத்துடன் உடன்படுகின்றீர்களா? காரணம் தருக.

02) p, q, 11, r, 19 என்பது கூட்டல் விருத்தியொன்றின் முதல் 5 உறுப்புகளாகும்.
a) r இன் பெறுமானத்தினைக் காண்க.
b) p, q இன் பெறுமானத்தினைக் காண்க.
c) 99 எத்தனையாம் உறுப்பாகும்.
d) இவ்விருத்தியின் முதல் 25 உறுப்புகளின் கூட்டுத்தொகையைக் காண்க.

03) a) கனவுரு வடிவ உலோக குற்றியின் நீளம் 1 m உம் அகலம் 75 cm உம் 60 cm உயரமும் ஆகும். அக்குற்றியின்
i) மேற்பரப்பின் பரப்பளவைக் காண்க.
ii) கனவளவைக் காண்க.

b) மேற்படி உலோக குற்றியை உருக்கி சிறிதளவேனும் வீணாகதவாறு உருவில் காட்டியபடி அரியங்கள் செய்யப்படுகின்றன.
i) செய்யப்பட்ட அரியமொன்றின் கனவளவைக் காண்க.
ii) செய்யப்பட்ட அரியங்களின் எண்ணிக்கை யாது?





04) a) Ɛ = {a,b,c,d,e,f,g,h}
P = {a,d,f}
Q = {b,d,f,h ஆகும்.
மேற்படி தொடைகளை பாவித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.
a) P ∩ Q எழுதுக.
ii) P ∪ Q எழுதுக.
iii) $(P \cap Q)^1 = P^1 \;\; Q^1$ எனக் காட்டுக.

b) $P(A \cap B) = \frac{5}{6}$, $P(A) = \frac{2}{3}$, $P(B) = \frac{1}{6}$ ஆகும்.

i) $P(A \cap B)$ காண்க

ii) " A, B நிகழ்வுகள் தம்முள் புற நீக்கும்" இக்கருத்துடன் உடன்படுகிறீர்களா? விளக்குக.

05)




சதுர வடிவ பீங்கான் ஓடுகள் இரண்டு உருவில் காட்டப்பட்டுள்ளது.

a) i) பீங்கான் ஓட்டின் பரப்பளவினைக் காண்க.

ii) பீங்கான் ஓடுகள் இரண்டினதும் பரப்பளவுகளுக்கிடையிலான விகிதத்தினைக் காண்க.

b) நீளம் 4.2 m உம் அகலம் 1.8 m உம் உடைய செவ்வக வடிவ நிலத்திற்கு பீங்கான் ஓடுகள் பதிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. குறைந்த செலவில் இந்நிலத்திற்கு பதிக்க நீர் உத்தேசிக்கும் ஓடு எவ்வகையானது? விடையை தெளிவுபடுத்துக.

## பகுதி II

### பகுதி A

01) i) ஆண்டுப் பெறுமானம் ரூ. 60 000 உடைய வீட்டிற்கு மாநகர சபை 18% ஐ ஆண்டு வரியாக அறவிடுகின்றது. இவ்வீடு ரூ. 4000 மாத வாடகைக்கு விடப்பட்டுள்ளது. ஆண்டுப் பெறுமதியின் 42.5% வருடாந்தம் வீட்டைப் புனர்நிர்மானம் செய்வதற்காக செலவிடப்படுகின்றது. வரி, புனர்நிர்மானம் என்பன கிடைக்கும் வாடகைப் பணத்திலேயே மேற்கொள்ளப்படுகின்றது.

a) காலாண்டு வரியைக் கணிக்க.
b) புனர்நிர்மானத்திற்காக வருடத்திற்குச் செலவாகும் பணத்தைக் காணக.
c) அவ்வீட்டினால் வருடத்திற்கு கிடைக்கும் தூய இலாபம் எவ்வளவு?

02)
i) $y = x^2 - 4x + 2$ சார்பின் வரைபை வரைவதற்குரிய பூரணமற்ற அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| x | -1 | 0 | 1 | 2 | 3 | 4 | |
|---|---|---|---|---|---|---|---|
| y | 7 | 2 | -1 | -2 | | 2 | 7 |

a)
i) x = 3 ஆக இருக்கும்போது y இன் பெறுமானத்தைக் காண்க.
ii) பொருத்தமான அளவிடையைக் கொண்டு சார்பின் வரைபை வரைக.
b) சார்பு மறையாகும் x இன் பெறுமான ஆயிடையை எழுதுக.

c)
i) $x^2 - 4x + 2 + (x+a)^2 + b$ என எழுத முடியும் எனக் காட்டுக. (இங்கு a, b இன் பெறுமானங்கள் குறிப்பிடப்பட வேண்டும்)


ii) நீர் வரைந்த வரைபு y அச்சு வழியே 3 அலகுகள் கீழ்நோக்கி நகர்த்தப்படுகிறது. புதிய அமைவின் உச்சிப் புள்ளியின் ஆள்கூறுகளை எழுதுக.

03) a) $A = \begin{pmatrix} 0 & 1 & 3 \\ 6 & 4 & 2 \end{pmatrix}$ $B = \begin{pmatrix} 1 & 2 & 4 \\ 5 & 3 & 1 \end{pmatrix}$ ஆகும். கீழுள்ள
1) A + B ii) A - B iii) 2 A + 3B தாயங்களைக் காண்க.
b) தீர்க்க $\frac{1}{x+2} + \frac{2}{x^2+4}$

04) a) கப்பல் ஒன்று O எனும் துறைமுகத்திலிருந்த $035^0$ திசைக்கோளில் 150 km தூரம் பயணம் செய்து B எனும் துறைமுகத்தை அடைந்தது. அதிலிருந்து $120^0$ திசைகோளில் 100km பயணம் செய்து C துறைமுகத்தை அடைந்தது.

i) 1 cm இனால் 25 km எனும் அளவிடைக்கு மேற்படி தரவுகளை அளவிடை படத்தில் குறிக்க.
ii) துறைமுகம் O விலிருந்து துறைமுகம் C இற்கு உள்ள உண்மைத் தூரத்தைக் காண்க.
iii) O இலிருந்து C இன் திசைக்கோள் யாது?

b) முக்கோணி ABC இல் h AB DC ஆகும்.
AC = 20 cm, BD = 10 cm ξ
$A\hat{C}B = 35^0$ உம் ஆகும்.




i) AB இன் நீளத்தைக் காண்க.
ii) ADB காண்க.

05) தேயிலை கொழுந்து சேகரிக்கும் ஒருவர் தொழிற்சாலைக்கு குறிப்பிட்ட கால எல்லையினுள் வழங்கிய கொழுந்துகளின் அளவு தரப்பட்டுள்ளது.

| நா.ஒ.வ.கொ (kg) | 50-54 | | | 65-69 | 70-74 | 75-79 | 80-84 | 85-89 |
|---|---|---|---|---|---|---|---|---|
| நா.எ.கை (மீடிறன்) | 8 | 19 | 30 | 33 | 13 | 11 | 9 | 2 |

a) அட்டவணையிலுள்ள தரவுகளின் இடைய வகுப்பைக் காண்க.

b) நாளொன்றிற்கு வழங்கிய தேயிலைக் கொழுந்துகளின் இடையைக் கணிக்க.

c) அக்கால எல்லையினுள் அவர் வழங்கிய தேயிலைக் கொழுந்துகளின் மொத்த நிறை எவ்வளவு?
d) எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட நாளொன்றில் வழங்கிய தேயிலைக் கொழுந்துகளின் நிறை 65 Kg இலும் அதிகமாயிருப்பதன் நிகழ்தகவினைக் காண்க.

06) a) முக்கோணி ABC இல் A உச்சியிலிருந்து பக்கம் BC இற்கு வரையப்படும் செங்குத்தின் அடி D ஆகும். AD = (x+1) cm, BC = (2x) cm முக்கோணி ABC இன் பரப்பளவு 12 $cm^2$ ஆகும்.

i) மேற்படி தரவுகளினூடாக இருபடி சமன்பாடு ஒன்றை உருவாக்குக.
ii) x இன் பெறுமானம் காண்க.

b) $3x - 2 \geq 5x - 6$ சமனிலியைத் தீர்க்க, தீர்வை எண் கோட்டின் மீது குறிக்க.

### பகுதி B

07) a) இரண்டாம் உறுப்பு 7 உம் எட்டாம் உறுப்பு 19 உம் உடைய கூட்டல் விருத்தி ஒன்றில்,
i) முதல் உறுப்பையும் பொது வித்தியாசத்தையும் காண்க.

ii) முதல் எத்தனை உறுப்புகளின் கூட்டுத்தொகை 480 ஆகும்.

b) 2 இற்கும் 18 இற்குமிடையில் பெருக்கலிடையைக் காண்க.

08) cm /mm அளவிடையையும் கவராயமும் மட்டும் பயன்படுத்தி,

a) AB = 6 cm, BC = 8 cm, $A\hat{B}C = 90^0$ ஆகுமாறு முக்கோணி ABC ஐ அமைக்க

b)
i) AC இன் நீளத்தினை அளந்து எழுதுக.
ii) AC இன் நீளத்தைக் காண்பதால் உமது விடையை உறுதிப்படுத்துக.

c) முக்கோணி ABC இன் சுற்று வட்டத்தினை அமைக்க. சுற்று வட்டத்தில் விட்டம் உண்டா? அதனைப் பெயரிடுக.


09) a) நடுப்புள்ளி தேற்றத்தை சொற்களில் விபரிக்குக.

b) முக்கோணி KLM இன் பக்கங்களின் நடுப்புள்ளிகள் X, Y, Z ஆகும். முக்கோணி KLM இன் சுற்றளவு முக்கோணி XYZ இன் சுற்றளவின் இரு மடங்கு எனக் காட்டுக.

c) உருவில் பக்கங்கள் PR, AC என்பவற்றின் நடுப்புள்ளி K உம், பக்கங்கள் PQ, AB என்பனவற்றின் நடுப்புள்ளி H உம் ஆகும்.

i) BC = QR எனவும்,

ii) BCRQ ஒரு இணைகரமாகும் எனக் காட்டுக.



10) a) பொருத்தமான வெண்வரிப்படத்தை பாவித்து,


$A \cup (B \cap C) = (A \cup B) \cap (A \cup C)$ என்பதை உய்த்தறிக.

b) பெட்டியொன்றில் நீல நிறப் பேனைகள் 8 உம் சிவப்பு நிறப் பேனைகள் 3 உம் உள்ளன. எழுமாறாக ஒரு பேனை வெளியே எடுக்கப்பட்டு நிறம் குறித்த பின்னர் அது மீண்டும் பெட்டியில் இடாமல் பெட்டியிலிருந்து இன்னுமொரு பேனை எடுக்கப்படுகிறது. மாதிரி வெளியை மரவரிப்படம் ஒன்றில் காட்டுக.

i) வெளியே எடுக்கப்பட்ட இரு பேனைகளும் சிவப்பு நிறமாக இருத்தல்.
ii) வெளியே எடுக்கப்பட்ட இரு பேனைகளும் ஒரே நிறமாக இருத்தலின் நிகழ்தகவினைக் காண்க.

11)
a) K, L, M, N என்பன வட்டத்தின் பரிதியில் மீதுள்ளன.
$L\hat{K}N + L\hat{M}N = 180^0$ என முறையாக நிறுவுக.

b) ABCD ஒரு வட்ட நாற்பக்கங்களாகும். PQ// DC ஆகும். A,B, Q, P எனும் புள்ளிகள் ஒரு வட்டமாகும் என நிறுவுக.




12) a) அடியின் ஆரை r உடையதும் உயரம் h உடையதுமான சிலின்டர் ஒன்று உருக்கி விட்டம் r உடைய கோளம் ஒன்று செய்யப் படுகிறது. உருக்கும்போது உலோகம் வீணாகவில்லை எனக் கொள்க. சிலின்டரின் உயரத்திற்கும் அதன் ஆரைக்குமிடையிலான விகிதம் 1: 6 எனக் காட்டுக.

b) மடக்கை அட்டவணையை பயன்படுத்தி பெறுமானம் காண்க.

$$\frac{2.05^3 \times 0.718}{\sqrt{9.172}}$$


இவ் வினாத்தாளுக்கான விடைகள் கல்விமுரசில் எதிர்வரும் சனிக்கிழமை (10.11.2012) வெளிவரும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

# புலமைப பரிசில பரீடசை
# பொது அறிவு வழிகாடடி


**பொதிகள் தொடர்பாகப் பயன்படுத்தும் இலட்சினைகள்**




ஈரலிப்பிலிருந்து பாதுகாக்கவும்



உடையக்கூடிய பொருட்கள்



கவனமாகப் பாதுகாக்கவும்



எப்போதும் மேல்நோக்கி வைக்கவும்


**இடங்களை இனங்கானல் தொடர்பான இலட்சினைகள்**




ஊனமுற்றோர்



தொலைபேசி வசதிகள்



உணவகம்



மின்சாரம் வழங்கும் இடம்

**தரத்தை உறுதிப்படுத்தும் குறியீடுகள்**

SLS தரமான பொருட்களை நாம் வாங்கிப் பயன்படுத்த வேண்டும் என்பதற்காக எமது நாட்டிலும், சர்வதேச ரீதியாகவும் தரத்தை உறுதிப்படுத்தும் குறியீடுகள் உள்ளன.

SLS (Sri Lanka Standard) இது ஒரு பொருளின் நுகர்வுக்கான தரத்தினை உறுதிப்படுத்துகின்ற குறியீடு ஆகும். இதனை வழங்குவது - இலங்கைத் தரக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் SLS எனும் இக் குறியீடு லேபல்களில் பொறிக்கப்பட்டிருக்கும்.


*இலங்கையில் விற்பனை செய்யப்படும் அனைத்து உணவுப் பொருட்களும் இக் குறியீட்டைப் பெற்று இருத்தல் கட்டாயமானது.*

**ISO** சர்வதேச ரீதியாகப் பொருட்களின் தரம் குறித்து வழங்கப்படும் சான்றிதழ் இதுவாகும்.
,வழங்குபவர் - ஐக்கிய இராச்சியத்தின் (U.K) சர்வதேச தர முகாமைச் சபை.

**SLIM** வழங்குபவர் : Sri Lanka Institute of Marketing (இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனம்)

*சிறந்த நுட்பங்களுடன் கூடிய வியாபார நிலையங்களுக்கு வழங்கப்படும் சான்றிதழ் ஆகும்.*

**மானிகள் கருவிகள்**



மழைவீழ்ச்சியை அளக்கப்பயன்படும் கருவி - மழைமானி (மில்லிலீற்றர் ml)
வெப்ப நிலையை அளக்கப் பயன்படுவது வெப்பமானி
மனித உடலின் சாதாரண வெப்பநிலை
செல்சியஸ் - $37^0 C$
பரனைட் - $98.4^0 F$

வளிமண்டல அமுக்கத்தையோ, வேறு அமுக்கங்களையோ அளக்கப்பயன்படும் கருவி - பாரமானி
காற்றின் திசையை அறிய உதவும் கருவி - திசையறி கருவி.

**பண்டிகைகள்**

எமது நாட்டு மக்களால் தமது மதங்கள் தொடர்பான பல கொண்டாட்டங்கள் கொண்டாடப்பட்டு வருகின்றது. இக் கொண்டாட்டங் களைப் பண்டிகைகள் எனப் பொதுவாக அழைக்கின்றோம்.

இந்துக்களின் பண்டிகைகள்
தைப்பொங்கல், சித்திரைப் புதுவருடப் பிறப்பு, தீபாவளி, நவராத்திரி.

**கிறிஸ்தவர்களின் பண்டிகைகள்**

கிறிஸ்மஸ் (நத்தார்) ஈஸ்டர் (பெரியவெள்ளி), புதுவருடப் பிறப்பு (ஜனவரி முதலாம் திகதி கொண்டாடப்படுகின்றது).

**முஸ்லிம்களின் பண்டிகைகள்**

நபிகள் நாயகம் (ஸல்) பிறந்தநாள்
ஹஜ்ஜீப் பெருநாள்
நோன்புப் பெருநாள் (றம்ழான்)

**பௌத்தர்களின் பண்டிகைகள்**

பெரகரா, வெசாக், பொசன், சித்திரைப் புதுவருடப் பிறப்பு.

ஒவ்வொரு மாதத்திலும் வரும் பௌர்ணமி தினங்கள் பௌத்தர்களால் விசேட தினங்களாகக் கடைப்பிடிக்கப்படுகின்றது. அவற்றில் வெசாக், பொசன் ஆகியவை சிறப்பான பௌர்ணமித் தினங்களாகும்.

இந்துக்களும், பௌத்தர்களும் சித்திரைப் புத்தாண்டைத் தமது தேசிய பண்டிகையாகக் கொண்டாடுவது குறிப்பிடத்தக்கது.

பண்டிகைகள் மக்களது வாழ்வில் புத்துணர்ச்சியைத் தருகின்றது.

# உலக நடைமுறையை பிரதிபலிக்காத ஐ.நா.வின் பாதுகாப்புப் பேரவை



இந்நிலையில், பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டுள்ள ஹர்தீப் சிங் பூரி, அங்கு உரை யாற்றிய போதே மேற்கண்டவாறு குறிப் பிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்: "தற்போதைய ஐ.நா. பாதுகாப்பு பேரவையானது, சிரியா போன்ற பிரச்சினைகளில் நில ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் பிளவுபட்டிருக்கின்றது" என்று குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஐ.நா. பாதுகாப்பு பேரவை திறம்பட செயற்பட வேண்டும் என்றால், அது விரிவுபடுத்தப்பட்டு, ஆசியா, ஆபிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்கா ஆகிய கண்டங்களில் இருந்து மேலும் சில நாடுகளுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும் என்று ஹர்தீப் சிங் பூரி கூறியுள்ளார்.

தற்போதைய அமைப்பால் யாருக்கும் எவ்வித பலனும் இல்லை எனவும் ஐ.நா. பாதுகாப்பு பேரவை நிரந்தர உறுப்பினர் நாடுகளுக்கான வீட்டோ அதிகாரம் தொடர்ந்து வழங்கப்படும் பட்சத்தில் அது குறித்த முழுமையான விவாதம் தேவை என்றும் அவர் கூறியுள்ளார்

தற்போதைய உலக நடைமுறைகளை பிரதிபலிக்கும் வகையில் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு பேரவை இல்லை எனவும் நடைமுறைக்கு ஒவ்வாத வகையில் அந்த அமைப்பு செயற்பட்டு வருவதாகவும் இந்தியா சுட்டிக் காட்டியுள்ளது.

பாதுகாப்பு பேரவை தலைவர் பதவியானது சுழற்சி முறையில் உறுப்பு நாடுகளுக்கு வழங்கப்படும். அதன்படி, இம்முறை தலைவர் பதவியை இந்தியா சார்பில் ஐ.நா.வுக்கான நிரந்தர இந்தியத் தூதுவர் ஹர்தீப் சிங் பூரி பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

இந்தியச் செய்திகள்

# ராஜிவ் கொலை வழக்கு முடிந்தும் அலவன்ஸ் பெறும் ஊழியர்கள்

(சென்னை)

ராஜிவ் காந்தி கொலை வழக்கு விசாரணை முடிந்து 13 வருடங்கள் ஆகிவிட்ட நிலையில் அதற்காக உருவாக்கப்பட்ட சிறப்பு நீதிமன்றத்தில் பணியாற்றிய மாவட்ட நீதிபதிகளும், நீதிமன்ற ஊழியர்களும் "ரிஸ்க் அலவன்ஸ்" என்ற பெயரில் 30 சதவீத கூடுதல் ஊதியத்தை தொடர்ந்து பெற்று வருகின்றனர்.

சென்னையில் உள்ள கூடுதல் செசன்ஸ் நீதிமன்றம்-1ல் தான் 21 ஆண்டுகளுக்கு முன் இந்தக் கொலை வழக்கு விசாரணை தொடங்கியது. 13 ஆண்டுகளுக்கு முன்பே தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டது.

ஆனால், விசாரணை காலத்தில் இந்த வழக்கின் முக்கியத்துவம் மற்றும் ஆபத்துகள் கருதி இதில் பணியாற்றியவர்களுக்கு ஊதியத்துடன் கூடுதலாக 30 சதவீதம் "ரிஸ்க் அலவன்ஸ்" தொகை வழங்கப்பட்டு வந்தது.

இப்போது விசாரணை எல்லாம் முடிந்து வழக்கே முடிந்துவிட்டாலும் இந்த "ரிஸ்க் அலவன்ஸ்" மட்டும் தொடர்ந்து தரப்பட்டு வருகிறது.

இதில் பணியாற்றிய சுமார் 12 ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதிகளும், ஓய்வு பெற்ற ஊழியர்களும் தங்களது பென்சன் தொகையுடன் இந்த 30 சதவீத கூடுதல் தொகையை பெற்று வருகின்றனர்.

இந்த நீதிமன்றத்தில் ஒரே ஒரு நாள் பணியாற்றியிருந்தாலும் கூட "ரிஸ்க் அலவன்ஸ்" கிடைக்கும் என்பதால், இதில் பணியாற்ற பெரும் போட்டியே நடந்து வந்ததும் குறிப்பிடத்தக்கது

# காங்கிரஸ் பொருளாதாரக் கொள்கை; சரி என்கிறார் பிரதமர் மன்மோகன்



இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், தனது அரசாங்கம் முன்னெடுத்துவருகின்ற சர்ச்சைக்குரிய பொருளாதாரக் கொள்கைகள் சரியான நடவடிக்கைதான் என்று வாதிட்டுள்ளார்.

தற்போது எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டாலும், காலப்போக்கில் நாட்டில் வேலை வாய்ப்பைப் பெருக்க இக்கொள்கைகள் பெரிதும் உதவும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

தலைநகர் டில்லியில் காங்கிரஸ் கட்சி நடத்திய பெரும் பொதுக்கூட்டம் ஒன்றில், பல்லாயிரக்கணக்கானோர் முன்னிலையில் பிரதமரும் கட்சியின் பிற தலைவர்களும் உரையாற்றியுள்ளனர்.

இந்தியாவில் பல்பொருள் சில்லறை வணிகத் தொழில்துறையை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு திறந்துவிட அரசாங்கம் எடுத்த முடிவால் இந்திய விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்ற விமர்சகர்களின் வாதம் பிழையானது என்று கலாநிதி சிங் வாதிட்டார்.

நாட்டுக்கு மிகவும் அவசியமான சீர்திருத்தங்களையே இந்த அரசு மேற்கொண்டுவருகிறது என எதிர்காலத்தில் காங்கிரஸ் சார்பில் பிரதமர் வேட்பாளராக நிறுத்தப்படக்கூடியவர் என்று கருதப்படும் ராகுல் காந்தியும் இக்கூட்டத்தில் பேசியுள்ளார்.

# பிளாஸ்டிக் தேசிய கொடிகளை தடை செய்ய அரசு ஆலோசனை

(புதடில்லி)

சிறிய அளவிலான பிளாஸ்டிக் தேசிய கொடிகள் சுகாதாரத்திற்கு கெடுதல் விதிப்பதாலும், கொடி அவமதிப்பு ஏற்பட வழி வகுப்பதாலும், அவற்றைத் தடை செய்வது குறித்து மத்திய அரசு ஆலோசித்து வருகிறது. இதையடுத்து விரைவில் பிளாஸ்டிக் தேசிய கொடிகளுக்கு தடை விதிக்கப்படலாம் என்று தெரிகிறது.

சுதந்திர தினம், குடியரசு தினம், நாட்டுத் தலைவர்கள் நினைவு தினம் போன்ற நாட்களில் தேசிய கொடிகள் அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது. தற்போது பிளாஸ்டிக் பயன்பாடு அதிகரித்துள்ளதால், சிறிய அளவிலான பிளாஸ்டிக் மூலம் தயாரிக்கப்படும் மூவர்ண தேசிய கொடி அதிகளவில் விற்பனைக்கு வருகிறது.

சுதந்திர தினம், குடியரசு தினம் ஆகியவை கொண்டாடிய பிறகு, தேசிய கொடிகள் தரையில் வீசப்படுகிறது. ஆனால் அவை பிளாஸ்டிக் மூலம் தயாரிக்கப்படுவதால், மண்ணை மாசுபடுத்துகிறது.

இதனால் தேசிய கொடி அவமதிப்பு மற்றும் சுற்றுச்சூழல் மாசு ஆகியவை ஏற்படுகிறது. இதை தவிர்க்கும் வகையில், பிளாஸ்டிக் மூலம் தயாரிக்கப்படும் சிறிய அளவிலான தேசிய கொடிகளுக்கு தடை விதிப்பது குறித்து மத்திய அரசு ஆலோசித்து வருகிறது.

# கின்னஸ் சாதனை படைத்த சமையற்கலை நிபுணர் மரணம்




(சென்னை)

சன் டிவியில் ஒளிபரப்பாகி வரும் ஆஹா என்ன ருசி என்ற சமையல் கலை நிகழ்ச்சியை தயாரித்து வழங்கி வந்த பிரபல சமையல் கலை நிபுணர் ஜேக்கப் சகாயகுமார் திடீர் மாரடைப்பால் மரணமடைந்தார்.

மறைந்த ஜேக்கப்புக்கு (வயது - 38) இவர் சன் டிவி மூலம் பிரபலமடைந்தவர் ஜேக்கப். இவரது சமையல் கலை நிகழ்ச்சி மற்ற நிகழ்ச்சிகளை விட வித்தியாசமாக இருந்ததால் குறுகிய காலத்திலேயே பிரபலமானது. சமையல் செய்வதை சமையலறையுடன் நிறுத்தாமல் வெளியிடங்களுக்கும் கொண்டு சென்று ஏரிக்கரையில் சமைப்பது, குளத்தின் நடுவே சமைப்பது, அருவிக்குக் கீழே சமைப்பது என வித்தியாசப்படுத்தினார் ஜேக்கப்.

2010ஆம் ஆண்டு இவர் தொடர்ந்து 24 மணி நேரம் 485 விதமான உணவுகளைத் தயாரித்து கின்னஸ் சாதனையும் படைத்தார்.

# ஆந்திராவையும் விட்டுவைக்காத நிலம் 22 பேர் பலி 60 ஆயிரம் பேர் இடப்பெயர்வு



(ஹைதராபாத்)

ஆந்திராவில் நிலம் புயல் காரணமாக பலத்த மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக கடந்த 5 நாட்களில் அங்கு 22 பேர் பலியாகியுள்ளனர். சுமார் 60 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

வங்கக்கடலில் உருவான நிலம் புயல் கடந்த 31ஆம் திகதி, மாமல்லபுரம் அருகே கரையை கடந்தது. இதனால் வடதமிழகம் மற்றும் தெற்கு ஆந்திரா ஆகிய பகுதிகளில் பலத்த மழை பெய்தது. இந்நிலையில், தமிழக பகுதியில் கரையை கடந்த நிலம் புயல் காரணமாக, தற்போது ஆந்திராவில் பலத்த மழை பெய்து வருகிறது. வெள்ளம் காரணமாக விசாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள ஹேமாத்ரி கட்டா பகுதியில் மக்களை மீட்கும் பணியில் இரண்டு கடற்படை ஹெலிகொப்டர்கள் பயன் படுத்தப்படுகின்றன. இதுவரை இப்பகுதியில் இருந்து 70 பேர் மீட்கப்பட்டுள்ளனர். இதே போன்று, தர்மாவரம் பகுதியில், வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட இரண்டு பஸ்களை மீட்க ஹெலிகொப்டர்கள் பயன்படுத்தப்பட்டன.

மாநிலத்தில் இதுவரை மழை வெள்ளத்திற்கு கடந்த 5 நாட்களில் 22 பேர் வரை பலியாகியுள்ளனர். சுமார் 60 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர். எதிர்பார்க்கப்பட்டதை விட அதிக மழை பெய்ததே பலி எண்ணிக்கை அதிகரிக்கக் காரணம் எனக் கூறப்படுகிறது. வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் போக்குவரத்தும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.


## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..................................

முகவரி : ..................................

பிறந்த ஆண்டு : ..................................


கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் இன்று



(வோஷிங்டன்)

உலகமே பெரும் ஆவலுடன் எதிர்பார்த்துள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் இன்று நடைபெறவுள்ளது. இந்த தேர்தலுக்கான இறுதிக்கட்ட பிரசாரப்பணியில் ஜனாதிபதி பராக ஒபாமாவும், அவரை எதிர்த்து போட்டியிடும் குடியரசுக்கட்சி வேட்பாளரான ரோம்னியும் நேற்றையதினம் தீவிரமாக ஈடுபட்டனர்.

இதேவேளை, அமெரிக்காவில் சாண்டி புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், இராணுவ வாகனங்கள் வாக்குச்சாவடிகளாகப் பயன்படுத்தப்பட உள்ளன. சாண்டி புயல் தாக்குதலில் இருந்து அமெரிக்கா இன்னும் முழுமையாக மீளவில்லை. இன்று அதிபர் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், வாக்குச் சாவடிகள் பலத்த சேதமடைந்துள்ளன. பெரும்பாலான வாக்குச் சாவடிகளில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

சில பகுதிகளில் போக்குவரத்து சீரடையவில்லை. இவற்றால் வாக்குப்பதிவு பாதிக்கப்படாமல் இருக்க, இராணுவ வாகனங்கள் தற்காலிகமாக வாக்குச்சாவடி மையங்களாக மாற்றப்படவுள்ளன. இது குறித்து, நியூஜெர்ஸி மாகாண லெப்டினன்ட் ஆளுநர் கிம் குவாடாக்னோ கூறியது:

புயலால் பாதிக்கப்பட்ட பெரும்பான்மை நியூஜெர்ஸி மக்கள், வாக்குப்பதிவை இரண்டாம் பட்சமாகக் கருதுகின்றனர். அவர்களை வாக்களிக்க வைப்பது பெரும் சிரமமாக உள்ளது. சாண்டி புயல், அதிபர் தேர்தலை சவால் நிறைந்ததாக மாற்றியுள்ளது. அமெரிக்க அதிபரால் ஆளுநருக்குக் கொடுக்கப்பட்ட இராணுவ வாகனங்கள் உள்ளிட்ட அனைத்து உடைமைகளும் தேர்தலுக்காகப் பயன்படுத்தப்படும். இராணுவ வாகனங்களில் வாக்குப்பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த வாகனங்களில் "வாக்குப்பதிவு செய்யலாம்" எனக் குறிப்பிடப்பட்டிருக்கும். நிவாரண முகாம்களில் உள்ள மக்களிடம் வாக்குச் சீட்டு முறையில், வாக்களிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.



சர்வதேச கருத்தரங்கிற்காக சீனா சென்றுள்ள இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம், தலைநகர் பீஜிங்கில் மாணவர்களுடன் கலந்துரையாடுவதனைக் காணலாம்.

# கைதிகள் சித்திரவதையை எதிர்த்து எகிப்தில் பாரியளவில் பேரணி

எகிப்து, இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த போது சுமார் 12 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் மீதான விசாரணை இராணுவ நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் இந்தக் கைதிகள் சிறைகளில் சித்திரவதை செய்யப்படுவதாக மனித உரிமை அமைப்பினர் புகார் தெரிவித்துள்ளனர்.

மேலும் புதிய ஜனாதிபதியாக முகமது முர்சி பதவியேற்ற பின்பும், 150 கைதிகள் சித்திரவதை செய்யப்பட்டுள்ளதாகவும் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதனையடுத்து கைதிகள் சித்திரவதையைத் தடுக்க சடடத்திருத்தம் கொண்டுவர வலியுறுத்தி எகிப்து தலைநகர் கெய்ரோவில் பிரமாண்டமான பேரணி நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு கோஷங்களை முழங்கினர்.

# சிரிய எண்ணெய் வயல்களை கைப்பற்றியது புரட்சிப்படை



சிரியாவின் முக்கிய எண்ணை வயல்களை கைப்பற்றியுள்ளதாக புரட்சிப்படை அறிவித்துள்ளது.

சிரியாவின் தெயிர் எஸார் மாகாணத்தில் முக்கிய எண்ணை வயல்கள் அமைந்துள்ளது. இங்கு உள்ள அல்வார்ட் பகுதியில் கடந்த சில நாட்களாக அதிபரின் படைக்கும், புரட்சியாளர்கள் படைக்கும் இடையே கடுமையான சண்டை நடந்தது. இறுதியாக புரட்சிப்படையின் கட்டுப்பாட்டிற்குள் இந்தப்பகுதி வந்துள்ளது.

இந்தமோதலில் அரசுப்படையினரின் போர் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதுடன், இந்த எண்ணெய் வயல்களைப் பாதுகாத்த 40 காவலர்களும் சுட்டுக் கொல்லப்பட்டதாக கூறப்படுகிறது. முதல் முறையாக எண்ணெய்வயல்களை புரட்சியாளர் கைப்பற்றியுள்ளதாக சொல்லப்படுகிறது.

சிரிய அதிபருக்கு எதிரான புரட்சியாளர்களின் சந்திப்புக்கு கத்தார் நாட்டில் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. 36,000இற்கும் மேற்பட்ட மக்களை பலிகொண்டுள்ள இந்த உள்நாட்டுப்போரை முடிவுக்கு கொண்டுவர சிரியாவின் தலைமையில் மாற்றம் வேண்டும் என்று அமெரிக்கா கூறியுள்ளது.

உலகச் செய்திகள்

# பரசூட் மூலம் குதித்த திருமண தம்பதிகள்




அமெரிக்காவில் உள்ள உத்தாவில் தோயல் நகரை சேர்ந்த பாரசூட் வீரர் ஆலன ரூலி. அதே பகுதியைச் சேர்ந்த பாரசூட் வீராங்கனை எமிலிலு சேரேர். இவர்கள் இருவரும் வானத்தில் இருந்து பாரசூட் மூலம் குதித்து பல சாகச நிகழ்ச்சிகளை செய்துள்ளனர்.

கடந்த 5 ஆண்டுகளாக காதலித்த இவர்கள் புதுவிதமாக திருமணம் செய்து கொண்டு விண்ணில் இருந்து குதிக்க முடிவு செய்தனர். அதன்படி நடு வானில் விமானத்தில் பறந்தபடியே திருமணம் செய்தனர். இவர்களுக்கு பாதிரியார் திருமணம் செய்து வைத்தார்.

அதைத்தொடர்ந்து 5 நிமிடத்தில் இவர்கள் இருவரும் விமானத்தில் இருந்தபடியே பரசூட் மூலம் குதித்து பத்திரமாக தரை இறங்கினர். 13 ஆயிரம் அடிஉயரத்தில் இருந்து குதித்தனர்.

இதுகுறித்து அவர்கள் கூறும்போது, இதற்கு முன்பு பேராகிளைடிங், தண்ணீருக்குள் மூழ்குதல் உள்ளிட்ட பல சாதனைகளை செய்துள்ளோம். அதுபோன்றுதான் இதையும் வேடிக்கையாக செய்தோம் என சாதாரணமாக குறிப்பிட்டனர்

# சீனத் தலைவர் சிலாய் கட்சியிலிருந்து நீக்கம்

(பீஜிங்)

சீனாவின் பிரபல கம்யூனிஸ்ட் தலைவர் போ சிலாய், கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.சீனா கம்யூனிஸ்ட் கட்சியின், சோங்குங் பகுதி தலைவராக இருந்தவர் போ சிலாய். இவரது மனைவி கைலாய். பிரிட்டனைச் சேர்ந்த வர்த்தகர் நீல் ஹேவுட்டை கொலை செய்தது தொடர்பாக, ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.


சீன அமைச்சராகவும் போ சிலாய் பதவி வகித்துள்ளார். சீன அதிபர் அல்லது பிரதமர் பதவி இவருக்கு கிடைக்கலாம், என ஒரு காலத்தில் பேசப்பட்டது.இந்நிலையில், வரும் 8ஆம் திகதி, கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாடு நடைபெற உள்ளது.தற்போதைய அதிபர் ஹூ ஜின்டாவின் பதவிக் காலம் முடிவதால், புதிய ஜனாதிபதி தேர்வு செய்யப்பட உள்ளார்.தற்போதுள்ள சட்டங்களில் மாற்றம் செய்வது குறித்தும், இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட உள்ளது. ஜனாதிபதி ஹூ ஜின்டாவோ தலைமையிலான, 24 பேர் பொலிட் பீரோ கூட்டம் நேற்று முன்தினம் முடிந்தது. இந்தக் கூட்டத்தில், போ சிலாய், நீக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.ஊழல், கட்சிக் கட்டுப்பாட்டை மீறியது உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் அவர் மீது சுமத்தப்பட்டன. பல பெண்களுடன் தகாத உறவு வைத்திருந்தாகவும் இவர் மீது புகார் கூறப்பட்டுள்ளது.

# சர்ச்சைக்குரிய கடற்பகுதியில் சீனக் கடற்படை மீள அத்துமீறல்

(பீஜிங்)

கிழக்கு சீனக்கடலில் உள்ள சர்ச்சைக்குரிய தீவின் கடல் எல்லையில், மீண்டும் சீன போர்க் கப்பல்கள் நுழைந்ததாக ஜப்பான் குற்றம்சாட்டியுள்ளது. கிழக்கு சீனக்கடலில் உள்ள தீவை ஜப்பான், சென்காகு என்றும், சீனா டியாவோயு என்றும் அழைத்து வருகின்றன.

இத்தீவை இருநர்டுகளும் சொந்தம் கொண்டாடிய போதும், தற்போது ஜப்பானின் கட்டுப்பாட்டில் உள்ளது. இங்கு எண்ணெய் மற்றும் கனிம வளம் ஏராளமாக உள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை சீன கப்பற்படையைச் சேர்ந்த 6 கப்பல்கள் இந்தத் தீவுக்கு உட்பட்ட கடற்பகுதியில் நுழைந்தன. இதற்கு ஜப்பான் கடும் கண்டனம் தெரிவித்தது. இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை மீண்டும் 4 சீனக்கப்பல்கள், அந்தத் தீவின் கடல் எல்லைக்குள் வந்ததாக ஜப்பான் குற்றம் சாட்டியுள்ளது.



ஜப்பான் வெளியுறவுத் துறை துணை அமைச்சர் சிகாவோ கவாய் இது குறித்துக் கூறுகையில், "ஜப்பான் கடல் எல்லையில் சீனக் கப்பல்கள் அத்துமீறுவது தொடர்பாக சீனத் தூதரிடம் கடுமையாக வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த வெறுப்பூட்டும் செயல்கள் தொடர்வதால், இருநாடுகளும் மேற்கொண்டுள்ள அமைதி முயற்சிக்கு பங்கம் ஏற்படும் என்றார்.

# 13 ஆம் திருத்தம் அகற்றப்பட்டால் சிங்களம் மட்டுமே அரச கரும மொழியாகும்

## சிரேஸ்ட சட்டத்தரணி புஞ்சிகேவா

(யாழ்ப்பாணம்)

நாட்டில் தீவிர அரசியல் வாதிகளிடத்தில் இருந்தும் அரசிடம் இருந்தும் 13 ஆவது அரசியல் சீர்திருத்தச் சட்டம் ரத்துச் செய்யப்படவேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டு வருகின்றது.

அவ்வாறு 13 ஆவது அரசியல் சீர்திருத்தச் சட்டம் இரத்துச் செய்யப்படுமேயானால் அரச கருமமொழியாகச் சிங்கள மொழியே அமையும் அது கடந்தகால மோதல் சூழ்நிலையை மீளவும் தோற்றுவிக்கும் என்று தென்னிலங்கை சிரேஷ்ட சட்டத்தரணி புஞ்சித கேவா தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை யாழ். நாவலர் வீதியில் அமைந்துள்ள தியாகிகள் அறக்கொடை நிலையத்தில் நடைபெற்ற அரச கரும மொழியின் அமுலாக்கல் சம்மந்தமான சிவில் சமூகத்தினருக்கான பயிற்சிப் பட்டறை நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில் ஆட்சிக்கு வந்த எந்த ஒரு அரசாங்கமும் வடக்குக் கிழக்கு மக்களது பிரச்சினைகளில் கரிசனை எடுத்துத் தீர்த்துவைக்க முயலவில்லை. இதனால்தான் வடக்கு கிழக்கில் யுத்தம் தோன்றியது. என்றும் குறிப்பிட்ட அவர் சிங்களம் தமிழ் ஆகிய இரு அரசகரும மொழிகளின் அமுலாக்கம் தேவை. இதன் மூலமாகவே பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க முடியும் என்று அரசு உணர்த்தது. என்ன செய்வதென்று ஆராய்ந்து அரச கருமமொழி ஆணைக்குழுவினை நியமித்தது. இருந்தும் மொழி அமுலாக்கம் திருப்திகரமாக அமையவில்லை. அதனால் தொடர்ந்து கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்த அந்த ஆணைக்குழுவும் அரச கரும மொழி அமுலாக்கம் தேவை என்பது குறித்துத் தெட்டத்தெளிவாகப் பரிந்துரைத்துள்ளது.

பொலிஸ் நிலையங்களில் தமிழ் தெரிந்த பொலிஸார் சேவையில் ஈடுபட்டிருக்க வேண்டும். அமைச்சுக்களில் தமிழ் பரீட்சயம் மிக்க ஒருவர் கடமையில் இருக்க வேண்டும் என்றும் பாடசாலைகளில் தமிழ் சிங்களம் கற்பிக்கப்பட வேண்டும். மூன்று மொழிகளின் (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) அமுலாக்கம் பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தபோதும் இரண்டு அரச கரும மொழிகளிலேயே கரிசனை கொள்ளப்பட்டுள்ளது.

தற்போதைய சூழலில் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கு வாசுதேவ நாணயக்காரா அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கின்றார். அவர் அரச கரும மொழி அமுலாக்கம் குறித்து பல முற்போக்குக் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார். ஆனால் அவை அரசினால் நடைமுறைப்படுத்தப் படவில்லை இவ்வாறான சூழலில் தற்போது சில முற்போக்கு அரசியல் வாதிகளால் தெரிவிக்கப்படுவது போன்று 13 ஆவது அரசியல் சீர்திருத்தத்தை அரசாங்கம் இரத்துச் செய்யுமானால் மீண்டும் சிங்கள மொழியே அரச கரும மொழியாகக் கொள்ளப்படும். இது நாட்டில் மோதலுக்கு வழிவகுக்கும் என்றும் தெரிவித்த அவர் 13 ஆவது அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தின் பிரகாரம் சிங்களம் தமிழ் ஆகிய இருமொழிகளும் அரச கரும மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. இதில் தமிழ்மொழி அமுலாக் கலே பிரச்சினைக்குரியதாக இருந்து வருகின்றது. எனவே இந்த 13 ஆவது திருத்தச் சட்டம் இரத்துச் செய்யப்படுமா னால் மீண்டும் நாட்டில் மோதல் சூழ்நிலைகளுக்கு வழிவகுத்துச் செல்லும் என்றும் சிரேஷ்ட சட்டத்தரணி புஞ்சிகேவா தெரிவித்துள்ளார். (பா)

### ஐ.நா.மனித...

அகில கால மீளாய்வு அமர்வுகளில் 99 உறுப்பு நாடுகள் இலங்கை தொடர்பில் 210 பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இந்த 210 பரிந்துரைகளில் 100 பரிந்துரைகளை அரசாங்கம் ஏற்கனவே நிராகரித்துள்ளது.

அகில கால மீளாய்வு அமர்வுகளில் இந்தியா, ஸ்பெய்ன் மற்றும் பெனின் ஆகிய நாடுகள் இலங்கை தொடர்பில் வரைவு பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை நேற்று சமர்ப்பித்துள்ளது.

இதேவேளை, இந்தப் பரிந்துரைகள் தொடர்பில் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் இலங்கை அரசாங்கம் தன்னார்வ அடிப்படையில் சில உறுதிமொழிகளை வழங்க உள்ளதாக மனித உரிமை அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

### பிரதம...

நாடாளுமன்ற உறுப்பினர் கருஜயசூரிய தலைமையிலான குழுவினர் பிரதம நீதியரசருக்கு எதிராக அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்டுள்ள குற்றப் பிரேரணை நாட்டின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் என்றும் இதனை மீள்பரிசீலனை செய்வதற்கு வலியுறுத்துமாறும் கேட்டுக்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### சுகாதாரப்...

டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் பெண்கள் அமைப்பு ஒன்று ஈடுபட்டிருந்த வேளை மதுபோதையில் காணப்பட்ட சுமார் 35 வயதுடைய நபர் ஒருவர் பெண்களுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டதாகவும், இதனையறிந்த குறிப்பிட்ட சுகாதாரப் பரிசோதகர் அப்பகுதிக்கு வந்தபோது அவரை மேற்படி நபர் தாக்கியதாகவும் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளார். தாக்கிய நபர் மது போதையில் இருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதுபற்றிக் கோப்பாய் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து பரிசோதகரைத் தாக்கிய நபர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார். (137)

### கொழும்பில்...

அரசுக்கு இரகசிய அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளது. இந்தியாவை சுற்றி இலங்கை உள்ளிட்ட அனைத்து நாடுகளிலும் பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. தமது செயற்பாடுகளைத் தீவிரப்படுத்தி இருப்பதாக இந்திய வெளியுறவுக் கொள்கை வகுப்பு அமைப்பான றோ தனது அறிக்கையில் எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

இரு வாரங்களுக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட இந்த அறிக்கையில் இந்தியாவில் நாசவேலைகளை செய்வதற்காக அயல் நாடுகளான நேபாளம், வங்கதேசம், இலங்கை, மியான்மர் ஆகிய நாடுகளில் நிலைகொண்டு இந்தியாவை சுற்றிவளைக்கும் நோக்கில் நாசவேலை குழுவினருக்கு மறைவு இடங்களை ஐ.எஸ்.ஐ. உருவாக்கிக் கொடுத்து வருகிறது.

நேபாளம் மற்றும் வங்கதேசத்தில் இதற்கான வாய்ப்புகள் குறைந்து போனதால் அண்மைக்காலமாக இலங்கை மற்றும் மியான்மரை பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறது ஐ.எஸ்.ஐ. என்று அதில் கூறப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இந்தியாவை சுற்றி அனைத்து பகுதிகளில் இருந்தும் தாக்குதல் தொடுக்கக் கூடிய யுக்தியுடனேயே இத்தகைய ஏற்பாட்டை ஐ.எஸ்.ஐ. செய்திருப்பதாகவும் இதன் ஒரு பகுதியே அண்மையில் தமிழகத்தில் கைது செய்யப்பட்ட தமீம் அன்சாரி விவகாரம் என்றும் றோ அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் இலங்கையில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் தமீம் அன்சாரி வழக்கில் குற்றம்சாட்டப்படுகிற சித்திக் இன்னமும் பணி புரிகிறார் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### யாழிலில்...

ஊக்கப்படுத்தும் அவர்கள் உற்பத்தி செய்யும் மின் சக்தியை நாட்டின் தேவை கருதி அரசாங்கம் கொள்வனவு செய்யும். இந்தத் தனியார் துறையினரின் நடவடிக்கைகளுக்குத் தேவையான கடன் வசதிகளை வங்கியின் ஊடாகப் பெற்றுக்கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கும். அத்துடன் சூரிய மின்கலங்கள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுமானால் அவற்றிற்கான வரி விலக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும். அவ்வாறான நடைமுறை ஏற்கனவே இருந்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை யாழ். மாவட்டத்தில் அடிக்கடி மின்தடை ஏற்படுவது குறித்தும் அண்மையில் வடமராட்சிப் பகுதியில் மின் கேபிள் அறுந்து வீழ்ந்து மின் ஒழுக்குக் காரணமாக மாணவன் ஒருவன் பலியாகியதற்கு இழப்பீடு ஏதாவது மின்சார சபையினால் வழங்கப்படும் என்றும் வினாவப்பட்டதற்குப் பதிலளித்த அமைச்சர் சம்பிக்க ரணவக்க யாழ். மாவட்டத்தில் மின் இணைப்பு வேலைகளின் பொருட்டும், வீதி அபிவிருத்திப் பணிகளின் பொருட்டுமே மின் தடைப்படுகின்றது. இதற்கான அறிவிப்புக்களும் வெளியிட்டதின் பிற்பாடு அது நடைபெறுவதாகவும் அதற்கு அப்பாற்பட்டு வேறு ஏதாவது மின் தடை இருந்தால் தெரிவிக்குமாறும் கேட்டுக் கொண்டார். அத்துடன் குறித்த மாணவனின் மரணம் குறித்து இலங்கை மின்சார சபை விசாரணை மேற்கொள்ளும். அதன் பின்னர் இழப்பீடு குறித்து தீர்மானிக்கும் என்றும் பதிலளித்தார்.

இதேவேளை யாழ்ப்பாண மாவட்டத்திற்கான மின்தேவை 2013 இல் பூர்த்தி செய்வதற்கு இலங்கை மின்சார சபை நடவடிக்கை எடுத்து வருவதாகவும் இந்த மாவட்டத்தின் கிராமங்களுக்கான மின்விநியோகத் திட்டங்களுக்கு 2009 இல் 940 மில்லியன் ரூபாவும், 2010 இல் 157 மில்லியன் ரூபாவும் 2011 இல் 76 மில்லியன் ரூபாவும் அந்த ஆண்டில் மேலும் 315 மில்லியன் ரூபா மேலதிகமாகவும், 2012 இல் 422 மில்லியன் ரூபாவும் அந்த ஆண்டில் மேலதிகமாக 342 மில்லியன் ரூபாவும் இலங்கை மின்சார சபையினால் செலவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் கிளிநொச்சியில் இருந்து சுன்னாகத்திற்கான லக்ஷபானா மின் இணைப்பு வேலைகள் 3.2 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டிருப்பதாகவும் மின்சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கொழும்பு வர்த்தக கைத்தொழில் சம்மேளனத்தின் தலைவர் குமார் மல்லிமராட்சி, வடமாகாண இலங்கை மின்சார சபைப் பொது முகாமையாளர் பிரியந்த குணதிலக, யாழ்ப்பாணத்தின் தொழில் சம்மேளனத்தின் தலைவர் பூரணச் சந்திரன் மற்றும் வர்த்தகக் கைத்தொழில் நிறுவனங்களின் பிரதி நிதிகள் பொது அமைப்பின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (பா)

# டுபாயிலிருந்து மசகு எண்ணை நெருக்கடிக்குக் கிடைத்தது தீர்வு

ஈரானிடமிருந்து மசகு எண்ணை பெறப்படுவது நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து டுபாயில் இருந்து மசகு எண்ணையை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

டுபாயிலிருந்து 75,000 மெற்றிக்தொன் மசகு எண்ணெயை ஏற்றிய கப்பல் ஒன்று கொழும்பு துறைமுகத்தை நேற்று திங்கட்கிழமை வந்தடைந்துள்ளதாகப் பெற்றோலிய வளத்துறை அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். இந்நிலையில், சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மீண்டும் இன்று முதல் செயற்படுமெனவும் அவர் கூறினார்.

# இலங்கையில் இன ஐக்கியம்; மீளாய்வு செய்கிறது கனடா

யுத்தத்துக்குப் பிந்திய இல்ங்கையில் இனநல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளைப் பேணும் விடயங்களில் இதுவரை ஏற்பட்டிருக்கும் முன்னேற்றங்கள் குறித்து இலங்கைக்கான கனேடிய நாடாளுமன்றக் குழு மீளாய்வு செய்யவுள்ளது. இவ்விடயம் தொடர்பாகத் தாம் இலங்கையில் உள்ள களநில வரங்களை ஆராய்ந்து வருவதாகவும் கனேடிய நாடாளுமன்றக் குழு தெரிவித்துள்ளது.

2009 ஆம் ஆண்டு இறுதிப் போரின் போது காணமற்போனவர்களிற்கான பதிலைச் சொல்லியே ஆகவேண்டும் என்பதில் உள்ள அழுத்தத்தை இப்போது தான் அரசு புரிந்து கொண்டுள்ளது என்றும் கனடா ஐக்கிய நாடுகள் சபை மற்றும் நேச நாடுகளோடு இணைந்து மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அதற்கான தேவையை இலங்கை அரசுக்கு ஏற்படுத்தியுள்ளதாகவும் அக்குழு தெரிவித்துள்ளது.

வடக்கில் இராணுவப் பிரசன்னம் குறைக்கப்பட வேண்டும், தமிழர்கள் சம பிரஜைகளாக வாழக்கூடிய வழியேற்படுத்தப்பட வேண்டும் போன்ற விடயங்களில் ஏதேனும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா என்பதை தாங்கள் மீளாய்வு செய்யப் போவதாக அவர் எச்சரித்துள்ளார். மேற்குறிப்பிட்ட விவகாரங்களில் கனடாவிற்கு திருப்தியான முடிவு ஏற்படாதபட்சத்தில் கனடியப் பிரதமர், இலங்கையில் அடுத்தவருடம் இடம்பெறும் பொதுநலவாய மாநாட்டில் பங்குபற்றுவது தொடர்பான தனது நிலைப்பாட்டை மீளாய்வு செய்யமாட்டார் என அவர் தெரிவித்துள்ளார்.கனடிய மனிதவுரிமை மையத்தின் அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# கோத்தாபய ராஜபக்ஷ தலைமையில் அமைச்சர்கள் குழு தென்னாபிரிக்காவுக்கு


(கொழும்பு)

பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ மற்றும் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் உட்பட்ட அமைச்சர்கள் பலர் தென்னாபிரிக்காவுக்கு இரகசியப் பயணமொன்றை மேற்கொண்டுள்ளதாக லங்கா நியூஸ்வெப் ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது. இரண்டு வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற இந்தப் பயணத்தின் போது கோத்தாபய ராஜபக்ஷ தென்னாபிரிக்க அரசின மூத்த அதிகாரிகளையும், இராணுவ அதிகாரிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இந்தப் பயணம் இரகசியமாக வைக்கப்பட்டதுடன் மற்றும் அதன நோக்கம் குறித்து இந்தியாவுக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

கோத்தாபய ராஜபக்ஷவின் இந்தப் பயண்த்தை அடுத்து, இலங்கை அரசின் அமைச்சர்கள் நிமால் சிறிபால டி சில்வா, அனுர பிரியதர்சன யாப்பா, நியோமல் பெரேரா, விநாயகமூர்த்தி முரளிதரன், பைசர் முஸ்தபா, ஜனக பண்டார ஆகியோரைக் கொண்ட குழு கடந்த ஒக்ரோபர் 27 ஆம் திகதி ஒரு வாரகாலப் பயணமாக தென்னாபிரிக்கா சென்றுள்ளதாகவும் தகவல் வெளியிட்டுள்ளது.

# இலங்கையில் மரண தண்டனையை சிறைத்தண்டனையாக மாற்றத் திட்டம்



(கொழும்பு)

இலங்கையில் மரண தண்டனை அமுல்படுத்தல் தொடர்பில் ஆராய்வதற்காக ஒரு குழுவை நியமிக்க உத்தரவிட்டுள்ளேன் என நீதி அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

மேல் நீதிமன்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் இக்குழுவை நியமிக்கும் படி நீதி அமைச்சின் செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளேன். எனினும் மரண தண்டனையை மீண்டும் நடைமுறைப்படுத்துவதா, இல்லையா என்பதை தீர்மானிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கே உண்டு.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் பேர்னார்ட் சவேஜ் மற்றும் அமைச்சர் ஹக்கீம் ஆகியோருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று நீதி அமைச்சில் இடம்பெற்றது. இதன் போதே அமைச்சர் ஹக்கீம் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

விரைவில் நியமிக்கப்படவுள்ள மேல் நீதிமன்ற நீதிபதியொருவரின் தலைமையிலான இக்குழுவில் சட்டமா அதிபர் திணைக்களம், நீதி அமைச்சு ஆகியவற்றின் உயர் அதிகாரிகள் மற்றும் உளவியல் நிபுணர் ஒருவரும் இடம்பெறுவார்.

இந்த குழு கூடி ஆராய்ந்து விதந்துரைக்கும் விடயங்களைப் பொறுத்து மரண தண்டனையை சிறை தண்டனையாக மாற்றுவது பற்றி பரிசீலிக்கப்படும் என்றார். இதன்போது கருத்துத் தெரிவித்த ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர், தற்பொழுது பல நாடுகளில் மரண தண்டனை நிறைவேற்றப் படுவதில்லை என்றார்.

சவூதி அரேபியாவில் கொலைக்குற்றம் சாட்டப்பட்டு, மரண தண்டனையை எதிர்நோக்கியுள்ள ரிஸானா நபீக் பற்றியும் இந்த சந்திப்பில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு விஜயம் செய்து சட்ட முறைமை மற்றும் நீதிச் சீர்திருத்தங்கள் பற்றி கண்டறிவதற்கான வாய்ப்பை தமது தலைமையிலான இலங்கைத் தூதுக் குழுவிற்கு அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் ஏற்படுத்தித் தருமாறு அமைச்சர் ஹக்கீம் விடுத்த வேண்டுகோளை தூதுவர் பேர்னார்ட் சவேஜ் ஏற்றுக்கொண்டதோடு, அது தொடர்பான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வதாகவும் உறுதியளித்தார்.

இலங்கையில் மரண தண்டனை இறுதியாக 1976 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 23 ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது. 2002 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் திகதி வரை மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தவர்களுக்கு ஜனாதிபதியால் மன்னிப்பு வழங்கப்பட்டு ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது.

கடந்த ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதி வரையில் பெண்கள் மூவருக்கும் 377 ஆண்களுக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன், தமக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனைக்கு எதிராக 453 ஆண்களும் 20 பெண்களும் மேன் முறையீடு செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# ஆயுர்வேத வைத்திய பட்டதாரிகள் 750 பேருக்கு தொழில் இல்லை

(கொழும்பு)


சுமார் 750 ஆயுர்வேத பட்டதாரி வைத்தியர்கள் தொழில் வாய்ப்பின்றி இருப்பதாகத் தொழில் வாய்ப்பற்ற ஆயுர்வேத பட்டதாரி வைத்தியர்கள் சங்கம் குறிப்பிடுகின்றது.

இவர்களுக்கான தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான திட்டம் அரசாங்கத்திடம் இல்லை என சங்கத்தின் தலைவர் ஆயுர்வேத வைத்தியர் சமிந்த நிரோஷன் தெரிவித்துள்ளார்.

ஆறு வருடங்கள் பல்கலைக் கழக கல்வியை பூர்த்தி செய்து பட்டம் பெற்றுள்ள ஆயுர்வேத வைத்தியர்கள், பல வருடங்களாக தொழிலுக்காகக் காத்திருக்க நேரிட்டுள்ளமை கவலைக்குரியது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கு மிகவும் பொருத்தமான ஆயுர்வேத வைத்தியத் துறையை விஸ்தரித்து பட்டதாரிகளுக்கு நியமனங்களை வழங்குமாறு தொழில் வாய்ப்பற்ற ஆயுர்வேத பட்டதாரி வைததியர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக சுதேச மருத்துவ அமைச்சர் சாலிந்த திஸநாயக்கவிடம் வினவியபோது நிலவும் வெற்றிடங்களுக்கு அமைவாக ஆயுர்வேத வைத்தியர்களுக்கான நியமனம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.



2013 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்ட பிரேரணைகள் மற்றும் முன்மொழிவுகளை ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான மகிந்த ராஜபக்ஷ கண்காணிப்பதைக் காணலாம்.

# குடும்பத்துடன் இணைந்தார் முதியவர்

(திருநெல்வேலி)

கைதடி முதியோர் இல்லத்தில் இருந்த முதியவர் ஒருவரை 3 வருடங்களின் பின்னர் அவரது பேரன் வந்து தன்னுடன் அழைத்துச் சென்றுள்ளார்.

பிள்ளைகள் இருந்தும் அவர்களினால் கவனிக்கப்படாமல் பராமரிப்பதற்கு எவருமற்றவராக அல்லற்பட்ட வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த பொன்னையா செல்வநாயகம் (வயது - 73) என்பவர் 2009 ஆம் ஆண்டிலிருந்து சாந்தி இல்லத்தில் இருந்துவந்தார்.

நேற்று வெளிமாவட்டத்தில் காப்புறுதி நிறுவனம் ஒன்றில் வேலை பார்க்கும் மேற்படி முதியவரின் பேரன் முதியோர் இல்லத்திற்கு வந்தார். தனது தாத்தா எங்கிருக்கிறார் என்பது தனக்கு அண்மையில்தான் தெரியும் எனவும் அவரைத் தன்னுடன் அனுப்பி வைக்குமாறும், தான் அவரைக் கூட்டிச் சென்று வைத்திருக்க விரும்புவதாகவும் இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரனிடம் தெரிவித்தார்.

முதியவர் அழைக்கப்பட்ட போது வந்திருப்பவர் தனது பேரப்பிள்ளை என்பதை உறுதிப்படுத்தினார்.

உரிய விசாரணைகளின் பின்னர் முதியவர் அவரது பேரனுடன் இணைக்கப்பட்டதையடுத்து பேரனைக் கட்டியணைத்தவாறு அன்போடு சென்ற அவரை இல்ல அத்தியட்சகர், உத்தியோகத்தர்கள், தாதியர், ஊழியர்கள் அனைவரும் விடைகொடுத்து அனுப்பிவைத்தனர். (137)

# பணிப்பெண்களை அமர்த்த கடுமையடைகிறது சட்டம்

இலங்கை பணிப்பெண்களை ஐக்கிய அரபு இராச்சியத்தில் பணிக்கு அமர்த்துபவர்களுக்காக புதியதும் கடுமையானதுமான சட்டதிட்டங்கள் அமுல்படுத்தப் பட்டுள்ளதாக ஐக்கிய அரபு இராச்சியத்திற்கான இலங்கைத் தூதரகம் தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தப் புதிய திட்டத்திற்கமைய இலங்கை பணிப்பெண்களுக்கு மாதாந்தம் 800 திர்ஹாம்கள் வேதனமாக வழங்கப்படுவதுடன் அவர்களுக்கான உறைவிடம் விமானப் பயணச்சீட்டு, மருத்துவக் காப்புறுதி என்பன வழங்கப்பட வேண்டும்.

இதுதவிர, பணிப்பெண்களுக்கு உறங்குவதற்கான தனி விடுதி வழங்கப்படுவதுடன், பாதுகாப்பு வைப்பாக 1000 அமெரிக்க டொலர்கள் வைப்பிடப்படவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சட்டதிட்டங்களுக்கு அமைய ஐக்கிய அரபு இராச்சியத்தில் வேலை கொள்வோர் கட்டுப்படத் தவறும் பட்சத்தில் அங்கு பணியாற்ற அனுமதி வழங்கப்படமாட்டாது என்று தூதரகத்தின் முதலாவது செயலாளர் எம்.ஈ.ஜி.சமரவீர சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, ஐக்கிய அரபு இராச்சியத்தில் 3 இலட்சம் இலங்கையர்கள் பணியாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.



பல கோரிக்கைகளை முன்வைத்து தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்திலுள்ள தாதியர்கள் நேற்று களுபோவில வைத்திய சாலைக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதைக் காணலாம்.

## கஞ்சா கடத்த முயன்றவர் கைது

தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு பத்தரைக் கிலோ கஞ்சா கடத்த முயன்றவர் இராமேஸ்வரத்தில் கைது செய்யப்பட்டார்.

இராமேஸ்வரம் ராஜகோபால் நகர் ராமநாதன் (வயது - 40) என்பவர் மதுரையில் இருந்து இராமேஸ்வரத்திற்கு ரயிலில் வந்துள்ளார்.

போதையில் தூங்கிய இவரது பையை, ரயில்வே பொலிஸார் சோதனையிட்டனர். பத்தரைக் கிலோ கஞ்சா (சர்வதேச மதிப்பு 5 இலட்ச ரூபாய்) இருந்தது. கைது செய்யப்பட்ட இவர் தகவல் வெளியிடுகையில்,

தமிழகத்தின் தேனியில் கஞ்சாவைப் பெற்று இராமேஸ்வரம் வியாபாரியிடம் வழங்குவேன். அவர் படகில், இலங்கைக்கு கடத்தி விடுவார் எனத் தெரிவித்தார்.

# இந்திய மீனவர்களின் தாக்குதல் குறித்து ஆராய்வு

(கொழும்பு)

இந்திய மீனவர்கள் தொடர்ச்சியாக தாக்கப்படுவதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுத் தொடர்பில் கவனம் செலுத்துவதாக இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது. இதற்காக இலங்கை கடற்பரப்பில் மேலும் பாதுகாப்பை அதிகரிப்பதற்கு கவனம் செலுத்தப்படவுள்ளதாகக் கடற்படை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை மீனவர்களுக்கு சுதந்திரமாக மீன் பிடிப்பதற்கான சூழல் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதாகக் கடற்படை குறிப்பிட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இந்து சமுத்திரக் கடற்பரப்பில் வைத்து தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினால் தாக்குதலுக்கு உள்ளானதாக இந்திய ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்போது தமிழக மீனவர்களின் 30 படகுகளிற்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக அத்தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

# புதிய வாகனப் பதிவு 38 சதவீதம் வீழ்ச்சி

(கொழும்பு)

புதிய வாகனப் பதிவுகள் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்துடன ஒப்பிடுகையில் 38.7 சதவீதம் வீழ்ச்சி கண்டுள்ளது. வாகன இறக்குமதி வரிகள் அதிகரிக்கப்பட்டுள்ளதால் இந்த வருடம் ஆகஸ்ட் மாதத்தில் புதிய வாகனப் பதிவுகள் 27,766 ஆக காணப்பட்டன.

இதே மாதத்தில் கார்களின் இறக்குமதி 62.8 சதவீதம் வீழ்ச்சி கண்டுள்ளதுடன், கார்களின் எண்ணிக்கை 1880 ஆகக் குறைந்தது. முச்சக்கரவண்டிகள் 38.7 சதவீதத்தாலும் மோட்டார் சைக்கிள்கள் 36.6 சதவீதத்தாலும் வீழ்ச்சி கண்டுள்ளன.

பேருந்துகளின் இறக்குமதிகளிலும் 38.7 சதவீத வீழ்ச்சி கண்டுள்ளது. புதிய பேருந்துகளின் பதிவுகள் 277,666 ஆக குறைந்தது.

இதேசமயம் இந்த வருடம் ஜனவரியிலிருந்து ஆகஸ்ட் வரையான காலப்பகுதியில் புதிய வாகனப் பதிவு 14.2 சதவீதம் குறைந்து புதிய பேருந்துகளின் பதிவு 289,475 ஆகியது.

இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கு இந்த வருடம் ஆரம்பத்தில் அரசாங்கம் இறக்குமதி வரியை 100 சதவீதம் விதித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 நவம்பர் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.